# ஊரக வளர்ச்சி மற்றும்
# ஊராட்சித் துறை

# கொள்கை விளக்கக் குறிப்பு
## 2022 - 2023

### மானியக் கோரிக்கை எண். 42


## திரு. கேஆர். பெரியகருப்பன்
ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்



©
தமிழ்நாடு அரசு
2022

# பொருளடக்கம்


| வ. எண். | பொருள் | பக்கம் எண் |
|---|---|---|
| 1. | முன்னுரை | 3 |
| 2. | தமிழ் நாட்டில் ஊராட்சி நிர்வாக அமைப்புகள் | 13 |
| 2.1 | ஊராட்சி அமைப்புகளின் வரலாறு | 15 |
| 2.2 | மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புக்களின் அதிகாரம் மற்றும் செயல்பாடுகள் | 21 |
| 2.3 | ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் நிதி ஆதாரங்கள் | 32 |
| 2.4 | மின்ஆளுமை முன்னெடுப்புகள் | 49 |
| 2.5 | ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல்கள் | 58 |
| 2.6 | ஊராட்சி நிர்வாகத்தில் மகளிரின் பங்கு | 59 |
| 3. | மாநில அரசுத் திட்டங்கள் | 61 |
| 3.1 | அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் – II | 63 |
| 3.2 | அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் 2022-23 ஆம் ஆண்டில் ஊரக நூலகங்களைப் புதுப்பித்தல். | 71 |

| வ. எண். | பொருள் | பக்கம் எண் |
|---|---|---|
| 3.3 | பெரியார் நினைவு சமத்துவபுரம் | 75 |
| 3.4 | சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் | 79 |
| 3.5 | நமக்கு நாமே திட்டம் | 81 |
| 3.6 | ஊரக உட்கட்டமைப்பு – சாலைகள் | 84 |
| 3.7 | தமிழ்நாடு ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் (TNRRIS) | 86 |
| 3.8 | நபார்டு ஊரக உட்கட்டமைப்பு – வளர்ச்சி நிதி (RIDF) மூலமாக சாலைகள் அமைத்தல் | 88 |
| 3.9 | பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் (SIDS) | 90 |
| 3.10 | சமூக பொருளாதார மேம்பாட்டுத் திட்டம் (SEDP) | 91 |
| 3.11 | முன் மாதிரி கிராம விருது | 91 |
| **4.** | **ஒன்றிய அரசுத் திட்டங்கள்** | 93 |
| 4.1 | மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் (MGNREGS) | 95 |
| 4.2 | "அனைவருக்கும் வீடு" – பிரதம மந்திரி குடியிருப்பு திட்டம் (ஊரகம்) | 119 |

| வ. எண். | பொருள் | பக்கம் எண் |
|---|---|---|
| 4.3 | ஜல் ஜீவன் மிஷன் | 128 |
| 4.4 | நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் (MPLADS) | 137 |
| 4.5 | நாடாளுமன்ற உறுப்பினர் மாதிரி கிராமத் திட்டம் (SAGY) | 138 |
| 4.6 | பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம் (PMGSY) | 140 |
| 4.7 | தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்) (SBM–G) | 146 |
| 4.8 | ஷியாம பிரசாத் முகர்ஜி ரூர்பன் இயக்கம் | 155 |
| 4.9 | தேசிய கிராம சுயாட்சி திட்டம் (RGSA) | 157 |
| 4.10 | கண்காணித்தல் | 163 |
| **5.** | **ஊரக வளர்ச்சி துறையின் பணியமைப்பு** | 169 |
| 5.1 | பணியமைப்பு | 171 |
| 5.2 | அரசிதழ் பதிவு பெற்ற பணியமைப்பு | 171 |
| 5.3 | பொறியியல் பணியமைப்பு | 173 |

| வ. எண். | பொருள் | பக்கம் எண் |
| --- | --- | --- |
| 5.4 | அரசிதழ் பதிவு பெறாத பணியாளர் பணியமைப்பு | 176 |
| **6.** | **வறுமை ஒழிப்பு மற்றும் வாழ்வாதார இயக்கங்கள்** | 183 |
| 6.1 | சுய உதவிக் குழு இயக்கம் | 183 |
| 6.2 | தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் | 184 |
| 6.3 | தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் (TNSRLM) | 187 |
| 6.4 | வாழ்வாதார மேம்பாடு | 203 |
| 6.5 | மகளிர் சுய உதவிக்குழுத் தயாரிப்புகளை சந்தைப்படுத்துதல் | 208 |
| 6.6 | இளைஞர்களுக்கான திறன் பயிற்சி | 210 |
| 6.7 | சமூக செயல்பாடுகள் | 213 |
| 6.8 | தேசிய ஊரக பொருளாதார புத்தாக்கத் திட்டம் (NRETP) | 214 |
| 6.9 | வாழ்ந்து காட்டுவோம் திட்டம் (VKP) | 217 |

| வ. எண். | பொருள் | பக்கம் எண் |
|---|---|---|
| 6.10 | தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கம் (TNULM) | 225 |
| 6.11 | புதிய முயற்சிகள் | 230 |
| 6.12 | 2022 – 23 ஆண்டுகளில் செயல்படுத்தப்பட உத்தேசிக்கப்பட்டுள்ள திட்டங்கள் | 235 |
| **7.** | **பயிற்சி மற்றும் திறன் மேம்பாடு** | 237 |
| 7.1 | திறன் மேம்பாடு | 239 |
| 7.2 | மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம் (SIRD&PR) | 240 |
| 7.3 | மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்கள் (RIRD&PR) | 247 |
| 7.4 | ஊராட்சிகளுக்கான மாவட்ட வள மையங்கள் (DRCP) | 251 |
| **8.** | **ஊரக வளர்ச்சித் துறையின் நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகள் (SDG)** | 255 |
| **9.** | **வரவு செலவுத் திட்டம் 2022–23** | 260 |
| **10.** | **முடிவுரை** | 262 |

# 1. முன்னுரை

**முன்னுரை**

*"ஒருவர் வெளிநாடுகளுக்குச் சென்று ஒரு கிராமத்தைப் பார்த்தால், அங்கே நகரத்துக்கும் கிராமத்துக்கும் வித்தியாசம் தெரியாத அளவிற்கு கிராமங்களிலே அழகான வீடுகள், தெருக்கள், கடைகள், உணவு விடுதிகள், தங்குமிடங்கள், இரயிலடிகள், பேருந்து நிலையங்கள், சாலைகள் இத்தனையும் நகரத்திற்கு நிகராக கிராமங்களில் இருக்கிறது. அதனால் கிராமத்து மக்கள் நகரத்துக்கு செல்ல வேண்டும், அங்கே குடியேற வேண்டும் என்ற ஆசையால் தூண்டப்படுவதில்லை. அதனால் நகரங்களில் நெருக்கடி ஏற்படுவதில்லை. கிராமங்களே நகரத்தைப் போல உருவாகும் பொழுது, கிராம மக்களுக்கு நகர வாழ்க்கை தேவையில்லாமல் போய்விடுகிறது."*

**– கலைஞர் மு.கருணாநிதி,**
**மாண்புமிகு முன்னாள் தமிழ்நாடு முதலமைச்சர்.**

புதுமையான ஊரக வளர்ச்சி திட்டங்களை உருவாக்கி திறம்பட செயல்படுத்தியதில் தேசிய அளவில் தமிழ்நாடு முன்னோடி மாநிலமாக திகழ்கிறது. இத்துறையின் திட்டங்கள் மற்றும் கொள்கைகள் சமூக நீதி, சமச்சீர் பங்கீடு, அனைவரையும்

உள்ளடக்கிய வளர்ச்சி ஆகியவற்றின் அடிப்படையில் உருவாக்கப்படுகிறது. மாநில அரசின் தொழில் திறன்மிக்க ஊரக வளர்ச்சி பணியாளர்கள், மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புடன் இணைந்து செயல்பட்டு, மத்திய, மாநில மற்றும் உலக வங்கி உதவியுடன் செயல்படுத்தப்படும் ஊரக வளர்ச்சி துறையின் அனைத்து திட்டங்களையும் செயல்படுத்த உறுதி பூண்டுள்ளார்கள்.

**மாண்புமிகு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின்** அவர்களின் உத்வேகமிக்க தலைமையிலான இந்த அரசு, **மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி** அவர்களின் வழியை பின்பற்றி மகாத்மா காந்தி கண்ட கனவான தன்னிறைவு பெற்ற கிராமங்களை உருவாக்க தொடர்ந்து முயற்சி செய்து வருகிறது. ஊரக பகுதிகளில் நீடித்த வளர்ச்சிக்கான பொது சொத்துக்களை உருவாக்குதல் மற்றும் வாழ்வாதார தேவைகளை மேம்படுத்த, ஏனைய துறைகளான வேளாண்மை, கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளம், ஊரக தொழில், நீராதாரம் மற்றும் பிற துறைகளுடன் இணைந்து செயல்பட ஊரக வளர்ச்சி

மற்றும் ஊராட்சித் துறை முக்கிய மையமாக உள்ளது. ஊரக மற்றும் நகர்புறங்களுக்கு இடையேயான வருமானம் மற்றும் கட்டமைப்பு வசதிகளில் உள்ள இடைவெளியை சரிசெய்யும் விதத்தில் ஊரக வளர்ச்சி திட்டங்கள் முன்னுரிமை அடிப்படையில் முடுக்கிவிடப்பட்டு செயல்படுத்தப்படுகின்றது.

**"அனைவருக்கும் வீடு"** மற்றும் **"குடிசையில்லா தமிழ்நாடு"** என்பது அரசின் முதன்மை நோக்கமாக உள்ளது. பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டம் (ஊரகம்) கீழ் அலகுத் தொகையாக ரூ.1,20,000/- 60:40 (ஒன்றிய மற்றும் மாநில பங்கு தொகை) என்ற விகிதாசாரத்தில் வழங்குகிறது. தமிழ்நாடு அரசு, கூடுதல் மானியமாக ரூ.1,20,000/- யை கான்கிரீட் மேல்தளம் அமைப்பதற்காக ஒன்றிய அரசால் நிர்ணயிக்கப்பட்ட அலகுத் தொகைக்கு மேல் வழங்குகிறது. இது நாடு தழுவிய அளவில் அதிகமான ஒன்றாகும்.

ஒரு மாவட்டத்தில் கிராம ஊராட்சிகளிடையிலும், ஒரே கிராம ஊராட்சியிலுள்ள குடியிருப்புகளுக்கும் சமச்சீரான வளர்ச்சியை ஏற்படுத்தும் தனித்துவமான

திட்டமாக அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம்–II மீண்டும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. கிராமங்களிலுள்ள நீராதார அமைப்புகளை மேம்படுத்துதல், மேம்படுத்தப்பட்ட சாலை மற்றும் தெருக்களை அமைத்தல், நூலகங்கள், சமத்துவ மயானங்கள் ஏற்படுத்துதல் போன்ற கிராமத்திற்கு தேவையான அடிப்படை வசதிகளை ஏற்படுத்திட இத்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் அனைத்து கிராம ஊராட்சிகளிலும் ஐந்தாண்டுகளில் படிப்படியாக செயல்படுத்தப்படும்.

சமூக நல்லிணக்கம் மற்றும் சமூகநீதியை ஏற்படுத்தும் நோக்கில் ஏற்கனவே இந்த அரசால் செயல்படுத்தப்பட்ட முன்னோடி திட்டமான பெரியார் நினைவு சமத்துவபுரம் மீண்டும் புதுப்பொலிவுடன் செயல்படுத்தப்படும். இதனால் சமத்துவபுரங்களில் வசிக்கும் மக்கள் பயனடையும் வகையில் பழுதடைந்த வீடுகளை மேம்படுத்தவும் மற்றும் போதுமான அடிப்படை வசதிகளும் செய்து தரப்படும்.

பொதுமக்கள், வளர்ச்சி திட்டங்களில் பங்களிப்பு வழங்கி ஈடுபடுவதை ஊக்குவிக்கும் வகையில், முக்கிய தேவைகளில் ஏற்படும் இடைவெளியை குறைக்கும் வகையிலும், மக்கள் பொது சொத்துக்களை பாதுகாக்க, தங்களுடைய பங்களிப்பை வழங்கும் வகையிலும், **"நமக்கு நாமே திட்டம்"** புதிய அம்சங்கள் மற்றும் கூடுதல் ஒதுக்கீட்டுடன் மீண்டும் செயல்படுத்தப்படுகிறது.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் பொது சொத்துக்களை உருவாக்கி நீராதாரங்களை பாதுகாத்தல், ஊரக பகுதிகளில் குடிநீர், உணவு மற்றும் கால்நடைகளுக்குத் தீவனம் அதிகமாக கிடைக்க வழிவகை செய்கிறது. இத்திட்டத்தின் மூலம் உருவாக்கப்படும் தனிநபர் சொத்துக்கள் ஊரக மக்களின், குறிப்பாக விவசாயிகளின் வாழ்வாதார மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கு முக்கிய பங்கு வகிக்கிறது.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம், பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம்,

ஜல் ஜீவன் இயக்கம், 15–வது நிதிக்குழு மானியம், மாநில நிதிக்குழு மானியம் மற்றும் இதர திட்டங்கள் மூலம் ஊரகப் பகுதிகளில் பள்ளிகள், அங்கன்வாடி மையங்கள், ஊரகச் சந்தைகள், உணவு கிடங்குகள் போன்றவற்றிக்கு உட்கட்டமைப்புகளை ஏற்படுத்துதல் மற்றும் சாலைகள், தெருவிளக்குகள், குடிநீர் வழங்குதல், சுகாதாரம் போன்ற அடிப்படை வசதிகளை செய்தல் இத்துறையின் முக்கிய பணியாகும். பிரதம மந்திரி கிராமச் சாலைகள் திட்டம், தமிழ்நாடு ஊரகச் சாலை மேம்பாட்டுத் திட்டம், நபார்டு–ஊரக உட்கட்டமைப்பு வளர்ச்சி நிதி (RIDF) போன்ற திட்டங்கள் ஏற்கனவே உள்ள சாலை வசதிகளை மேம்பாடு செய்வதற்கும் மற்றும் நகர்ப்புற வளர்ச்சி மையங்களுடன் இணைப்பினை ஏற்படுத்தவும் வழிவகை செய்கிறது.

ஊராட்சிகளுக்கு வழங்கப்படும் 15–வது நிதிக்குழு மானியத்துடன் இணைந்து செயல்படுத்தப்படும் ஜல் ஜீவன் இயக்கத்தின் கீழ், செயல்படும் நிலையிலுள்ள குடிநீர் குழாய் மூலம் ஊரக

பகுதிகளில் வசிக்கும் தனிநபருக்கு நாள் ஒன்றுக்கு போதுமான அளவு 55 லிட்டர் குடிநீர் வழங்கும் வகையில், அனைத்து வீடுகளுக்கும் குடிநீர் இணைப்பு வழங்க இந்த அரசு உறுதி பூண்டுள்ளது. ஊரக பகுதிகளில் திட மற்றும் திரவ கழிவு மேலாண்மை திட்டத்தை செயல்படுத்தி, சுத்தமான, பசுமையான கிராமங்களை உருவாக்கும் நோக்கத்தில் இரண்டாம் கட்ட தூய்மை பாரத இயக்கம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் முக்கிய இரண்டு இயக்கங்களான தமிழ்நாடு ஊரக வாழ்வாதார இயக்கம், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் மற்றும் வாழ்ந்து காட்டுவோம் திட்டம் சமூகம் சார்ந்த வளர்ச்சி என்ற கருத்தில் வேரூன்றிய முக்கிய திட்டங்களாகி, ஏழை மக்களுக்கான நிறுவனங்களை உருவாக்குதல் மற்றும் நீடித்த வாழ்வாதாரங்களை

உறுதி செய்தல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு செயல்படுகிறது. ஏழைகளின் சமூக பொருளாதார நிலையினை மேம்படுத்துதல், விளிம்பு நிலை மக்கள் மற்றும் நலிவுற்ற நிலையிலுள்ள பெண்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினர் ஆகியோருக்கு அரசின் சேவைகள் கடைசி வரை சென்றடைய செய்வது இத்திட்டங்களின் முதன்மை நோக்கமாகும்.

இத்திட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்ட சமூகம் சார்ந்த நிறுவனங்கள் மற்றும் சமூக தொழில்முறை வல்லுனர்களின் வலைப்பின்னல், பொது சுகாதாரத் துறை, சமூக நலம் மற்றும் மகளிர் மேம்பாட்டுத் துறை, வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, வனத்துறை போன்ற பல்வேறு துறைகளின் திட்டங்களை ஒருங்கிணைத்து, ஏழை மற்றும் விளிம்பு நிலையிலுள்ள மக்களின் வாழ்வு மற்றும் வாழ்வாதாரத்தினை மேம்படுத்திட

முதுகெலும்பாக செயல்படுகின்றது. இத்திட்டங்கள் மகளிர் மேம்பாடு மற்றும் நலிவுற்ற பிரிவினரின் சமூக தரத்தை முன்னேற்றுவதில் தொடர் செயல்பாடு கொண்டவையாக அமையும்.

மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம் மாநில அளவிலான தலைமை பயிற்சி மையமாக உள்ளது. இந்நிறுவனத்தில் நேரடியாகவும் நிகழ்நிலை மூலமாகவும் பயிற்சிகள் வழங்க நவீன வசதிகள் செய்யப்பட்டுள்ளது. அலுவலர்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட ஊரக உள்ளாட்சி பிரதிநிதிகளுக்கு தலைமை பண்பு, ஆட்சித் திறன் மற்றும் புதிய முயற்சிகள் குறித்து பயிற்சி இந்நிறுவனத்தின் மையங்கள் மூலம் அளிக்கப்படுகிறது. அடிப்படை வசதிகள் மற்றும் திறம்பட சேவைகள் வழங்குவது குறித்து மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்கள், ஊராட்சிகளுக்கான மாவட்ட

வள மையங்கள் மற்றும் மாநில வள அலுவலர்கள், மாவட்ட மற்றும் வட்டார அளவில் பரப்புரை மற்றும் திறன் மேம்பாடு குறித்து பயிற்சி அளிக்கிறார்கள்.

இத்துறையின் மூன்று அங்கங்கள் தங்களுக்குள் ஒருங்கிணைந்தும் மற்றும் பிற துறைகளுடன் இணைந்தும் ஊரகவாழ் மக்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்தவும், தரமான சேவைகள், அடிப்படை உட்கட்டமைப்புகள், நீடித்த வாழ்வாதார வாய்ப்புகளை உருவாக்க உறுதி செய்யும் நோக்கில் செயல்படுகின்றன.

# 2. தமிழ்நாட்டில் ஊராட்சி நிர்வாக அமைப்புகள்

## 2.1. ஊராட்சி அமைப்புகளின் வரலாறு

தமிழக உள்ளாட்சி அமைப்புகள் பாரம்பரியமான பழம்பெரும் வரலாறு உடையவை. காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள உத்திரமேரூர் கல்வெட்டுக் குறிப்புகள் இதற்கு சான்றாகும். அந்த காலக்கட்டங்களில் சமுதாயக் குழுக்கள் தங்கள் பகுதிகளில் மேம்பாட்டிற்காக பல்வேறு செயல்திட்டங்களை மேற்கொள்ளும் கிராமக் குடியரசுகளைக் கொண்டதாக தமிழ்நாடு விளங்கியது. 10 மற்றும் 11–ஆம் நூற்றாண்டுகளில் சோழர்களின் ஆட்சிக் காலத்தில் இந்த பாரம்பரியம் அதன் சிகரத்தை எட்டியது. இதன்படி கிராமக் குழுக்கள் தங்களது வரையறுக்கப்பட்ட பகுதிகளில் வரி விதித்தல், சமூக வாழ்வை மேம்படுத்துதல் மற்றும் நீதி வழங்குவது போன்ற பொறுப்புகளை மேற்கொண்டு இருந்தன. இந்த கிராமக் குழுக்கள், சோழ ஆட்சியாளர்களுடன் சிறந்த நிர்வாக தொடர்பு கொண்டவைகளாக இருந்தன. கிராமக் குழுக்களுக்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதில் "குடவோலை முறை" எனப்படும் இரகசிய வாக்களிப்பு முறை பின்பற்றப்பட்டது. சோழர் ஆட்சியின் வீழ்ச்சிக்குப் பிறகு தமிழ்நாடு, கிராம சுயாட்சியின் சரிவையும், அதிகாரத்தை மையப்படுத்தும்

நிலப்பிரபுத்துவ நிர்வாக முறையில் உயர்வையும் சந்தித்தது. இம்முறை ஆங்கிலப் பேரரசின் நிர்வாக வசதிக்காக தலசுயாட்சி முறைகளை அறிமுகப்படுத்தும் வரையில் வழக்கில் இருந்தது.

ஆங்கிலேய ஆட்சிக்காலத்தில் 19–ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அப்போதைய பிரிட்டிஷ் இந்தியாவின் வைசிராய் ரிப்பன் பிரபு அவர்கள் தலசுய ஆட்சிக்கு முக்கியத்துவம் அளித்துள்ளார்.

நாடு விடுதலையான பிறகு, மக்களாட்சி அதிகாரப் பரவலாக்கம் குறித்து முதன்முதலில் இயற்றப்பட்ட சட்டம், "மதராஸ் பஞ்சாயத்துச் சட்டம், 1950" ஆகும். மேலும், இந்திய அரசியலமைப்பின் பகுதி 4–ல் உள்ள பிரிவு 40–ல் அரசுக்கு வழங்கப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளின்படி, அரசானது கிராம ஊராட்சிகளை அமைத்திட அனைத்து விதமான நடவடிக்கைகளையும் எடுக்க வலியுறுத்தியுள்ளது. அரசானது அவ்வாறு அமைக்கப்படும் கிராம ஊராட்சிகளுக்கு அதிகாரங்களையும், அவைகளை செயல்படுத்தும் உரிமைகளையும் வழங்கி அவைகள் சுயாட்சி பெற்ற அமைப்புகளாக விளங்கிட ஆவன செய்யவும் வலியுறுத்தியுள்ளது.

அதன்படி ஒன்றிய அரசால் அமைக்கப் பெற்ற பல்வந்த்ராய் மேத்தா குழு அதன் அறிக்கையை ஜனவரி 1957 ஆம் ஆண்டு சமர்ப்பித்தது. அதில் அதிகார பரவலாக்கத்தை மக்களாட்சி முறையில் அனைத்து உள்ளாட்சி அமைப்புகளுக்கும் வழங்கிடவும் 1960 ஆம் ஆண்டு முதல் ஊராட்சிகளை உருவாக்க வழி வகுத்தது.

இதனைத் தொடர்ந்து "மதராஸ் பஞ்சாயத்து சட்டம், 1958" மற்றும் "மதராஸ் வளர்ச்சி மன்ற சட்டம், 1958" ஆகியவை இயற்றப்பட்டதன் காரணமாக கிராம ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களை உள்ளடக்கிய இரண்டு அடுக்கு ஆட்சி முறையை உருவாக்கி, அதிக எண்ணிக்கையிலான வளர்ச்சி மற்றும் நலப்பணிகளை கிராம ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஒப்படைத்தது.

நாடு முழுவதும் ஊராட்சி அமைப்புகள் படிப்படியாக வளர்ச்சி அடைந்து வந்த போதிலும் இவ்வமைப்புகளில் சமுதாயத்தின் அடித்தட்டு மக்களான பட்டியலினத்தவர், பட்டியலின பழங்குடியினர் மற்றும் மகளிரின் பிரதிநிதித்துவம் குறைவாகவே இருந்தது. மேலும் உரிய அதிகாரப்பகிர்வு

இல்லாமலும் போதுமான நிதி ஆதாரங்கள் இல்லாமலும் இருந்தது.

உள்ளாட்சி அமைப்புகளின் முக்கியத்துவத்தை அறிந்து அவைகளின் அதிகாரங்களையும், செயல்பாடுகளையும் மேம்படுத்துவதற்கு இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் 73–வது திருத்த சட்டம் 1992–ம் ஆண்டு இயற்றப்பட்டு 1993 ஏப்ரல் முதல் நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டது. இதன் விளைவாக அரசியலமைப்பு சட்டத்தில் பகுதி IX–ல் சேர்க்கப்பட்டு ஊராட்சி அமைப்புகளுக்கு அரசியலமைப்பு அங்கீகாரம் வழங்கப்பட்டது.

73–வது அரசியலமைப்பு சட்ட திருத்தத்தின் அடிப்படையில் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994 (தமிழ்நாடு சட்டம் 21/1994) தமிழ்நாடு அரசால் இயற்றப்பட்டு 22.04.1994 முதல் நடைமுறைக்கு வந்தது. இச்சட்டம் தமிழ்நாட்டில் உள்ள ஊராட்சி அமைப்புகளில், கீழ்க்கண்ட முக்கிய மாற்றங்களைக் கொண்டு வந்தது:–

- தமிழ்நாட்டில் மூன்றடுக்கு ஊராட்சி முறை நடைமுறைக்கு வந்தது.

- ஊராட்சி என்பது மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புக்களைக் குறிக்கும் பொதுச் சொல்லாக அமைந்தது.
- மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கான உறுப்பினர்கள் மற்றும் கிராம ஊராட்சியின் தலைவர் வாக்காளர்களால் நேரடியாகத் தேர்வு செய்யப்படுகின்றனர். ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளின் தலைவர்கள் மறைமுகத் தேர்தல்களின் மூலம் உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.
- மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகள் ஒவ்வொன்றும் சுதந்திரமாக இயங்கக் கூடியவையாக உள்ளன. கிராம ஊராட்சியின் தலைவர்கள் ஊராட்சி ஒன்றியக் குழுவில் உறுப்பினர்களாக இல்லை.
- ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மக்கள் தொகை விகிதத்திற்கு ஏற்ப, பதவியிடங்களுக்கு இட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பெண்களுக்கு மூன்றில் ஒரு பங்கு இட ஒதுக்கீடு செய்யப்பட்டு இருந்ததை மாற்றி 2016 ஆம் ஆண்டு அவர்களுக்கான இட ஒதுக்கீடு 50 சதவீதமாக உயர்த்தப்பட்டுள்ளது.
- ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் பதவியிடங்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட ஒதுக்கீடு,

10 ஆண்டுகளுக்கு ஒரு முறை சுழற்சி முறையில் மாற்றம் செய்யப்படும்.

- தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையம் ஏற்படுத்தப்பட்டது.
- மாநில அரசிடமிருந்து நிதியினை ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு பகிர்ந்தளிக்கும் விகிதத்தை பரிந்துரை செய்வதற்காக மாநில நிதி ஆணையம் ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை அமைக்கப்பட்டு வருகிறது.
- ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் வளர்ச்சித் திட்டங்களை ஒருங்கிணைத்து மாவட்ட வளர்ச்சித் திட்டத்தினை உருவாக்கும் வகையில் மாவட்ட திட்டக் குழு அமைக்கப்பட்டது.

அரசியலமைப்புச் சட்டத்தின் 11–வது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள 29 இனங்களில் உள்ளாட்சி அமைப்புகளுக்கு போதிய அதிகாரங்களை வழங்கிட மாநில அரசு வழிவகை செய்திட வேண்டும் என்று இந்திய அரசியலமைப்புச் சட்டம், பிரிவு 243–G தெரிவிக்கின்றது. தமிழ்நாடு அரசு பல்வேறு அரசு ஆணைகள் மூலம் 11–வது அட்டவணையில்

பட்டியலிடப்பட்டுள்ள கல்வி, சுகாதாரம், குடிநீர் விநியோகம், வேளாண்மை, கால்நடை வளர்ப்பு, கூட்டுறவு, பொது விநியோகம் போன்ற 29 இனங்களில் அதிகாரம் மற்றும் பொறுப்புகளை பகிர்ந்தளித்து ஆணையிட்டுள்ளது.

## 2.2. மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளின் அதிகாரம் மற்றும் செயல்பாடுகள்

### 2.2.1. கிராம ஊராட்சிகள்

தமிழ்நாட்டில் உள்ள 37 ஊரக மாவட்டங்களில் 79,395 குக்கிராமங்களை உள்ளடக்கிய 12,525 கிராம ஊராட்சிகள் உள்ளன. கிராம ஊராட்சியின் தலைவர், கிராம ஊராட்சியின் செயல் அலுவலர் ஆவார். ஒவ்வொரு கிராம ஊராட்சியும் உரிய காரணங்களால் கலைக்கப்படாத வரை ஒவ்வொரு சாதாரணத் தேர்தலுக்குப் பின்னர் 5 ஆண்டு காலம் செயல்பாட்டில் இருக்கும்.

மக்கள் தொகை கணக்கெடுப்பு இயக்குநரகத்துடன் ஒருங்கிணைந்து கிராம ஊராட்சி வாரியாக 2011 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி,

அனைத்து கிராம ஊராட்சிகளுக்கும் ஊரக மக்கள் தொகை விபரம் ஆகஸ்ட் 2014–ல் வெளியிடப்பட்டது. அவ்வாறு கிராம ஊராட்சி வாரியாக வெளியிடப்பட்ட மக்கள் தொகையில் ஆதிதிராவிடர் / பழங்குடி இனத்தவர் மற்றும் பெண்கள் குறித்த விவரங்களும் அடங்கும். மேலும், மேற்கண்ட விவரங்கள் https://drdpr.tn.gov.in/ என்ற இணையதளத்திலும் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

**கிராம சபை**

தமிழகத்தின் வரலாற்றுப் பதிவுகளில் சோழர் காலத்தில் "ஊர் மற்றும் சபை" என்கிற அமைப்புகள் இருந்துள்ளன. இச்சபைகள் அவ்வூராட்சியின் நிர்வாகத்தை மேற்கொள்வதற்காகவும் ஜனநாயக முறை வேரூன்றி முடிவுகள் எடுப்பதையும் உறுதி செய்தன. இந்தியா விடுதலை பெற்ற பின்னர் இயற்றப்பட்ட இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 243 ஆவது பிரிவு சேர்க்கப்பட்டு உள்ளாட்சி அமைப்புகளுக்கு முக்கியத்துவம் தரப்பட்டன. அவற்றில் பிரிவு 243–ன் உட்பிரிவானது கிராம சபை குறித்து விவரிக்கிறது.

கிராம ஊராட்சியிலுள்ள அனைத்து வாக்காளர்களையும் உள்ளடக்கிய அமைப்பான கிராம சபைக்கு குறிப்பிட்ட அதிகாரங்களும், பொறுப்புகளும் வழங்கப்பட்டுள்ளன. இரண்டு கிராம சபைக் கூட்டங்களுக்கு இடையே உள்ள காலம் ஆறு மாதங்களுக்கு மிகாமல் இருக்கும் வகையில் சட்ட ரீதியாக கிராம சபைக் கூட்டங்கள் கூட்டப்பட வேண்டும்.

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994, பிரிவு 3–ன் கீழ்,

அ) கிராம சபையானது,

i) கிராம திட்டத்திற்கு ஒப்புதல் வழங்குதல்
ii) கிராம ஆண்டு வரவு–செலவுத் திட்டத்திற்கு ஒப்புதல் வழங்குதல்
iii) கிராம ஊராட்சியின் முந்தைய ஆண்டுக்கான தணிக்கை அறிக்கைக்கு ஒப்புதல் அளித்தல்
iv) கிராம ஊராட்சியின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களை ஆய்வுசெய்தல் போன்ற பணிகளை மேற்கொள்கிறது.

(ஆ)அரசானது அறிவிக்கையின் மூலம் குறிப்பிட்ட சில பணிகளை கிராம சபைக்கு வழங்கலாம்.

ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும் ஒரு ஆண்டில் குறைந்தது நான்கு முறை, அதாவது ஜனவரி 26, மே 1, ஆகஸ்டு 15, அக்டோபர் 2 ஆகிய நாட்களில் கிராம சபைக் கூட்டம் நடத்த தமிழ்நாடு அரசு ஆணையிட்டுள்ளது. இது தவிர, தேவையின் அடிப்படையில் விதிமுறைகளுக்குட்பட்டு கிராம சபைக் கூட்டம் நடத்தலாம்.

**கிராம ஊராட்சி வளர்ச்சித் திட்டம் தயாரித்தல்**

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994–ன் பிரிவு–240–ன் படி ஒவ்வொரு கிராம ஊராட்சியும் ஒவ்வொரு ஆண்டும் கிராம ஊராட்சிக்கான வளர்ச்சித் திட்டத்தினைத் தயார் செய்திட வேண்டும்.

அடுத்த நிதியாண்டிற்கான கிராம ஊராட்சி வளர்ச்சித் திட்டத்தை அரசின் வழிகாட்டுதல்படி அதற்கு முதலாண்டிலேயே தயாரிப்பதற்காக அக்டோபர் 2 முதல் டிசம்பர் 31 வரை மக்களிடம் திட்டமிடுதல் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்திட அரசினால் ஆவன செய்யப்படுகிறது. கிராம ஊராட்சி திட்டமிடல் செயல்முறை விரிவானதாகவும், மக்கள்

பங்கேற்பின் அடிப்படையிலும் இதர துறைகளின் ஒருங்கிணைப்புடன் கிராம வளர்ச்சிக்காக மேற்கொள்ளப்படுகிறது.

மக்கள் திட்டமிடல் இயக்கத்தின் ஒரு பகுதியாக, மாநிலத்தில் உள்ள அனைத்து கிராம ஊராட்சிகளின் சமூக மற்றும் பொருளாதார மதிப்பீடு மேற்கொள்ளப்படும். தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் சமுதாய வளப்பயிற்றுனர்கள் மூலம் இந்த கணக்கெடுப்பு நடத்தப்பட்டு மிஷன் அந்தியோதயா செயலி மூலம் உள்ளீடு செய்யப்படும். இப்பயிற்றுனர்கள் தொடர்புடைய துறைகள் மற்றும் கள அளவில் ஆய்வு மேற்கொண்டு தகவல்களைச் சேகரிப்பதுடன் ஊராட்சிகளுக்கான தேவைகளையும் மதிப்பிடுவர். கிராம ஊராட்சி வளர்ச்சித் திட்டத்தை இறுதி செய்வதற்காக அனைத்து கிராம ஊராட்சிகளிலும் சிறப்பு கிராம சபைக் கூட்டங்கள் நடத்தப்படும்.

**கிராம ஊராட்சிக் குழுக்கள்**

ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும் கீழ்க்கண்ட குழுக்கள் அமைத்து செயல்படும்.

- நியமனக்குழு
- வளர்ச்சிக்குழு
- வேளாண்மைக் குழு
- பணிகள் குழு
- கல்விக் குழு

**நியமனக் குழு**

கிராம ஊராட்சியில், ஊராட்சி நிதியில் ஊதியம் பெற அனுமதிக்கப்பட்ட பணியாளர்களை தேர்வு செய்வது இக்குழுவின் முக்கிய பணி ஆகும்.

**வளர்ச்சிக் குழு**

மக்கள் நலன், குடிநீர் மற்றும் சுகாதாரம் ஆகியன குறித்த பணிகளை இக்குழு மேற்கொள்ளும்.

**வேளாண்மை மற்றும் நீர் வடிப்பகுதி குழு**

கிராம ஊராட்சிகளில் வேளாண்மை குழுக்களை ஏற்படுத்தி விவசாயத்தில் நவீன தொழில் நுட்பங்களைப் புகுத்துதல், பாசன மேம்பாடு செய்தல் உள்ளிட்ட முக்கியபணிகளை இக்குழு மேற்கொள்ளும்.

**பணிகள் குழு**

இக்குழு கிராம ஊராட்சி வளர்ச்சித் திட்டங்களை தயாரிக்க கிராம ஊராட்சிக்கு உதவியாக இருக்கும்.

**கல்விக் குழு**

கிராம ஊராட்சிப் பகுதிகளில் உள்ள அனைத்துப் பள்ளிகளின் செயல்பாடுகளை கண்காணித்தல், பள்ளிகளில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு மக்களின் பங்கேற்பினைப் பெறுதல் ஆகியவை இக்குழுவின் முக்கிய பணிகளாகும்.

**2.2.2. ஊராட்சி ஒன்றியம்**

தமிழ்நாட்டில் இடைநிலை அளவில் 388 ஊராட்சி ஒன்றியங்கள் (வட்டார ஊராட்சிகள்) உள்ளன. ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியமும், குறைந்தபட்சம் 5,000 மக்கள் தொகை கொண்ட ஊராட்சி ஒன்றிய வார்டுகளை உள்ளடக்கிய வளர்ச்சி வட்டாரங்களாகும். ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர்கள் தொடர்புடைய வார்டில் உள்ள மக்களால் நேரடியாக தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சி ஒன்றிய வார்டு

உறுப்பினர்களால், மறைமுகத் தேர்தலின் மூலம் ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் தேர்வு செய்யப்படுகிறார்.

## நிதி

1. ஊராட்சி ஒன்றியக் குழுவிற்கு வரி விதித்திடும் அதிகாரம் இல்லை.
2. வரியில்லா வருவாய், ஒப்படைக்கப்பட்ட / பகிர்ந்தளிக்கப்பட்ட வருவாயில் ஒரு பகுதி, கட்டணங்கள், வாடகை, அபராதம் மற்றும் தண்டத் தீர்வை ஆகியவை ஊராட்சி ஒன்றியத்தின் வருவாய் இனங்களாகும்.
3. மாநில நிதி ஆணையத்தால் விடுவிக்கப்படும் மானியங்களான மக்கள் தொகை அடிப்படையிலான மானியம் மற்றும் குறைந்தபட்ச மானியம் ஆகியன ஊராட்சி ஒன்றியத்திற்கு வழங்கப்படுகின்றன. ஐந்தாவது மாநில நிதி ஆணையத்தின் பரிந்துரையின் அடிப்படையில் குறைந்தபட்சமான மானியம் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஆண்டிற்கு ரூ.40 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.

4. பதினைந்தாவது ஒன்றிய நிதி ஆணையம், தற்போது வட்டார ஊராட்சிகளுக்கும் மானியத்தினை வழங்க பரிந்துரைத்ததன் அடிப்படையில் மொத்த ஒதுக்கீட்டில் 15 சதவீதம் வட்டார ஊராட்சிகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

**ஊராட்சி ஒன்றியங்களுக்கான உட்கட்டமைப்பு வசதிகள்**

தமிழ்நாட்டிலுள்ள 388 ஊராட்சி ஒன்றியங்களுக்கும் நிலையான அலுவலகக் கட்டடங்கள் உள்ளன. நீண்ட காலமாக பயன்படுத்தப்பட்டு, பழுதடைந்த பழைய கட்டடங்களுக்குப் பதிலாக ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் திட்டக்கூறு நிதியினை கொண்டு புதிய கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. இதுவரை ரூ.453.70 கோடி செலவில் 224 ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன.

### 2.2.3. மாவட்ட ஊராட்சி

தமிழ்நாட்டில் 36 மாவட்ட ஊராட்சிகள் உள்ளன. தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம்,1994 பிரிவு 24–ன்படி ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஊராட்சி அமைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர்கள், மக்களால் நேரடித் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர்களால் மறைமுகத் தேர்தல் மூலம் மாவட்ட ஊராட்சித் தலைவர் தேர்வு செய்யப்படுகிறார்.

புதிதாக உருவாக்கப்பட்ட 5 வருவாய் மாவட்டங்களை தொடர்ந்து ஐந்து புதிய மாவட்ட ஊராட்சிகளான, செங்கல்பட்டு, கள்ளக்குறிச்சி, திருப்பத்தூர், இராணிப்பேட்டை மற்றும் தென்காசி ஆகியன அம்மாவட்டத்திலுள்ள வட்டார ஊராட்சிகளை மறுசீரமைத்து உருவாக்கப்பட்டுள்ளன. தற்போது ஊரக உள்ளாட்சித் தேர்தல்கள் நடத்தப்பட்டு 2021 நவம்பர் முதல் இப்புதிய மாவட்ட ஊராட்சிகள் செயல்பட்டு வருகின்றன. இது தவிர, நாகப்பட்டினம்

மாவட்டம் இரண்டாக பிரிக்கப்பட்டு மயிலாடுதுறை மாவட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. இதற்கான மாவட்ட ஊராட்சி அமைப்பு தனியாக இதுவரை அமைக்கப்படவில்லை. எனினும், இம்மாவட்ட ஊராட்சி அடுத்த தேர்தல்களின் போது நடைமுறைக்கு வரும்.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில், உதவி இயக்குநர் நிலையில் ஒரு அலுவலர் ஒவ்வொரு மாவட்ட ஊராட்சிக்கும் செயலராக நியமிக்கப்பட்டு பணியாற்றி வருகிறார்.

## நிதி

மாவட்ட ஊராட்சிகளுக்கு வரி விதிக்கும் அதிகாரம் ஏதும் இல்லை. மாநில நிதி ஆணைய மானியம் மட்டுமே முதன்மையான வருவாயாகும். குறிப்பிட்ட சில இனங்களில் மாவட்ட ஊராட்சிக்கு சொந்தமான நிலம் மற்றும் கட்டடம் மூலமாக கிடைக்கும் வருவாய் முக்கியமானவையாகும். ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கப்படும் நிதியில் எட்டு விழுக்காடு மாவட்ட ஊராட்சிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இந்த மானியம்

ஒவ்வொரு மாதமும் மாவட்ட ஊராட்சிகளுக்கு விடுவிக்கப்படுகிறது. பதினைந்தாவது ஒன்றிய நிதி ஆணையம், தற்போது மாவட்ட ஊராட்சிகளுக்கும் மானியத்தினை வழங்க பரிந்துரைத்ததன் அடிப்படையில் மொத்த ஒதுக்கீட்டில் 5 சதவீதம் மாவட்ட ஊராட்சிகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

**2.3. ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் நிதி ஆதாரங்கள்**

மாநிலத்தில் மூன்றடுக்கு ஊரக உள்ளாட்சி அமைப்புகளில் வரி விதிப்பு செய்ய அதிகாரம் பெற்ற ஒரே அமைப்பு கிராம ஊராட்சியாகும். கிராம ஊராட்சிகள் கீழ்க்கண்ட இனங்களிலிருந்து வருவாய் பெறுகின்றன:

அ) வரி வருவாய்
ஆ) வரியில்லா வருவாய்
இ) மானியம்

### 2.3.1 வரி வருவாய்

கிராம ஊராட்சிகள் கீழ்க்கண்ட வரி இனங்களிலிருந்து வரி வருவாய் பெற உரிமை பெற்றுள்ளன:

i) வீட்டு வரி / சொத்து வரி
ii) தொழில் வரி
iii) விளம்பர வரி

### i) வீட்டு வரி / சொத்து வரி

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994 பிரிவு 172 மற்றும் அரசாணை (நிலை) எண். 255, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள்:13.12.1999–ன்படி ஊரகப் பகுதிகளில் கட்டப்படும் ஒவ்வொரு கட்டடத்திற்கும் வீட்டு வரி / சொத்து வரி சம்பந்தப்பட்ட கிராம ஊராட்சியால் விதிக்கப்படுகிறது. 2008–09 ஆம் ஆண்டு முதல், அரசு உதவி பெறாத சுயநிதிக் கல்வி நிறுவனங்களின் கட்டடங்களுக்குச் சொத்து வரி விதிக்கப்பட்டு வசூலிக்கப்படுகிறது. 2021–22 ஆம் ஆண்டில் 288.38 கோடி ரூபாய் வீட்டு

வரி / சொத்து வரி மூலமாக கிராம ஊராட்சிகளால் வசூலிக்கப்பட்டுள்ளது.

### ii) தொழில் வரி

கிராம ஊராட்சிகள், தொழில் வரி வசூலிக்கும் அதிகாரம் பெற்றவை. தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994 பிரிவு 198(B)–ல் தொழிலாளர்களின் ஊதியம் அல்லது கூலித் தொகையிலிருந்து தொழில் வரி விதிக்கவும், வசூலிக்கவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. சம்மந்தப்பட்ட நிறுவனங்கள் தொழிலாளர்களின் ஊதியத்திலிருந்து தொழில் வரிக்காக பிடித்தம் செய்த தொகையினை தொடர்புடைய கிராம ஊராட்சிக்கு செலுத்திட வேண்டும். அதன்படி, 2021–22 ஆம் ஆண்டில் தொழில் வரியாக 139.59 கோடி ரூபாய் வசூலிக்கப்பட்டது.

### iii) விளம்பர வரி

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994 பிரிவு 172, 220 மற்றும் பிரிவு 242–ல் அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி, ஊரக உள்ளாட்சி அமைப்புகள்

விளம்பர வரி விதிக்கும் உரிமை பெற்றுள்ளன. தமிழ்நாடு ஊராட்சிகள் (உரிமம் வழங்குதல் மற்றும் விளம்பரங்களுக்கு வரி விதித்து வசூலித்தல்) விதிகள் 2009–ல் ஊரகப் பகுதிகளில் விளம்பர பலகைகள் நிறுவ அனுமதி பெற்றவர்களிடம் வசூலிக்கப்பட வேண்டிய ஓர் ஆண்டிற்கான குறைந்தபட்ச மற்றும் அதிகபட்ச தொகையினை அரசு நிர்ணயிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்பின் நிர்வாக அலுவலர் கட்டணத்தை வசூல் செய்து தொடர்புடைய உள்ளாட்சி அமைப்பின் பொது நிதிக் கணக்கில் செலுத்த வேண்டும்.

### 2.3.2. வரியல்லாத வருவாய்

கீழ்க்கண்ட இனங்களிலிருந்து வரியல்லாத வருவாய் பெற கிராம ஊராட்சிகள் உரிமை பெற்றுள்ளன:

i) மனைப் பிரிவுகள் மற்றும் கட்டட வரைபட அனுமதிக்கான உரிமக் கட்டணம்
ii) அபாயகரமான மற்றும் கேடு விளைவிக்கக் கூடிய தொழில்களுக்கான கட்டணங்கள்
iii) சந்தைக் கட்டணம்

iv) குடிநீர் கட்டணம்

v) வண்டி நிலையங்களுக்கான கட்டணம்

vi) சமூகக் காடுகள் ஏலம்

vii) மீன்பாசி குத்தகை

viii) 2சி பட்டா கட்டணம்

ix) சந்தை மற்றும் பொருட்காட்சிகளிலிருந்து பெறப்படும் வருமானங்கள்

x) படகுக் குழாம் மூலம் பெறப்படும் கட்டணங்கள்

xi) அபராதங்கள் மற்றும் தண்டத் தீர்வை

xii) கனிமம் மற்றும் சுரங்க ஏலம் மற்றும் உரிமத் தொகை

**i) மனைப் பிரிவுகள் மற்றும் கட்டட வரைபட அனுமதிக்கான உரிமக் கட்டணம்**

தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டட விதிகள் 2019 ஆனது, தமிழ்நாடு அரசு சிறப்பு அரசிதழ் எண்:43, நாள்.04.02.2019–ன் மூலம் அறிவிக்கை செய்யப்பட்டுள்ளது.

ஊரகப் பகுதிகளில் அமைய பெறும் 10,000 சதுர அடி பரப்பளவுக்கு மிகாத குடியிருப்பு கட்டிடங்கள் மற்றும் 2,000 சதுர அடி பரப்பளவுக்கு மிகாத வணிக கட்டடங்களுக்கு வரைபட அனுமதியினை கிராம ஊராட்சித் தலைவர் வழங்கலாம்.

இவ்விதிகளின்படி கிராம ஊராட்சித் தலைவரால், சென்னை பெருநகர வளர்ச்சிக்குழுமம் / நகர மற்றும் ஊரமைப்பு இயக்குநர் அல்லது அவரால் அங்கீரிக்கப்பட்ட இணை இயக்குநர் அல்லது துணை இயக்குநரின் முன் அனுமதியுடன் மனைப்பிரிவு அனுமதி வழங்கப்படவேண்டும்.

**ii) குடிநீர் கட்டணங்கள்**

ஊரகப் பகுதிகளில் வீடுகளுக்கான குடிநீர் இணைப்பிற்கு கிராம ஊராட்சி குடிநீர் கட்டணம் விதிக்கின்றது. தனி நபர் வீட்டு குடிநீர் இணைப்பு வழங்குவதற்கு வைப்புத் தொகை ரூ.1,000 வசூலிக்கப்படுகிறது. ஒவ்வொரு வீட்டு குடிநீர் இணைப்பிற்கும் மாதக்கட்டணம் ரூ.50 செலுத்த வேண்டும். அதன்படி 2021–22 ஆம் ஆண்டில் குடிநீர் கட்டணமாக 128.26 கோடி ரூபாய் வசூலிக்கப்பட்டது.

**ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான மானியங்கள்:**

**2.3.3. மாநில நிதிக் குழு மானியம்**

73–வது அரசியலமைப்புச் சட்டத் திருத்தம் மற்றும் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994, பிரிவு 198–ன்படி, தமிழ்நாட்டில் ஐந்து ஆண்டுகளுக்கு

ஒரு முறை தொடர்ச்சியாக மாநில நிதி ஆணையம் அமைக்கப்பட்டு வருகிறது. மாநில நிதி ஆணையத்தின் முக்கிய பொறுப்புகள் பின்வருமாறு:

1. அரசால் விதிக்கப்படும் வரி, தீர்வை, சுங்கம் மற்றும் கட்டணங்கள் மூலம் பெறப்படும் மொத்த வருவாயில் மாநிலத்திற்கும், ஊராட்சிகளுக்கும் பிரித்து வழங்கும் முறையினை உருவாக்குதல்.
2. ஊராட்சிகளுக்கு ஒதுக்கப்பட வேண்டிய வரிகள், தீர்வை, சுங்கங்கள் மற்றும் கட்டணங்கள் ஆகியவற்றை நிர்ணயித்தல்.
3. மாநிலத்தின் மொத்தத் தொகுப்பு நிதியிலிருந்து ஊராட்சிகளுக்கு வழங்கப்பட வேண்டிய மானியங்கள்.
4. ஊராட்சிகளின் நிதி நிலையினைப் பெருக்குவதற்கான வழிமுறைகள்.

ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிதி பகிர்வு செய்திட 1994–லிருந்து இதுவரை ஐந்து மாநில நிதிக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

i) ஐந்தாவது மாநில நிதி ஆணையம் (2017–18 முதல் 2021–22 )

ஐந்தாவது மாநில நிதிக் குழுவின் பரிந்துரைகளை அரசு ஏற்று அதன்படி மானியமானது ஊரக மற்றும் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கு பகிர்ந்தளிக்கப்படுகிறது. கீழ்க்காணும் ஐந்தாவது மாநில நிதிக் குழுவின் முக்கிய பரிந்துரைகளின் மீது அரசு உரிய ஆணைகளை வெளியிட்டுள்ளது:

அ) மாநிலத்தின் சொந்த வரி வருவாயில் 10 விழுக்காடு ஊரக மற்றும் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கு பகிர்ந்து அளிக்கப்படும்.

ஆ) பகிர்வு மானியம் ஊரக மற்றும் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கிடையே 56:44 என்கிற விகிதத்தில் பகிர்ந்தளிக்கப்படும்.

இ) ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கிடையேயான பகிர்வு முறையே மாவட்ட ஊராட்சி, வட்டார ஊராட்சி மற்றும் கிராம ஊராட்சிகளுக்கு 8: 37: 55 ஆகும்.

ஈ) 2017–18 ஆம் ஆண்டு முதல் கிராம ஊராட்சிகளுக்கான குறைந்தபட்ச மானியம் ரூ.5 இலட்சத்திலிருந்து ரூ. 7 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.

உ) ஊராட்சி ஒன்றியங்களுக்கான குறைந்தபட்ச மானியம் ஆண்டுக்கு ரூ.40 இலட்சம் என உயர்த்தப்பட்டுள்ளது.

ஊ) ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான மாநில நிதிக் குழு மானிய தொகை பகிர்வு கீழ்காணும் வழிமுறைகளை கொண்டிருக்கும்:

**அட்டவணை 2.1**

| | | | |
|---|---|---|---|
| 1. | 2011–ம் ஆண்டின் கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை | : | 60% |
| 2. | பரப்பளவு | : | 15% |
| 3. | ஆதிதிராவிடர் / பழங்குடியினர் மக்கள் தொகை | : | 15% |
| 4. | தனிநபர் செலவு நுகர்வு இடைவெளி | : | 10% |

எ) ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு உரிய மாநில நிதிக்குழு மானியத் தொகையில் 20 விழுக்காடு ஒதுக்கீடு செய்யப்பட்டு "மூலதன மானிய நிதி" ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்நிதி முந்தைய உட்கட்டமைப்பு இடை நிரவல் நிதிக்கு பதிலாக ஏற்படுத்தப்பட்டதாகும்.

ஏ) ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான மொத்த தொகையில் மேலும் 10 விழுக்காடு தொகை பற்றாக்குறை ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான தொகுப்பு நிதியாக தனியே ஏற்படுத்தப்பட்டுள்ளது.

2021–22 ஆம் ஆண்டிற்கான மானியமாக அரசு 6149.23 கோடி ரூபாயை ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு விடுவித்துள்ளது.

**ii) ஆறாவது மாநில நிதி ஆணையம்:**

ஆறாவது மாநில நிதி ஆணையம் 2020–ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டு அதன் பரிந்துரைகள் பரிசீலனையில் உள்ளன.

**மூலதன மானிய நிதி**

ஐந்தாவது மாநில நிதி ஆணையத்தின் பரிந்துரையின் அடிப்படையில் ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு அளிக்கப்படும் பகிர்மான நிதி தொகுப்பில் 20 விழுக்காடு மூலதன மானிய நிதிக்கு வழங்கப்படும். இந்த 20% ஒதுக்கீட்டில், மாநில அளவில் முக்கியமானதாக கருதப்படும் திட்டங்களை செயல்படுத்த ஒதுக்கீடு செய்யப்படும்.

2021–22 ஆம் ஆண்டிற்கான மூலதன மானிய நிதியாக 1229.84 கோடி ரூபாயை ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான மாநில நிதிக்குழு மானியத்தின் மொத்த ஒதுக்கீட்டில் இருந்து அரசு விடுவித்துள்ளது.

**பற்றாக்குறை ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான தொகுப்பு நிதி**

ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் ஒட்டு மொத்த பகிர்மான நிதியில் 10 விழுக்காட்டினை கொண்டு பற்றாக்குறை ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான தொகுப்பு நிதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த 10 சதவிகித நிதியில், 40 விழுக்காடு தொகை, கடந்த ஐந்து ஆண்டுகளில் குறைந்தது மூன்று ஆண்டுகளில் நிதி பற்றாக்குறை உள்ள ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் கிராம ஊராட்சிகளுக்கு இடையே ஐந்தாவது நிதி ஆணைய காலத்தின் முதல் மூன்று ஆண்டுகளுக்கு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரால் பகிர்ந்து அளிக்கப்படும்.

இதுதவிர 20 விழுக்காடு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் வசம் இருக்கும். 20 விழுக்காடு தொகை மாநில நிதி ஆணையத்தால் மாவட்ட ஊராட்சிகளுக்கு பரிந்துரைத்துள்ள விகிதாச்சார அடிப்படையில் மாவட்டங்களுக்கு பிரித்து வழங்கப்படும். மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் இத்தொகையினை வேறு எந்த திட்டத்திலும் அல்லது வழிமுறையிலும் தீர்வு

காண முடியாத நிதிப் பிரச்சினைகளுக்கு பயன்படுத்தலாம். மீதமுள்ள 20 விழுக்காடு தொகை கூட்டு குடிநீர் திட்டத்திலுள்ள பற்றாக்குறையினைப் போக்க தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு மானியமாக விடுவிக்கப்படும்.

தமிழக அரசு 2021-22 ஆம் ஆண்டிற்கான பற்றாக்குறை ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான தொகுப்பு நிதியாக 614.92 கோடி ரூபாயை மாநில நிதிக்குழு மானியத்தின் ஒட்டுமொத்த ஒதுக்கீட்டிலிருந்து விடுவித்துள்ளது.

### 2.3.4. ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய்

ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு பகிர்ந்தளிக்கப்படும் முத்திரைத்தாள் கட்டணத்துடன் பெறப்படும் மிகுவரி வருவாய் மாநில அளவில் ஒருங்கிணைக்கப்பட்டு பதிவுத்துறை மூலம் விடுவிக்கப்படுகிறது. இந்த மிகுவரி வருவாய் கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு பிரித்து வழங்கப்படுகிறது.

அதன்படி, 2021-22 ஆம் ஆண்டுக்கான ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் 850.37 கோடி ரூபாயினை பின்வருமாறு அனுமதித்து அரசு ஆணையின்படி விடுவித்துள்ளது.

i) மூன்றில் ஒரு பங்கு தொகையான ரூ.283.45 கோடி நிதியானது நீண்டகால நிலுவையில் உள்ள மின்கட்டணத்தை தமிழக மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு செலுத்தவும் பயன்படுத்தப்பட்டது.

ii) மீதமுள்ள மூன்றில் இரு பங்கு தொகையான ரூ.566.92 கோடி ஊரகப் பகுதிகளில் குறிப்பிட்ட வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ளும் வகையில் முன்னுரிமைத் திட்டங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் திட்டக் கூறு நிதி**

ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் திட்டக்கூறு நிதி என்பது மாநில அளவில் ஒப்படைக்கப்பட்ட வருவாயின் ஒரு பகுதியாகும். இத்திட்டக்கூறு நிதிக்கான ஒப்படைக்கப்பட்ட

வருவாயில் குறிப்பிட்ட சதவீதம் தேவையின் அடிப்படையில் சிறப்பு உட்கட்டமைப்பு பணிக்களுக்காக ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

கடந்த 2007–08 ஆம் ஆண்டிலிருந்து முத்திரைத் தாள் கட்டணத்துடன் வசூலிக்கப்படும் மிகுவரி மற்றும் கேளிக்கை வரி ஆகிய ஒப்படைக்கப்பட்ட வரிவருவாய் இனங்களை மாநில அளவில் ஒருங்கிணைத்து அதன் ஒருபகுதி ஊராட்சிகளுக்கும் மீதமுள்ள பகுதி அரசின் முதன்மைத் திட்டங்களுக்கும் பயன்படுத்திட அரசு உத்தரவுகளை பிறப்பித்து வருகிறது. சரக்கு மற்றும் சேவை வரி விதிக்கப்பட்டதன் காரணமாக, கேளிக்கை வரி முழுவதுமாக நீக்கம் செய்யப்பட்டது.

### 2.3.5. ஒன்றிய நிதி ஆணைய மானியம்

நிதிப்பகிர்வு தொடர்பாக பதினைந்தாவது ஒன்றிய நிதி ஆணையம் சமர்ப்பித்த அறிக்கையை ஜனவரி 2020–ல் ஒன்றிய அரசு ஏற்றுக்கொண்டது. பதினைந்தாவது ஒன்றிய நிதி ஆணையம் தனது அறிக்கையை இரண்டு நிலைகளில் சமர்ப்பித்தது.

ஒன்று 2020–21–ம் வருடத்திற்கும், மற்றொன்று 2021–22 முதல் 2025–26 வரையிலான காலத்திற்கும் ஆனதாகும்.

- 2020–21–ம் ஆண்டிற்கான தமிழ்நாட்டின் உள்ளாட்சி அமைப்புகளுக்கான மொத்த நிதி ஒதுக்கீடு ரூ.3607 கோடி ஆகும். இதில் வரையறுக்கப்பட்ட நிதி மற்றும் வரையறுக்கப்படாத நிதி விகிதம் 50 : 50 ஆகும்.

- 2021–22–ம் ஆண்டிற்கான மொத்த நிதி ஒதுக்கீடு ரூ.2666 கோடி ஆகும். இதில் வரையறுக்கப்பட்ட நிதி மற்றும் வரையறுக்கப்படாத நிதி விகிதம் 60:40 ஆகும்.
- வரையறுக்கப்படாத மானியம் ஊரக உள்ளாட்சி அமைப்புகள் ஊதியம் அல்லது நிர்வாக செலவினம் தவிர அரசு அனுமதித்துள்ள இதர குறிப்பிட்ட பணிகளுக்காக பயன்படுத்தலாம்.

- வரையறுக்கப்பட்ட மானியத்தில் 50 சதவீதம் குடிநீர் விநியோகம், மழைநீர் சேகரிப்பு மற்றும் மறுசுழற்சிப் பணிகளுக்காகவும் 50 சதவீதம் சுகாதாரம் மற்றும் திறந்த வெளியில் மலம் கழித்தல் அற்ற நிலையை உருவாக்குதல்

ஆகியவற்றிற்கான பணிகளுக்கும் பயன் படுத்தலாம்.

பதினைந்தாவது ஒன்றிய நிதி ஆணையம் பரிந்துரைத்துள்ள அடிப்படை மற்றும் வரையறுக்கப்பட்ட மானியங்களை மாநில நிதி ஆணையத்தால் பரிந்துரைக்கப்பட்ட பகிர்மான விகிதாச்சார அடிப்படையில் ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் மூன்று அடுக்குகளுக்கும் பின்வருமாறு பகிர்ந்தளிக்கப்படுகிறது.

| | |
|---|---|
| மாவட்ட ஊராட்சிகள் | 5% |
| ஊராட்சி ஒன்றியங்கள் | 15% |
| கிராம ஊராட்சிகள் | 80% |

ஐந்தாவது மாநில நிதி ஆணையம் பரிந்துரைத்த பகிர்வின்படி கீழ்க்கண்டவாறு 15–வது நிதிக்குழு மானியம் மூன்று அடுக்கு ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு உள் ஒதுக்கீடு கீழ்க்கண்ட அளவுகோலின் அடிப்படையில் பகிர்ந்தளிக்கப்படுகிறது :

| | | | |
|---|---|---|---|
| 1. | 2011–ம் ஆண்டின் கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை | : | 60% |
| 2. | பரப்பளவு | : | 15% |
| 3. | ஆதி திராவிடர் / பழங்குடியினர் மக்கள் தொகை | : | 15% |
| 4. | தனிநபர் செலவு நுகர்வு இடைவெளி | : | 10% |

**ஒதுக்கீடு :**

15–வது ஆணைய காலத்திற்கு கீழ்கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**அட்டவணை 2.2**

**(ரூ. கோடியில்)**

| ஆண்டு | மொத்த மானியம் | வரையறுக்கப்படாத மானியம் (40%) | வரையறுக்கப்பட்ட மானியம் (60%) |
|---|---|---|---|
| 2021–22 | 2666 | 1066.4 | 1599.6 |
| 2022–23 | 2761 | 1104.4 | 1656.6 |
| 2023–24 | 2791 | 1116.4 | 1674.6 |
| 2024–25 | 2957 | 1182.8 | 1774.2 |
| 2025–26 | 2884 | 1153.6 | 1730.4 |
| **மொத்தம்** | **14059** | **5623.6** | **8435. 4** |

## 2.4. மின்ஆளுமை முன்னெடுப்புகள்

**பொதுமக்களுக்கான சேவைகளை இணையவழி வழங்குதல்.**

கிராம ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களால் வழங்கப்படும் பொதுமக்களுக்கான சேவைகள் தற்போது பதிவேடுகள் மற்றும் ரசீதுகள் வழங்கும் முறையை அடிப்படையாகக் கொண்டே நடைமுறையில் உள்ளது.

பொதுமக்களுக்கு வழங்கக்கூடிய சேவைகளில் வெளிப்படைத் தன்மையையும் பொறுப்புணர்வினையும் வழங்கும் பொருட்டு இணையவழி கொண்டு வரவேண்டியது அவசியமாகிறது.

இத்துறையானது மேற்குறிப்பிட்ட பொதுமக்களுக்கு வழங்கக்கூடிய சேவைகளை இணையம் வழி கொண்டு வருவதற்கான முயற்சிகளை துவங்கியுள்ளது. 2022-23 ஆம் ஆண்டில், இப்பணிகள் விரைவாக முடுக்கிவிடப்பட்டு புதிய இணையதளத்தின் மூலம் மேலும் பல சேவைகள் கொண்டுவரப்படும்.

**வரி செலுத்தும் இணையதளம்**

பொதுமக்கள் ஊராட்சிகளுக்கு செலுத்த வேண்டிய சொத்துவரி, தொழில்வரி மற்றும் குடிநீர் கட்டணம் போன்றவற்றை இணைய வழி செலுத்தும் வகையில் தேசிய தகவலியல் மையத்தின் மூலம் புதிய இணையதளம் ஒன்று உருவாக்கப்பட்டு வருகிறது. இந்த இணையதளம் தற்போது சோதனை முயற்சியாக கள அளவில் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. இது 2022-23 ஆம் ஆண்டு தமிழகம் முழுவதும் நடைமுறைப்படுத்தப்படும்.

**மனைப்பிரிவு மற்றும் கட்டட அனுமதி இணைய வழி வழங்குதல் :**

ஊரகப் பகுதிகளில் மனைப்பிரிவு அனுமதி மற்றும் கட்டட அனுமதி போன்றவை தற்போது கிராம ஊராட்சிகளால், தொடர்புடைய சென்னைப் பெருநகர வளர்ச்சிக்குழுமம் அல்லது நகர் ஊரமைப்பு துறையின் தொழில்நுட்ப முன் அனுமதியின்படி

வழங்கப்படுகின்றன. இதே நடைமுறையில் கட்டட அனுமதியும் வழங்கப்பட்டு வருகிறது.

தற்போதைய நடைமுறை மாற்றப்பட்டு, தமிழ்நாடு மின் ஆளுமை முகமையின் மூலம் ஏற்படுத்தப்படும் இணையதளத்தின் வழியாக மேற்கண்ட அனுமதிகள் வழங்கப்படும். மேலும், 2022-23-ம் ஆண்டிலேயே மாநிலத்திலுள்ள அனைத்து ஊராட்சிகளிலும் அதிக செயல்திறன் மற்றும் வெளிப்படைத் தன்மையுடன் இந்த நடைமுறை செயல்படுத்தப்படும்.

**ஊரகப்பகுதிகளில் தொழில் தொடங்குவதற்கு ஏதுவாக வழிமுறைகளை எளிமைப்படுத்துதல்:**

ஊரகப் பகுதிகளில் தொழில் வளர்ச்சியை ஊக்குவிக்க, தொழிற்சாலைகளுக்கான கட்டட அனுமதி, தொழில் உரிம அனுமதி மற்றும் சாலைகளை தோண்டி பணிகள் செய்து மீண்டும் சரிப்படுத்துதல் பணிக்கு அனுமதிகள் வழங்குதல் போன்றவை இனி இணையம் (Online) மூலமாக எளிதில் வழங்க தொழில் துறையின் வழிகாட்டு முகமையால் (Guidance Bureau)

உருவாக்கப்பட்டுள்ள ஒற்றைச்சாளர முறையில் ஊரகப் பகுதிகளில் வழங்கப்படும்.

**ஊராட்சிகளின் பயன்பாட்டு கட்டணங்களை மின்னனு நிதிபரிமாற்றம் மூலம் செலுத்துதல்**

குடிநீர் வழங்குதல் மற்றும் தெருவிளக்கு பராமரித்தல் போன்றவை கிராம ஊராட்சிகளின் முக்கிய பொறுப்பாகும். இதுதொடர்பான பயன்பாட்டுக் கட்டணங்களை தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கும் காசோலையாக தற்போது வழங்கப்பட்டு வருகிறது. இதன்காரணமாக கேட்பு மற்றும் கட்டணம் செலுத்துதலிலும் ஒத்திசைவு செய்வதிலும் சிரமம் ஏற்படுவதுடன் சேவைகளை தரமாக வழங்குவதில் இடர்பாடுகள் ஏற்படுகிறது. எனவே, கீழ்க்குறிப்பிட்ட இரண்டு முன்னெடுப்புகளும் அரசு மற்றும் அரசுக்கிடையிலான அளவில் மின்ஆளுமை மூலம் மேற்கொள்ளப்படும்.

## அ) மின் இணைப்பு எண்களை சரிபார்த்தல்

ஊரகப் பகுதிகளில் குடிநீர் வசதி வழங்குதல், தெரு விளக்குகள் அமைத்தல் பணிகளுக்காக கிராம ஊராட்சிகள் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திலிருந்து மின் இணைப்புகளைப் பெற்றுள்ளன. தற்போது சுமார் 5 இலட்சம் எண்ணிக்கையிலான மின் இணைப்புகள் கிராம ஊராட்சிகளில் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இம்மின் இணைப்புகளுக்கான மின் உபயோகக் கட்டணம் காசோலை மற்றும் ரசீதுகளின் அடிப்படையிலேயே செலுத்தப்பட்டு வருகிறது. .

இச்செயல்பாடுகளினால், மாநில அளவில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மற்றும் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திடம் ஒத்திசைவு செய்திடும்போது சிரமங்கள் ஏற்படுகிறது.

எனவே, இதுகுறித்து கிராம ஊராட்சிகளிடம் இருந்தும், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திடமிருந்தும் வெளிப்படைத் தன்மையையும் பொறுப்புணர்வினையும் உறுதி செய்து சிரமங்களை

குறைத்திடும் வகையில், இணைய வழி கட்டணம் செலுத்திடும் முறையையும், அதற்குண்டான அறிக்கைகளை இணைய வழி பெறுவது குறித்தும் ஆய்வு செய்யப்பட்டது. அதனடிப்படையில் இருதரப்பும் இசைவு தெரிவித்ததன் பேரில், தானியங்கு மின்கட்டணம் செலுத்தும் முறை இறுதி செய்யப்பட்டு அதன்மூலம் கிராம ஊராட்சிகள் நேரடியாக தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்கு இணையம் வழி தானியங்கு முறையில் செலுத்திட முடிவு செய்யப்பட்டது.

இவ்வாறு இணைய வழி செலுத்துவதற்கு முக்கிய முன்னேற்பாடாக ஊராட்சிகளில் பயன்படுத்தப்படும் அனைத்து மின்இணைப்பு எண்களையும் சரிபார்த்திட வேண்டியுள்ளது. எனவே, மின்சிக்கன நடவடிக்கை மற்றும் மின் கட்டணத்தை குறைக்கும் நடவடிக்கையாக பயன்பாட்டில் இல்லாதபோதும் குறைந்தபட்ச மின்கட்டணம் செலுத்தி வருகின்ற மின்இணைப்புகளைக் கண்டறிந்து அவற்றை முறையே நிரந்தரமின்துண்டிப்பு

செய்வதற்காகவும், இணைய வழி மின்கட்டணம் செலுத்தவேண்டிய மின் இணைப்புகளை ஒத்திசைவு செய்திடவும், ஒரு கைபேசி செயலி தேசிய தகவலியல் மையத்தால் உருவாக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது.

இதனடிப்படையில் இந்த இணையவழி மின்கட்டணம் செலுத்துதலை சோதனை செய்யும் விதமாக செங்கல்பட்டு மாவட்டம், புனித தோமையர் மலை வட்டார ஊராட்சியில் உள்ள வேங்கைவாசல் என்கிற கிராம ஊராட்சி, மாதிரி ஊராட்சியாக எடுத்துக் கொள்ளப்பட்டு வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டது. தொடர்ந்து அனைத்து ஊராட்சிகளிலும் 2022–23–ம் ஆண்டில் இப்பணிகள் மேற்கொள்ளப்படும்.

ஆ) இதேபோன்று தானியங்கு முறையில் ஊராட்சிகளால் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு செலுத்தும் குடிநீர் கட்டணத்திற்கும் செயல்படுத்தப்படும்.

**கிராம ஊராட்சி அலுவலகக் கட்டடங்கள் புதுப்பித்தல்**

கிராம ஊராட்சி கட்டடங்கள் என்பது தல சுயாட்சி மற்றும் அடித்தள மக்களாட்சியின் அடையாளமாக இருக்கின்றன.

பல ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டு பயன்படுத்தும் நிலையில் உள்ள ஆனால் வண்ணம் பூசத் தேவையான 3671 கிராம ஊராட்சிகள் தேர்வு செய்யப்பட்டு புதுப்பொலிவுடன் இருக்க முழுவதுமாக வண்ணம் பூசப்பட்டுள்ளன. இந்தப் பணிகள் 2022 ஆம் ஆண்டின் பொங்கல் பண்டிகைக்கு முன்னதாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. இது கிராம ஊராட்சிப் பிரதிநிதிகள் பணி செய்திடவும், ஊரக வாழ் பொதுமக்கள் ஊராட்சி அலுவலகங்களை நாடுவதற்கும் நல்ல சூழ்நிலையை உறுதி செய்கிறது.

**15-வது நிதி ஆணையத்தின் கீழ் புதிய மருத்துவக் கட்டடங்கள் கட்டுதல் :**

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் பதினொன்றாவது அட்டவணையில் பட்டியலிடப்பட்ட பணிகளில் மருத்துவம் மற்றும் சுகாதாரம் ஒன்றாகும்.

அரசானது பல்வேறு வகையான 245 மருத்துவக் கட்டடங்களைக் கட்டிட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறைக்கு அனுமதியளித்துள்ளது. அக்கட்டடங்களின் விவரம் மற்றும் 2021-22 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டு விவரம் கீழ்வரும் அட்டவணையில் பட்டியலிடப்பட்டுள்ளன :

## அட்டவணை 2.3

| வ. எண். | மருத்துவக் கட்டடத்தின் வகை | அனுமதிக்கப்பட்ட கட்டடங்களின் எண்ணிக்கை | ஒரு கட்டடத்திற்கான மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | துணை சுகாதார மருத்துவ நிலையங்கள் | 170 | 30 |
| 2. | ஆரம்ப சுகாதார மருத்துவ நிலையங்கள் | 13 | 60 |
| 3. | வட்டார சுகாதார நிலையங்கள் | 62 | 50 |

இந்த மருத்துவக் கட்டடங்கள் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் மூலம் கட்டப்பட்டு

ஊரகப்பகுதிகளில் வாழும் மக்களுக்கு சிறப்பான மருத்துவ சேவைகள் வழங்க ஏதுவாக அமையும்.

## 2.5. ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல்கள்

### மாநில தேர்தல் ஆணையம்

மாநிலத்தில் உள்ள நகர்ப்புர மற்றும் ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு தேர்தலை நடத்துவதற்கான ஒரு சுதந்திரமான மற்றும் தன்னாட்சி பெற்ற அரசியலமைப்பு அதிகாரம் கொண்ட அமைப்பாக 1994–ல் தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம் ஏற்படுத்தப்பட்டது. வாக்காளர் பட்டியலை தயாரிப்பதற்கான கண்காணிப்பு, வழிகாட்டல் மற்றும் கட்டுப்பாடு ஆகிய பணிகள் தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்தின் பொறுப்பில் இருக்கும்.

### மாநில மறுவரையறை ஆணையம் அமைத்தல்

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994 பிரிவு 28 ஒவ்வொரு மக்கள் தொகைக் கணக்கெடுப்பு முடிவுற்ற பின்பும் ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் வார்டுகளை மறுவரையறை செய்வது அவசியம் என

தெரிவிக்கின்றது. தமிழ்நாடு மறுவரையறை சட்டம், 2017 (தமிழ்நாடு சட்டம் 23, 2017) பிரிவு 12−ல் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையில் தமிழ்நாடு மறுவரையறை ஆணையம் அமைக்கப்பட்டுள்ளது.

**ஊரக உள்ளாட்சி தேர்தல்கள்**

ஊரக உள்ளாட்சி அமைப்புகளில் மறுவரையறை செய்யப்பட்ட வார்டுகளின் அடிப்படையில் 27 மாவட்டங்களில், அதற்கான அறிவிப்பு செய்யப்பட்டு, அம்மாவட்டங்களில் உள்ள ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான சாதாரண தேர்தல்கள் 2019−20 ஆம் ஆண்டில் நிறைவடைந்தன. தமிழ்நாட்டில் புதிய அரசு பொறுப்பேற்ற பிறகு, மீதமுள்ள 9 மாவட்டங்களின் ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான வார்டு மறுவரையறைப் பணிகள் நிறைவடைந்து தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்தால் 06.10.2021 மற்றும் 09.10.2021 ஆகிய நாட்களில் இரு கட்டங்களாக சாதாரண தேர்தல்கள் நடத்தி முடிக்கப்பட்டுள்ளன.

**2.6. ஊராட்சி நிர்வாகத்தில் மகளிரின் பங்கு:**

ஊராட்சி நிர்வாகத்தில் மகளிரின் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்கும் வகையில் அரசு

பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. கடந்த 2019 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் நடத்தப்பெற்ற ஊரக உள்ளாட்சித் தேர்தல்களில் மகளிருக்கான இடஒதுக்கீடு 50% என நிர்ணயிக்கப்பட்டிருப்பினும் அதற்கு அதிகமான பிரதிநிதித்துவத்தினை அதாவது 56% என்கிற அளவில் மகளிர் ஊராட்சி நிர்வாகத்தில் இடம் பெற்றுள்ளனர். மொத்தமுள்ள 12525 கிராம ஊராட்சித் தலைவர்களில் 7012 (56%) இடங்களிலும், 388 ஊராட்சி ஒன்றியங்களில் 242 (62%) இடங்களில் ஊராட்சி ஒன்றியத் தலைவர்களாகவும், மொத்தமுள்ள 36 மாவட்ட ஊராட்சிகளில் 20 (55%) இடங்களில் மாவட்ட ஊராட்சித் தலைவர்களாகவும் பொறுப்பில் உள்ளனர். மேலும் ஊராட்சி நிர்வாகத்தில் உள்ள மொத்தமுள்ள 1,18,978 மக்கள் பிரதிநிதிகளில் 67756 பேர் மகளிர் ஆவர். இது மொத்தத்தில் 56% ஆகும். பெண்களுக்கு அதிகாரமளித்தல் மற்றும் தலைமைத்துவ பண்புகளை பெற்றிடும் வகையில் உரிய பயிற்சிகளை வழங்க அரசு முழு அர்ப்பணிப்புடன் செயல்படுகிறது.

# 3. மாநில அரசுத் திட்டங்கள்

## 3.1 அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்–II

அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் ஒரு முக்கியமான திட்டமாக 2006 முதல் 2011 வரை செயல்படுத்தப்பட்டது. இத்திட்டமானது ஐந்து ஆண்டுகளில் அனைத்து கிராம ஊராட்சிகளுக்கும் தேவையான அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் நோக்கத்தோடு செயல்படுத்தப்பட்டது. ஒவ்வொரு கிராம ஊராட்சிக்கும் தலா ரூ.20 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, தேவையான அடிப்படை வசதிகள் எற்படுத்தப்பட்டன. இத்திட்டத்தின் கீழ், ஒவ்வொரு ஊராட்சியிலும் குளங்கள் புதுப்பித்தல், அறைகலன்கள் மற்றும் புத்தகங்களுடன் கூடிய ஊரக நூலகங்கள் அமைத்தல், புதிய இடுகாடு / சுடுகாடு மற்றும் பழைய இடுகாடு / சுடுகாடுகளில் வசதிகள் ஏற்படுத்துதல் மற்றும் சமுதாய / பள்ளி விளையாட்டு மையங்கள் தேவையான விளையாட்டு உபகரணங்களுடன் அமைத்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

அனைத்து குக்கிராமங்களும் சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சியினை முழுமையாக அடைவதை உறுதி செய்யும் பொருட்டு, தற்போது அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்–II மீண்டும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டம் 2021–22–ம் ஆண்டு முதல் 2025–26–ம் ஆண்டு முடிய ஐந்து ஆண்டுகளில் அனைத்து கிராமங்களிலும் படிப்படியாக நிறைவேற்றப்படும். ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் பல்வேறு திட்டங்களுடனும் மற்றும் ஏறத்தாழ 16 துறைகளின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களையும் ஒருங்கிணைத்து செயல்படுத்தும் வகையில் இத்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

### 3.1.1. கிராம ஊராட்சிகளைத் தேர்வு செய்தல்

அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்–II–ஐ திறம்படச் செயல்படுத்தும் வகையில் ஒவ்வொரு ஆண்டும், ஊராட்சி ஒன்றிய அளவில் சம எண்ணிக்கையிலான கிராம ஊராட்சிகள் (சுமார் 20 விழுக்காடு) தேர்ந்தெடுக்கப்படும். இதன் மூலம் மாவட்டம் மற்றும் மாநில அளவில் இதே அளவீடு

பராமரிக்கப்படும். ஆண்டு ஒன்றிற்கு 20 விழுக்காடு கிராம ஊராட்சிகள் தேர்வு செய்யப்படுவதை உறுதி செய்யவும், ஆண்டிற்கு ரூ.1200 கோடி என்ற ஒதுக்கீட்டு உச்ச வரம்பினை கணக்கில் கொண்டும் மேற்கண்ட விகிதாச்சார முறை கணக்கிடப்பட்டுள்ளது. இம்முறையின் மூலம், 5 ஆண்டுகளுக்கான கிராம ஊராட்சிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளன.

## நிதி ஒதுக்கீடு

அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம்–II–ன் கீழ், குறைந்தபட்ச அடிப்படை நிதியாக தலா ரூ.30 இலட்சம் ஒவ்வொரு கிராம ஊராட்சிக்கும் வழங்கப்படும். மேலும், செயல்திறன் ஊக்க நிதியாக ரூ.5 இலட்சம் ஒவ்வொரு கிராம ஊராட்சிக்கும் வழங்கப்படும். இதைத் தவிர 2 விழுக்காடு நிதியானது நிர்வாகச் செலவுகள், தகவல், கல்வி, தொடர்பு, ஆவணப்படுத்துதல் மற்றும் திறன் வளர்ப்பு சார்ந்த நடவடிக்கைகளுக்கு ஒதுக்கப்படும். மக்கள்தொகை மானியம், குக்கிராம மானியம் ஆகியவற்றைக் கணக்கிடும் போது குக்கிராம எண்ணிக்கைக்கு

50 விழுக்காடும், மக்கள்தொகை எண்ணிக்கைக்கு 50 விழுக்காடும் நிதி வழங்கப்படும்.

செயல் திறன் ஊக்க நிதியானது கீழ்கண்ட 9 காரணிகளின் அடிப்படையில், அவை எய்தப்பட்ட அளவிற்கு ஏற்ப ஒவ்வொரு கிராம ஊராட்சிக்கும் மாவட்ட ஆட்சித் தலைவரால் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்:

1. 100% அனைத்து வணிக ரீதியான நிறுவனங்கள், தொழில் நிறுவனங்கள் மற்றும் இதர நிறுவனங்களின் வரி விதிப்பு நிர்ணயம் செய்தல்.
2. 100% சொத்துவரி மற்றும் வீட்டு வரியை வசூல் செய்தல்.
3. 100% மின்கட்டணம் மற்றும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு குடிநீர் கட்டணங்களை செலுத்துதல்.
4. தெருவிளக்கு மற்றும் குடிநீர் விநியோகம் தொடர்பான மின்சார செலவில் கடந்த 12 மாத சராசரி அளவில் 20% சேமித்தல்.

5. 100% கழிவறைகளை பயன்படுத்துதல் மற்றும் திறந்த வெளியிடங்களில் மலம் கழிக்காத நிலையை உருவாக்குதல்.
6. 100% கிராம ஊராட்சியில் உள்ள நீர்நிலைகள் மற்றும் பொது திறந்தவெளி ஒதுக்கீடு நிலம் (OSR Land) ஆகியவற்றில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுதல்.
7. 100% அனைத்து அரசு மற்றும் தனியார் கட்டடங்களில் மழைநீர் சேகரிப்பு அமைப்புகள் முறையாக பயன்படுத்துவதை உறுதி செய்தல்.
8. திட மற்றும் திரவக்கழிவுகள் மேலாண்மை தொடர்பாக ஓர் முறையான திட்ட வரைவை கிராம ஊராட்சி தயாரித்து இருக்க வேண்டும். அதில் 80% திட்ட பணிகள் முடிக்கப்பட்டு, கிராம ஊராட்சி திட மற்றும் திரவக் கழிவுகள் தேக்கம் இல்லாத ஊராட்சியாக மாற்றப்பட்டு சாம்பல்நிற கழிவுநீர் தேங்காத ஊராட்சியாக இருத்தல் வேண்டும்.

9. கிராம ஊராட்சியின் மொத்த பரப்பளவில், கூடுதலாக 1% மரக்கன்றுகள் (ஒரு ஹெக்டருக்கு 500 வீதம்) நடப்பட்டிருக்க வேண்டும் (ஒவ்வொரு வீட்டிலும் இரண்டு மரக்கன்றுகள் நடப்படுவதை உறுதி செய்ய வேண்டும்).

**ஒருங்கிணைந்த குக்கிராமங்கள் கணக்கெடுப்பு**

குக்கிராமங்களில் உள்ள அடிப்படை உட்கட்டமைப்பு இடைவெளி தேவைகள் குறித்த கணக்கெடுப்பு, தொடர்புடைய அலுவலர்கள், கிராம அளவிலான கூட்டமைப்பின் உறுப்பினர் மற்றும் எந்த கிராம ஊராட்சியில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்–II முதல் கட்டமாக செயல்படுத்தப்படுகிறதோ அந்த கிராம ஊராட்சியின் தலைவர் அடங்கிய குழுவின் மூலம் நடத்தப்படுகிறது.

இக்கணக்கெடுப்பின் மூலம் அந்த கிராம ஊராட்சியில் ஏற்கனவே உள்ள மற்றும் தேவைப்படுகிற அடிப்படை வசதிகள் குறித்து விவரங்கள் சேகரிக்கப்படுகின்றன.

இந்த கணக்கெடுப்பின் அடிப்படையில், ஒவ்வொரு குக்கிராமத்திற்கும் தேவைப்படுகின்ற உட்கட்டமைப்பு வசதிகள் மதிப்பிடப்பட்டு கிராம ஊராட்சியில் உள்ள குக்கிராமங்களின் மிக முக்கியமான தேவைகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டு பணிகள் இறுதி செய்யப்படுகிறது.

இக்கணக்கெடுப்பின் அடிப்படையில், மேற்கொள்ள வேண்டிய பணிகள் இரண்டு விரிவான இனங்களின் கீழ் வகைப்படுத்தப்படுகின்றன. (1) அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் நிதியைப் பயன்படுத்திச் செயல்படுத்தப்படும் பணிகள் (2) ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் பிற திட்டங்கள் மற்றும் பல்வேறு இதர துறைகளின் திட்டங்களை ஒருங்கிணைத்து செயல்படுத்தப்படும் பணிகள்.

**திட்டக் கூறுகள்**

அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம்–II–ன் கீழ் மேற்கொள்ளப்படும் பணிகள்:

**அட்டவணை 3.1**

| வ. எண் | பணியின் வகைகள் | நிதி ஒதுக்கீடு |
|---|---|---|
| 1. | நீர் நிலைகள் புதுப்பித்தல் | 30% |
| 2. | குக்கிராமங்களில் தெருக்கள் / வீதிகள் அமைத்தல் மற்றும் மேம்படுத்துதல் | 25% |
| 3. | சமத்துவ சுடுகாடு / இடுகாடு என்று பரிந்துரைக்கப்பட்ட இடங்களில் தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் மேற்கொள்ளுதல் | 10% |
| 4. | பள்ளிகளில் உட்கட்டமைப்பு மேம்பாடு மற்றும் பொதுப் பயன்பாட்டு கட்டமைப்புகளை உருவாக்குதல் | 15% |
| 5. | பசுமை மற்றும் சுத்தமான கிராமம் | 10% |
| 6. | வாழ்வாதாரம் மற்றும் சந்தைப்படுத்துதல் வசதிகளை ஒருங்கிணைத்தல் | 10% |

மொத்த ஒதுக்கீட்டில் 30% ஒதுக்கீடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்கள் வாழும் பகுதிகளுக்கு வழங்கப்படும்.

இத்திட்டத்திற்கு மாநில அரசு நிதி, பகிர்வு நிதி, ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் திட்டக் கூறு நிதி, உள்ளாட்சி அமைப்புகளின் பங்களிப்பு நிதி மற்றும் மாநில நிதிக் குழு மானியம் ஆகியவற்றின் மூலம் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்–II, 2021–22–ம் ஆண்டில் ரூ.1455 கோடி மதிப்பீட்டில் 2657 கிராம ஊராட்சிகளிலும், 2022–23–ம் ஆண்டில் ரூ.1155 கோடி மதிப்பீட்டில் 2544 கிராம ஊராட்சிகளிலும் ஒரே நேரத்தில் செயல்படுத்தப்படும்.

**3.2. அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் 2022–23–ம் ஆண்டில் ஊரக நூலகங்களைப் புதுப்பித்தல்.**

இந்திய அரசியலமைப்புச் சட்டம் அட்டவணை எண்.XI விதிகள் 243–G மற்றும் 1994–ம் ஆண்டு

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், பிரிவு 111-ல் கிராமங்களில் நூலகங்கள் / வாசிப்பறைகளை திறப்பதற்கும், பராமரிப்பதற்கும் கிராம ஊராட்சிகளுக்கு அதிகாரங்களை வழங்கியுள்ளன. அதன் அடிப்படையில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் 2006-07 முதல் 2010-11 முடிய 12,618 ஊரக நூலகங்கள் துவங்கப்பட்டன.

ஊரக நூலகங்கள் புதிதாகத் துவங்குவது என்பது, புதிய நூலகக் கட்டடம் கட்டுதல், அறைகலன்கள் (Furnitures) வழங்குவது மற்றும் தேவையான, பயனுள்ள புதிய புத்தகங்களை வாங்குவதையும் உள்ளடக்கியது. கடந்த 10 ஆண்டுகளில், மேற்கண்ட நூலகங்கள் பயன்படுத்தப்படாமலும், பராமரிக்கப்படாமலும் இருந்தமையால், அவற்றுள் பெரும்பான்மையானவை பழுது பார்க்கவே இயலாத நிலையில் உள்ளன.

## திட்டத்தின் நோக்கம்

ஊரகப் பகுதிகளில் புத்தகங்கள் வாசிக்கும் பழக்கத்தை உருவாக்கவும், கிராமப்பகுதிகளுக்கு சென்றடையாத பல்வேறு தகவல்கள் மற்றும் புத்தகங்களை வழங்குவதே ஊரக நூலகங்களை ஏற்படுத்துவதன் அடிப்படை நோக்கமாகும். கிராமப்புற இளைஞர்களிடம் சிறப்பான சிந்தனைகளை உருவாக்குவதிலும், அறிவைப் பெருக்குவதிலும் புத்தகங்களின் உலகம் பெரும்பங்கு வகிக்கிறது. மேலும், கிராமப்புற இளைஞர்கள் குடிமைப் பணிகளுக்கான தேர்வுகள், தமிழ்நாடு பணியாளர் தேர்வாணைய தேர்வுகள், இரயில்வே தேர்வுகள் போன்ற போட்டித் தேர்வுகள் எழுதுவதற்கு தங்களை தயார்படுத்திக் கொள்ள நூலகங்கள் உதவுகின்றன.

## அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்ட நூலகங்களை புதுப்பிப்பதற்கான திட்டம்

மேற்கண்ட சிறப்பான நோக்கங்களைச் செயல்படுத்தும் பொருட்டு கிராம ஊராட்சிகளிலுள்ள

12,525 அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்ட நூலகங்களை 2021-22 முதல் 2023-24 முடிய மூன்றாண்டு காலங்களில் பழுது பார்க்க முடிவு செய்யப்பட்டது. ஊரக நூலகக் கட்டடங்கள் பழுதுபார்த்தல் மற்றும் புதுப்பித்தலில் மாற்றுத்திறனாளிகளுக்கான சாய்தளம் மற்றும் கழிப்பறை அமைத்தல், பழுதுபட்ட பயன்படுத்த இயலாத அறைகலன்களை மாற்றுதல் மற்றும் புதிய / கூடுதலான புத்தகங்கள் வழங்குவதும் அடங்கும். அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்ட நூலகங்களில் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ள மூன்றில் ஒரு பங்கான 4116 நூலகங்கள் 2021-22-ம் ஆண்டில் ரூ.91.75 கோடி மதிப்பீட்டில் முழுமையாக புதுப்பிக்கப்படும்.

2021-22-ம் ஆண்டில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்ட நூலகங்களுக்கு தேவையான புதிய மற்றும் கூடுதல் புத்தகங்களை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் தலைமையின் கீழ் உள்ள மாநில அளவிலான குழு தேர்வு செய்யும்.

அரசாணை (நிலை) எண்.177, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (எஸ்.ஜி.எஸ்–2) துறை, நாள்:25.10.2007, அரசாணை (2ப) எண்.66, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (எஸ்.ஜி.எஸ்–1) துறை, நாள்:12.07.2013 மற்றும் அரசாணை (நிலை) எண்.148, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (எஸ்.ஜி.எஸ்–1) துறை, நாள் 14.12.2021–லும், அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்ட நூலகங்களுக்கான கௌரவ நூலகர்களை நியமனம் செய்வது தொடர்பாக விரிவான வழிகாட்டு நெறிமுறைகள் வெளியிடப்பட்டுள்ளன.

2022–23–ம் ஆண்டில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் மூன்றில் ஒரு பங்கான 4116 நூலகங்கள் ரூ.89.50 கோடி மதிப்பீட்டில் புதுப்பிக்கப்படும்.

### 3.3. பெரியார் நினைவு சமத்துவபுரம்

சமூக நீதியை ஏற்படுத்தவும் சாதி சமயமற்ற சமத்துவ சமுதாயத்தை உருவாக்க வேண்டும் எனும்

தந்தை பெரியார் அவர்களின் செய்தியை பரப்பவும் 1997-98-ம் ஆண்டில் பெரியார் நினைவு சமத்துவபுரம் தமிழக அரசால் துவங்கப்பட்டது. இத்திட்டம், இந்திய சுதந்திர பொன்விழா கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாக 1997 ஆம் ஆண்டில் ஊரகப் பகுதிகளில் சமுதாய நல்லிணக்கத்தை முன்னெடுத்துச் செல்லும் வகையில் மாண்புமிகு முன்னாள் தமிழக முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களின் சீரிய சிந்தனையில் உதித்த தனிச்சிறப்பு வாய்ந்த திட்டமாகும். 100 வீடுகளும், அடிப்படை வசதிகளும் கொண்ட மாதிரி கிராமத்தை உருவாக்கிட 8 முதல் 10 ஏக்கர் வரையிலான நிலப்பரப்பு கண்டறியப்பட்டது. இவ்வீடுகள் பல்வேறு இனத்தைச் சேர்ந்த வீடற்ற ஏழை மக்களுக்கு ஒதுக்கப்பட்டது.

தமிழ்நாட்டில் 1997-2001-ம் ஆண்டு வரையில் 145 சமத்துவபுரங்களும், 2008-2011-ம் ஆண்டு வரையில் 93 சமத்துவபுரங்களும் என மொத்தம் 238 சமத்துவபுரங்கள் அமைக்கப்பட்டுள்ளன. 2008-2011-ல் அமைக்கப்பட்ட 93 சமத்துவபுரங்களில், பல்வேறு

காரணங்களினால் 5 சமத்துவபுரங்கள் பயனாளிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்படவில்லை. இச்சமத்துவபுரங்கள் சமூக நீதி மற்றும் சமுதாய நல்லிணக்கத்திற்கான அடையாளச் சின்னங்களாக விளங்குவதால் இவ்வரசு அனைத்து சமத்துவபுரங்களையும் (நகர்ப்புரங்களில் அமைந்துள்ள 15 சமத்துவபுரங்கள் உட்பட) பழுதுநீக்கி சீரமைக்க முடிவு செய்துள்ளது.

சமத்துவபுரங்களை சீரமைக்கும் பணி இரண்டு கட்டங்களாக மேற்கொள்ளப்படவுள்ளது:-

அ) 1997-2001-ல் கட்டப்பட்ட 145 சமத்துவபுரங்களையும், 2008-2011-ல் கட்டப்பட்டு ஒதுக்கீடு செய்யப்படாத 4 சமத்துவபுரங்களையும் சீரமைக்கும் பணி 2021-22-ம் ஆண்டில் முதற்கட்டமாக மேற்கொள்ளப்படவுள்ளது.

ஆ) 2008-2011-ல் கட்டப்பட்டு, மீதமுள்ள 88 சமத்துவபுரங்களை சீரமைக்கும் பணி 2022-23-ம் ஆண்டில் மேற்கொள்ளப்படும்.

சமத்துவபுரங்கள் சீரமைப்பு என்பது ஏற்கனவே கட்டப்பட்ட வீடுகளை பழுதுபார்ப்பதுடன், மிகவும் பழுதடைந்த வீடுகளை புதியதாக கட்டும் பணியையும்,

பொதுவான அடிப்படை வசதிகளான குடிநீர் வசதி, சாலைகள், தெரு விளக்குகள், விளையாட்டு மைதானங்கள், பூங்காக்கள் மற்றும் பிற உட்கட்டமைப்பு வசதிகளான சமுதாயக்கூடம், நூலகம், அங்கன்வாடி, பொது விநியோகக் கடை மற்றும் பள்ளி கட்டடம் போன்றவையும் புதுப்பிக்கப்படும். இவை தவிர, பெரியார் சிலை பராமரிப்பு, புதிய பெரியார் சிலை அமைத்தல் மற்றும் அலங்கார வளைவு பராமரிப்பு ஆகிய பணிகளும் மேற்கொள்ளப்படும்.

## நிதி ஒதுக்கீடு

இச்சமத்துவபுரங்களில் அமைந்துள்ள வீடுகளின் சிறு பழுதுகள் மற்றும் பொது பராமரிப்பிற்கு சராசரியாக வீடு ஒன்றிற்கு ரூ.50,000/- அரசால் ஒருமுறை மட்டுமே வழங்கப்படும். சிறுபழுதுகளை பொறுத்தவரை சம்பந்தப்பட்ட பயனாளிகள் மூலம் செயல்படுத்தப்படும். மேற்கூரை மீள வேய்தல் / வீடுகளை முழுமையாக புதுப்பித்தல் போன்ற நேர்வுகளில் பயனாளிகளின் இசைவுடன், ஒப்பந்தப்புள்ளி முறையை பின்பற்றி பணிகள் மேற்கொள்ளப்படும். இந்த நிதியுதவி ஒரு

முறை மட்டுமே அரசால் வழங்கப்படும் என்பதால், பயனாளிகள் சீரமைப்பு பணிகளில் தங்களை ஈடுபடுத்திக் கொள்வதையும் முறையாக சீரமைப்பு பணி நடைபெறுவதையும் உறுதி செய்யவும் ஒவ்வொரு சமத்துவபுரத்திலும் குடியிருப்போர் நலச் சங்கம் அமைக்கப்படும்.

149 சமத்துவபுரங்களை சீரமைக்கும் பணி ரூ.190 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

## 3.4. சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம்

சட்டமன்ற உறுப்பினர் தமது தொகுதியில் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளில் உள்ள முக்கிய இடைவெளிகளை கண்டறிந்து அவற்றுக்கான பணிகளைத் தேர்வு செய்து செயல்படுத்துவதே சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டம் மாநிலத்தின் ஊரக மற்றும் நகர்ப்புர பகுதிகளில் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ்,

ஒரு தொகுதிக்கு ஒரு ஆண்டிற்கு ரூ.3.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

சட்டமன்ற உறுப்பினர்களால் தேர்வு செய்யப்படும் பணிகளுக்கு அந்தந்த மாவட்ட ஆட்சியர்களால் நிர்வாக அனுமதி வழங்கப்படுவதுடன், பணிகளை செயல்படுத்துவதற்கான செயலாக்க முகமைகளும் நிர்ணயிக்கப்படுகின்றன. 2021-22-ம் ஆண்டில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட செயலாக்கத்திற்கு புதிய வழிகாட்டி நெறிமுறைகள் அரசாணை (நிலை) எண்.145, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மா.அ.தி-1) துறை, நாள் 10.12.2021 மூலம் வெளியிடப்பட்டது.

புதிய வழிகாட்டு நெறிமுறைகளின்படி, சட்டமன்ற உறுப்பினருக்கு ஒதுக்கப்படும் மொத்த நிதி ஒதுக்கீடான ரூ.3 கோடியில் ரூ.90 இலட்சத்திற்கு முன்னுரிமை பணிகளையும், மீதமுள்ள ரூ.2.10 கோடியில் தடை செய்யப்பட்ட பணிகளின் பட்டியலில் இடம் பெறாத எந்த பணியையும் அவர் தம்

விருப்பத்தின் அடிப்படையில் சட்டமன்ற உறுப்பினர்கள் தேர்வு செய்யலாம்.

2022-23-ம் ஆண்டிற்கு இத்திட்டத்திற்கு ரூ.705 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 3.5. நமக்கு நாமே திட்டம்

மக்களின் சுய உதவி, சுயசார்பு எண்ணம் ஆகியவற்றை வலிமைப்படுத்தவும் பரவலாக்கவும் மக்கள் பங்கேற்புடன் கூடிய **நமக்கு நாமே திட்டத்தினை** மாண்புமிகு முன்னாள் தமிழக முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் 1997-98-ம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில் அறிவித்தார்கள். இத்திட்டம் மக்களை வளர்ச்சி பணிகளுக்கான திட்டமிடுதலில் தொடங்கி வள ஆதாரங்களை திரட்டுதல், பணிகளை மேற்கொள்ளுதல் மற்றும் மேற்பார்வை செய்தல் வரை நேரடியாக ஈடுபடுத்தியது. அரசாணை (நிலை) எண்.112, ஊரக வளர்ச்சித் துறை, நாள் 01.06.1998-ல் இத்திட்டம் செயல்படுத்துவதற்கான வழிகாட்டு நெறிமுறைகள் வெளியிடப்பட்டுள்ளன.

தனிநபர்களோ, குழுக்களோ, நிறுவனங்களோ, தனியார் அமைப்புகளோ அல்லது பொது மக்களோ, தேவையின் அடிப்படையில் பணிகளை தேர்வு செய்து மதிப்பீட்டுத் தொகையில் மூன்றில் ஒரு பகுதியை வங்கி வரைவோலையாக மாவட்ட ஆட்சியரிடம் வழங்க வேண்டும். மதிப்பீட்டுத் தொகையில் 50% அல்லது அதற்கு அதிகமான பங்களிப்புத் தொகை வழங்கினால் ஒப்பந்தப்புள்ளியின்றி பங்களித்தவரையோ அல்லது அவரது முகவரையோ பணி மேற்கொள்ள மாவட்ட ஆட்சியரால் அனுமதி வழங்கப்படும்.

2021–22–ம் ஆண்டில் நமக்கு நாமே திட்டத்தினை ஊரகப் பகுதிகளில் செயல்படுத்தும் வகையில் அரசாணை (நிலை) எண்.147, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மா.அ.தி–1) துறை, நாள் 14.12.2021 வாயிலாக ரூ.100 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது. மேலும், இத்திட்ட செயல்பாடு தொடர்பாக விரிவான வழிகாட்டி நெறிமுறைகளையும் அரசு வெளியிட்டுள்ளது.

மேலும், பொதுமக்கள் மற்றும் நிறுவனங்கள், பட்டியல் இனத்தவர் / பழங்குடியினர் குடியிருப்பு பகுதிகளில் அதிக அளவிலான பணிகள் மேற்கொள்வதை ஊக்குவிக்கும் வகையில், அரசாணை (நிலை) எண்.24, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மா.அ.தி-1) துறை, நாள் 08.03.2022-ன் வாயிலாக, பட்டியல் இனத்தவர் / பழங்குடியினர் குடியிருப்புப் பகுதிகளில் பணிகள் மேற்கொள்ள குறைந்தபட்ச பொது மக்களின் பங்களிப்புத் தொகை மதிப்பீட்டுத் தொகையில் ஐந்தில் ஒரு பங்காகத் தளர்த்தியும் அரசு உத்தரவிட்டுள்ளது. மேலும், மதிப்பீட்டுத் தொகையில் மூன்றில் ஒரு பங்கு தொகையை பங்களிப்புத் தொகையாக வழங்கினால் பங்களித்தவரையோ அல்லது அவரது முகவரையோ ஒப்பந்தப்புள்ளியின்றி பணிகள் மேற்கொள்ள மாவட்ட ஆட்சியரால் அனுமதிக்கப்படுமென அரசாணை வழங்கப்பட்டுள்ளது.

2022-23 நிதியாண்டில் இத்திட்டம் ரூ.100 கோடி நிதி ஒதுக்கீட்டில் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### 3.6. ஊரக உட்கட்டமைப்பு– சாலைகள்

தரமான ஊரகச் சாலை இணைப்பு வசதி ஊரக மக்களின் வாழ்க்கைத் தரத்தின் நிலையை எடுத்துக் காட்டுவதாக உள்ளது. ஊரகச் சாலைகளை மேம்பாடு செய்வது மற்றும் பரந்த ஊரகச் சாலைகள் தொகுப்பினை பயன்படுத்தத்தக்க வகையில் பராமரிப்பது ஊரக வளர்ச்சித் துறையின் முக்கியமான பணிகளில் ஒன்றாகும்.

ஊரகச் சாலைகளின் ஒட்டுமொத்த தொகுப்பினுள், இணைப்பு வசதி இல்லாத குக்கிராமங்களுக்கு இணைப்புச் சாலையினை ஏற்படுத்துதல், பேருந்து செல்லும் சாலைகள், சந்தைகள், கல்வி மற்றும் சுகாதார நிலையங்களை இணைக்கும் முக்கிய இணைப்பு சாலைகளை மேம்பாடு செய்வது இத்துறையின் முன்னுரிமைகளாகும்.

தமிழ்நாட்டில் 1.55 இலட்சம் கி.மீ நீளம் கொண்ட கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகள் உள்ளன. ஊரகச் சாலைகளின் தொகுப்பு, பல்வேறு வகையான மேற்பரப்புகளை கொண்டதாக உள்ளது. இவற்றில் 68% சாலைகள் தார் இடப்பட்ட

சாலைகளாகவும், 32% சாலைகள் தார் இடப்படாத சாலைகளாகவும் உள்ளன. முன்னுரிமை அடிப்படையில் தார் இடப்பட்ட சாலைகளை வலுப்படுத்துவது மற்றும் பராமரிப்பது, தேவையின் அடிப்படையில் தார் இடப்படாத சாலைகளை தரம் உயர்த்துவது இத்துறையின் நோக்கமாகும். பல்வேறுபட்ட மேற்பரப்பின் வகையின் அடிப்படையில், ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளின் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 3.2**

| வ. எண். | சாலையின் மேற்பரப்பின் வகை | ஊராட்சி ஒன்றிய சாலைகள் | ஊராட்சி சாலைகள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| | | நீளம் (கி.மீ) | | |
| 1. | தார்ச்சாலை | 25,720 | 76,369 | 1,02,089 |
| 2. | சிமெண்ட் சாலை | 319 | 3,246 | 3,565 |
| 3. | ஈரடுக்கு கப்பிச்சாலை | 140 | 1,771 | 1,911 |
| 4. | ஓரடுக்கு கப்பிச்சாலை | 360 | 9,575 | 9,935 |
| 5. | சரளைக் கல் சாலை | 149 | 4,622 | 4,771 |
| 6. | மண் சாலை | 901 | 32,179 | 33,080 |
| **மொத்தம்** | | **27,589** | **1,27,762** | **1,55,351** |

## அட்டவணை 3.3
## 2021–22–ம் ஆண்டில் சாலை மேம்படுத்த ஆகும் தொகை

| வ. எண். | மேற்பரப்பின் விவரங்கள் | கிலோ மீட்டர் ஒன்றுக்கு ஆகும் தொகை (ரூ.இலட்சத்தில் ) |
|---|---|---|
| 1. | மண் சாலையிலிருந்து தார்ச் சாலையாக மாற்ற | 49.11 |
| 2. | சரளை சாலையிலிருந்து தார்ச் சாலையாக மாற்ற | 43.02 |
| 3. | ஓரடுக்கு கப்பிச் சாலையிலிருந்து தார்ச் சாலையாக மாற்ற | 27.06 |
| 4. | ஈரடுக்கு கப்பிச்சாலையிலிருந்து தார்ச் சாலையாக மாற்ற | 17.84 |

### 3.7. தமிழ்நாடு ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் (TNRRIS)

தமிழ்நாடு ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் நோக்கம் ஊரகச் சாலைத் தொகுப்பினை மேம்படுத்துதல் மற்றும் வலுப்படுத்துதலில் உள்ள இடைவெளியை நிரப்புதல் ஆகும். இத்திட்டத்திற்கான

நிதி மாநில நிதிக்குழு மானிய நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

**தமிழ்நாடு ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் சிறப்பு அம்சங்கள்**

- இத்திட்டம் இரண்டு பிரிவுகளாக செயல்படுத்தப்படுகிறது. தார் இடப்படாத சாலைகளை தார்ச் சாலைகளாக மேம்பாடு செய்தல், ஏற்கனவே உள்ள பழுதடைந்த தார்ச் சாலைகளை வலுப்படுத்துதல் ஆகியவை தமிழ்நாடு ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் எடுத்துக் கொள்ளப்படுகின்றன.
- மாவட்டங்களில் உள்ள பல்வேறு வகையான சாலைகளை தேவையின் அடிப்படையில் தேர்வு செய்ய தேவையான நெகிழ்வுத்தன்மையை தமிழ்நாடு ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் வழங்குகிறது.

இத்திட்டத்தின் கீழ், இதுவரை 29,163 கி.மீ நீளமுள்ள சாலைகள் ரூ. 6427.23 கோடி மதிப்பீட்டில் எடுக்கப்பட்டுள்ளன. 2021-22-ம் ஆண்டில், 3473 கி.மீ நீளமுள்ள சாலைகள் முடிக்கப்பட்டுள்ளன மற்றும் ரூ.998 கோடி செலவினம் செய்யப்பட்டுள்ளது.

### 3.8. நபார்டு–ஊரக உட்கட்டமைப்பு வளர்ச்சி நிதி (RIDF) மூலமாக சாலைகள் அமைத்தல்

ஊரக உட்கட்டமைப்பு வசதியினை மேம்பாடு செய்வதில் மாநில அரசுகளுக்கு உதவிடும் வகையில், மாநில அரசுகள் செயல்படுத்தும் ஊரக உட்கட்டமைப்பு திட்டங்களுக்கு நிதி வழங்கிட நபார்டு வங்கியின் கீழ், ஊரக உட்கட்டமைப்பு வளர்ச்சி நிதியினை ஒன்றிய அரசு 1995–96–ம் ஆண்டு அறிவித்தது. இதில் 80% கடனாகவும், 20% மாநில அரசின் பங்காகவும் உள்ளது.

ஊரகப் பகுதிகளில் ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளில் மிகவும் பழுதடைந்த தார் சாலைகளை மேம்படுத்துதல், தார் இடப்படாத சாலைகளை தேவையின் அடிப்படையில் தார் சாலைகளாக தரம் உயர்த்துதல் மற்றும் பாலங்கள் அமைத்தல் மூலம் ஊரக பகுதிகளில் அனைத்து பருவ காலங்களிலும் பயன்படும் வகையில் சாலைகள் அமைப்பது இத்திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது.

**இத்திட்டத்தின் சிறப்பு அம்சங்கள்**

- பேருந்துகள் / சிற்றுந்துகள் செல்லும் சாலைகள், விவசாயத்திற்குப் பயன்படும் சாலைகள், தொழில் மற்றும் வணிக மையங்களுக்குச் செல்லும் சாலைகள், சுற்றுலா பகுதிகள் மற்றும் வழிபாட்டுத் தலங்களுக்குச் செல்லும் சாலைகள், மருத்துவமனை, பள்ளி மற்றும் இதர தேவைகளை இணைக்கும் சாலைகள் ஆகியவற்றிற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு, இத்திட்டத்தின் கீழ் சாலைகள் தேர்வு செய்யப்படுகின்றன.
- குறைந்தபட்சம் 1 கி.மீ நீளமுள்ள சாலை இத்திட்டத்தின் கீழ் மேம்பாடு செய்ய எடுத்துக் கொள்ளப்படுகிறது.

இந்த திட்டத்தின் கீழ், இதுவரை 19,063 கி.மீ நீளமுள்ள கிராம ஊராட்சி / ஊராட்சி ஒன்றிய சாலைகள் மேம்படுத்துதல் மற்றும் 431 பாலங்கள் அமைத்தல் ஆகிய பணிகள் ரூ.4,053.63 கோடி மதிப்பீட்டில் எடுக்கப்பட்டுள்ளன.

2021–22 ஆம் ஆண்டில், 98.45 கி.மீ. நீளமுள்ள சாலைகள் மற்றும் 45 பாலங்கள் முடிக்கப்பட்டுள்ளன

மற்றும் ரூ.50.80 கோடி செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## 3.9. பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் (SIDS)

ஊரகப் பகுதிகளிலுள்ள ஊராட்சி ஒன்றிய ஆரம்ப, நடுநிலைப் பள்ளிகள் மற்றும் நகரப் பகுதிகளில் அமைந்துள்ள ஊராட்சி ஒன்றிய பள்ளிகளில், உட்கட்டமைப்பு வசதிகளை பராமரிக்கும் பொருட்டு 2021–22–ம் ஆண்டு முதல் இத்திட்டம் ரூ.115.00 கோடி நிதி ஒதுக்கீட்டில் 'பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டம்' என மீள அறிமுகப்படுத்தப்பட்டது.

ஊரக மற்றும் நகரப் பகுதிகளிலுள்ள ஊராட்சி ஒன்றிய ஆரம்ப, நடுநிலைப் பள்ளிகளில் உள்ள உட்கட்டமைப்பு வசதிகளைப் பழுதுபார்த்தல், புனரமைத்தல் போன்ற பணிகளை மேற்கொள்ளுதல், மேலும் நவீன வசதிகளை பள்ளிகளுக்கு வழங்குவது இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

2022–23 நிதியாண்டில் இத்திட்டம் ரூ.115 கோடி நிதி ஒதுக்கீட்டில் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

## 3.10. சமூக பொருளாதார மேம்பாட்டுத் திட்டம்

தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில், நக்சலைட்டுகளின் தீவிரவாத நடவடிக்கைகளால் ஏற்பட்ட பிரச்சனைகளைச் சரிசெய்திட பின்தங்கிய மாவட்டங்களான தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரியில் சமூக பொருளாதார மேம்பாட்டுத் திட்டம் 2003–04–ம் ஆண்டு துவங்கப்பட்டது.

இத்திட்டத்தின் கீழ் தொலைதூர பகுதிகளுக்கு இணைப்பு, கல்வி மற்றும் சுகாதாரம் தொடர்பான உட்கட்டமைப்பு, வாழ்வாதாரம் மற்றும் வேலைவாய்ப்பு உருவாக்குதல் போன்ற சமூக பொருளாதார நிலையினை வலுவூட்டிடும் வகையிலான பணிகளை மேற்கொண்டு, தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் நக்சலைட்டுகளால் பாதிப்பு ஏற்பட்ட பகுதிகளில் முன்னேற்றத்தினை விரைவுபடுத்திட ரூ.750 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

## 3.11. முன் மாதிரி கிராம விருது

கிராம ஊராட்சிகள், திறந்த வெளியில் மலம் கழித்தலற்ற நிலையின் கூடுதல் நிலையினை அடைந்திட முன்முயற்சிகள் மேற்கொள்வதை ஊக்குவிக்கவும், சுத்தமான பசுமை மற்றும் இயற்கையோடு இணைந்த கிராம ஊராட்சிகளை

அங்கீகரித்து மேலும் சிறப்பாக செயல்படத் தூண்டும் வகையில், சுத்தம் மற்றும் சுகாதாரத்தை அடிப்படையாகக் கொண்டு கிராம ஊராட்சிகளுக்கென "முன் மாதிரி கிராம விருது" தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

இவ்விருதிற்கென, ஒரு மாவட்டத்திற்கு ஒரு கிராம ஊராட்சி வீதம் தேர்ந்தெடுக்கப்பட்டு, தலா ரூ.7.50 இலட்சம் ரொக்கப்பரிசும், கேடயமும் வழங்குவது தொடர்பான "முன் மாதிரி கிராம விருது" குறித்த அரசாணை (நிலை) எண்.141, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (ப.ரா.2) துறை, நாள் 02.12.2021 அன்று வெளியிடப்பட்டுள்ளது. மேலும், மாநில அளவில் சிறப்பாக செயல்படும் மூன்று கிராம ஊராட்சிகள் தேர்வு செய்யப்பட்டு, தலா ரூ.15.00 இலட்சம் ரொக்கப் பரிசுடன், கேடயமும் வழங்கிட இவ்வரசாணையில் உரிய உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சிறந்த கிராம ஊராட்சிகளை தேர்வு செய்யும் பணி நடைபெற்று வருகிறது. எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 15-ம் தேதி சுதந்திர தினக் கொண்டாட்டத்தின் போது இவ்விருதுகள் வழங்கப்படும்.

# 4. ஒன்றிய அரசுத் திட்டங்கள்

## 4.1. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம்

### 4.1.1. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் தமிழ்நாட்டில் செயல்படுத்துதல்

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் பிப்ரவரி 2006–ல் இந்திய அரசால் தொடங்கப்பட்டது. இது ஒவ்வொரு நிதியாண்டிலும் ஊரக குடும்பங்களுக்கு 100 நாட்கள் வேலைவாய்ப்பை அளிக்கும் திட்டமாகும்.

### 4.1.2 திட்டத்தின் சிறப்பம்சங்கள்

பத்து முக்கியச் சட்ட உரிமைகள் பின்வருமாறு:

i. வேலை அட்டை பெறுவதற்கான (Job card) உரிமை
ii. வேலை கோரிய பதினைந்து தினங்களுக்குள் வேலை பெறுதலுக்கான உரிமை
iii. வேலையில்லாப்படி பெறுவதற்கான உரிமை
iv. தேவையான பணிகளைத் தேர்ந்தெடுத்து தொகுக்கும் உரிமை
v. 5 கி.மீ. தொலைவிற்குள் வேலை பெறுதலுக்கான உரிமை

vi. பணித்தளத்தில் அடிப்படை வசதிகள் பெறுவதற்கான உரிமை
vii. அறிவிக்கப்பட்ட ஊதியம் பெறுவதற்கான உரிமை
viii. பதினைந்து தினங்களுக்குள் ஊதியம் பெறுவதற்கான உரிமை
ix. காலங்கடந்து ஊதியத் தொகை வழங்கினால் இழப்பீடு பெறுவதற்கான உரிமை
x. குறித்த காலத்திற்குள் குறைகள் மீது தீர்வு காணல் மற்றும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்ட அனைத்து செலவுகள் மீது தொடர் சமூகத் தணிக்கை மற்றும் சமூக தணிக்கை மேற்கொள்ளுதல்.

1) மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தில் "பணி வாரம்" என்பது ஒவ்வொரு வாரமும் வியாழக்கிழமை வேலை ஆரம்பித்து அடுத்த புதன்கிழமை வரை வேலை நடைபெறுவதாகும். ஊராட்சிகளிலுள்ள தொகுப்புகளில் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.
2) திறன்சாரா தொழிலாளர்களுக்கான ஊதியம் ஊரக விலைப் பட்டியலின் அடிப்படையில் நிர்ணயம் செய்யப்படுகிறது. மகாத்மா காந்தி

தேசிய ஊரக வேலை உறுதி சட்டத்தின் திருத்திய அட்டவணை–I–ன்படி திறன்சாரா தொழிலாளர்களுக்கான விலைப் பட்டியலின்படியான ஊதியமானது, ஓர் வயதுவந்த நபர் ஒரு மணி நேர உணவு இடைவேளையுடன் கூடிய எட்டு மணி நேர வேலைக்கு பெறக்கூடியதற்கு (அதாவது ஏழு மணி நேர செயல் விளைவுடைய வேலை) சமமாக நிர்ணயிக்கப்படுகிறது.

3) மாற்றுத் திறனாளிகளுக்கென சிறப்பு ஊரக விலைப்புள்ளி பட்டியலைப் பின்பற்றி அரசாணை வெளியிடப்பட்டு முறையாக பின்பற்றப்படுகிறது. இவ்வரசாணையில் மாற்றுத் திறனாளிகளுக்கென மண் வேலை தொடர்பான மற்றும் இதர சிறப்பு பணிகள் வழங்கிட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

4) ஒப்பந்ததாரர்கள் மற்றும் உடல் உழைப்பை தவிர்க்கும் இயந்திரங்களுக்கு அனுமதி இல்லை.

5) அனைத்து கட்டுமானப் பணிகளிலும் தொழிலாளர் ஊதியக்கூறிற்கு ஊரக விலைப்புள்ளி பட்டியலையும், பொருள் செலவினக்கூறிற்கு பொதுப் பணித்துறை விலைப்புள்ளி பட்டியலையும் கட்டாயமாக பின்பற்ற வேண்டும்.

6) குடும்பத்தில் உள்ள ஒவ்வொரு உறுப்பினரும் வேலைக்கு விண்ணப்பிக்கவும், அவ்வேலையினைப் பெறுவதற்கும் வேலை அட்டையினைப் பெற உரிமை பெற்றுள்ளனர். வேலை அட்டை ஒவ்வொரு ஐந்து ஆண்டிற்கும் ஒரு முறை புதுப்பிக்கப்படுகிறது. 01.04.2022–லிருந்து ஐந்து வருடங்களுக்குச் செல்லத்தக்க புதிய வேலை அட்டைகள் 100 சதவிகித சரிபார்ப்பிற்குப் பின் அனைத்து செயற்படும் (active) தொழிலாளர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

7) 2017–18–ம் ஆண்டிலிருந்து 12,524 கிராம ஊராட்சிகளிலும் மின்னணு வருகைப் பதிவேடு (e–MR) பயன்படுத்தப்பட்டு வருகிறது.

8) 2021–22–ம் ஆண்டிற்கான அறிவிக்கப்பட்ட ஊதியம் நாளொன்றுக்கு ரூ.273 ஆக நிர்ணயிக்கப்பட்டது. தற்போது 2022–23–ம் ஆண்டிற்கான அறிவிக்கப்பட்ட ஊதியம் 01.04.2022 முதல் ஆண்கள் மற்றும் பெண்கள் என்ற வேறுபாடின்றி தமிழ்நாட்டிற்கு நாளொன்றுக்கு ரூ.281 என திருத்தி அமைக்கப்பட்டுள்ளது.

9) பணித்தளம் 5 கி.மீ. தூரத்திற்கு மேல் இருக்கும் பட்சத்தில், போக்குவரத்து மற்றும் வாழ்வினத் தொகையாக ஊதியத்தில் 10 விழுக்காடு கூடுதலாக வழங்கப்படும். இருப்பினும், தமிழ்நாட்டில் வேலை நடைபெறும் இடம் 2 கி.மீ. சுற்றளவிற்குள் இருக்குமாறு பணிகள் தேர்ந்தெடுக்கப்படுகின்றன.

10) பணித்தளத்தில் குடிநீர், முதலுதவிப்பெட்டி, நிழற்கூடங்கள் போன்ற வசதிகள் செய்து தரப்படுகிறது.

11) கிராம சபையில் "கிராம சமூகத் தணிக்கையாளர்கள்" அதாவது மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்களிலிருந்து பயிற்சி பெற்ற கிராம வள நபர்கள் மூலம் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டப் பணிகள் சமூகத் தணிக்கை செய்யப்படுகின்றது.

12) கிராம சபைக் கூட்டங்களில் கலந்து கொள்வதற்கும், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் அந்தந்த கிராம ஊராட்சிகளில் எடுத்து செய்ய இருக்கும் பணிகளின் தொகுப்பு மற்றும் முன்னுரிமை அடிப்படையில் பணிகளை தேர்வு செய்வதற்கும்

அனைத்து தொழிலாளர்களுக்கும் உரிமை உள்ளது.

13) வேலை நடைபெறும் அனைத்து இடங்களிலும் வேலையின் பெயர், அனுமதிக்கப்பட்ட தொகை, பணி நடைபெற்ற காலம் போன்ற விவரங்களுடன் கூடிய குடிமக்களுக்கான தகவல் பலகை (Citizen Information Board) வைக்கப்படுகிறது.
14) 67.69 இலட்சம் ஊரக குடும்பங்களில் உள்ள 79.70 இலட்சம் தொழிலாளர்களுக்கு வேலை வழங்கப்பட்டுள்ளது.

### 4.1.3. நிதி விடுவிப்பு

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் மூன்று முக்கிய நிதிக் கூறுகள் பின் வருமாறு.

1. திறன்சாரா தொழிலாளர்களுக்கான ஊதியக்கூறு (100% ஒன்றிய அரசு)
2. கட்டுமான பொருட்கள் மற்றும் பணிகளுக்கான பொருட்கூறு (75% ஒன்றிய அரசு மற்றும் 25% மாநில அரசு)

3. அலுவலர்களுக்கான ஊதியம் மற்றும் இதர செலவினங்களுக்கான நிர்வாக செலவின கூறு (100% ஒன்றிய அரசு)

திட்ட வழிகாட்டி நெறிமுறைகளின்படி மொத்த செலவினத்தில் பொருட்கூறுக்கான செலவினம் 40%–க்கு மேல் மேற்கொள்ளப்படக்கூடாது.

### 4.1.4. குறித்த காலத்திற்குள் வங்கிகள் மூலம் ஊதியம் வழங்குதல்

2021–22–ம் நிதியாண்டில் 100 சதவிகித ஊதியத் தொகை பதினைந்து நாட்களுக்குள் வழங்கப்பட்டு வருகிறது. குறித்த காலத்திற்குள் ஊதியம் வழங்குதலை (நிலை–I) T+8 ஆகவும் மற்றும் (நிலை–II) T9-T15 ஆகவும் ஒன்றிய அரசு வரையறுத்துள்ளது.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத் தொழிலாளர்களுக்கு, 07.11.2016 முதல் 100% ஊதியத் தொகை தேசிய மின்னணு நிதி மேலாண்மை முறை (Ne–FMS) மூலம் அவர்களது வங்கிக்

கணக்குகளில் ஒன்றிய அரசால் நேரடியாக வரவு வைக்கப்படுகிறது.

இதைப் போலவே மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் 01.04.2017 முதல் நிர்வாகச் செலவினம் மற்றும் பொருட்கூறு செலவினமும் மின்னணு நிதி மேலாண்மை முறை (e–FMS) மூலம் மேற்கொள்ளப்படுகிறது.

### 4.1.5. அனுமதிக்கப்பட்ட பணிகள்

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதிச் சட்ட அட்டவணை–I–ன்படி 4 பிரிவுகளாக அனுமதிக்கப்பட்ட பணிகள் வகைப்படுத்தப்பட்டுள்ளன. அட்டவணைப்படி குறிப்பிடப்பட்டுள்ள பல்வேறு பணிகளை அடிப்படையாகக் கொண்டு, மேலாண்மை தகவல் மைய அமைப்பு மூலம் இத்திட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்ட 262 பணிகளில் 182 பணிகள் இயற்கை வள மேலாண்மைப் பணிகளாகும். 164 பணிகள் வேளாண்மை மற்றும் வேளாண்மை சார்ந்த பணிகளாகும்.

### 4.1.6 இயற்கை வள மேலாண்மை பணிகள் / விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த செயல்பாடுகள்

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் பசுமை மற்றும் வறட்சி தடுப்பு நடவடிக்கைகளாக பெருமளவு மரக்கன்று நடுதல் மற்றும் சாலையோர மரக்கன்று நடுதல் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், தடுப்பணைகள், மீள் நிரப்பு குழிகள், கசிவு நீர்க் குட்டைகள், அகழிகள், பண்ணைக் குட்டைகள், உறிஞ்சுக் குழிகள் ஆகிய செயற்கை மீள் நிரப்பு கட்டமைப்புகள் அமைப்பதன் மூலம் நிலத்தடி நீர் அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. வரத்துக் கால்வாய்கள் மற்றும் பாரம்பரிய நீர் நிலைகள் போன்றவை புனரமைக்கப்பட்டு அவை முழு கொள்ளளவை எட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

ஒன்றிய ஊரக வளர்ச்சி அமைச்சகத்தின் வழிகாட்டி நெறிமுறைகளின்படி மொத்த

செலவினத்தில் 65%-க்கு குறையாமல் இயற்கை வள மேலாண்மை பணிகளுக்கும் 60%-க்கு குறையாமல் வேளாண்மை மற்றும் சார் பணிகளுக்கு செலவிட வேண்டும். நமது மாநிலம் தனிநபர் மற்றும் சமுதாயம் சார்ந்த இயற்கை வள மேலாண்மை பணிகளை குறிப்பாக நீர் பற்றாக்குறை வட்டாரங்களில் கவனம் செலுத்துகிறது. 2021-22 ஆம் ஆண்டில் 3,38,835 இயற்கை வள மேலாண்மை பணிகள் ரூபாய்.7403.92 கோடியில் எடுக்கப்பட்டு 2,07,119 பணிகள் முடிக்கப்பட்டுள்ளது இது மொத்த செலவினத்தில் 78.20% ஆகும்.

### 4.1.7. நீர் வள மேலாண்மைக்கான 100 நாள் சிறப்பு முயற்சிகள் (2021)

அதிக அளவில் நீர் சேமிப்பு பணிகளை மேற்கொள்ளும் விதமாக செப்டம்பர்-நவம்பர் 2021-ல் 100 நாள் சிறப்பு முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இதன் விளைவாக 4,057 தடுப்பணைகள், 16,784 பண்ணைக்குட்டைகள், 1,562 கசிவு நீர்குட்டைகள்,

5,681 நீர் அகழிகள், 6,283 அமிழ்ந்த நீர்குட்டைகள் போன்ற 27,973 பணிகள் சிறப்பு முயற்சியாக மாநிலம் முழுவதும் செய்து முடிக்கப்பட்டது. இம்முயற்சி ஒன்றிய அரசின் 'ஜல் சக்தி அபியான்–மழை நீர் சேகரிப்பு' திட்டத்தின் ஒரு பகுதியாக மேற்கொள்ளப்பட்டது.

### 4.1.8. நீர் வள மேலாண்மைக்கான 75 நாள் சிறப்பு முயற்சிகள் (2022)

2022–23 ஆம் ஆண்டில், மார்ச் 22, 2022 (உலக நீர் தினம்) முதல் ஜுன் 5, 2022 (உலக சுற்றுச்சூழல் தினம்) வரையிலான காலத்தில் 75 நாள் சிறப்பு முயற்சியாக 2 குறிக்கோள்களுடன் நீர் வள பணிகள் எடுக்கப்படும்:–

1. தமிழ்நாட்டில் பருவ மழை காலம் தொடங்கும் முன் 2,000 தடுப்பணைகள், 2,500 பண்ணைக்குட்டைகள், 4,500 நீர் அகழிகள், 4,000 மேற்கூரை மழை நீர் சேகரிப்பு அமைப்புகள் போன்ற 23,000 பணிகள் முடிக்கப்பட்டு ஊரக பகுதிகளில் ஒவ்வொரு துளி மழை நீரையும் சேகரிப்பது உறுதி செய்யப்படும்.

2. அடுத்த 75 நாட்களில், ஒவ்வொரு வட்டார நாற்றங்கால் பண்ணைகளிலும் 10,000 நாற்றங்கால்கள் வளர்க்கப்படும். இவ்வாறு வளர்க்கப்படும் நாற்றங்கால்களானது 75 நாட்களில் குறைந்தது 3 அடி அல்லது அதற்கு மேற்கொண்டு வளரும் என்பதால், அதன் பிழைக்கும் தன்மை கூடுதலாக இருக்கும். இவ்வாறு மரம் வளர்க்கும் பணியானது தென்மேற்கு பருவ மழை மாவட்டங்களில் ஜூன்–ஜூலை மாதங்களிலும், வடகிழக்கு பருவ மழை மாவட்டங்களில் செப்டம்பர் – அக்டோபர் மாதங்களிலும் தொடங்கப்படும்.

இவ்வாறு அறிவியல் முறையில் மரங்கள் வளர்க்கப்படும் போது 38,00,000 மரக்கன்றுகள் அக்டோபர் 2022 ஆம் மாதத்திற்குள் நடவு செய்யப்படும்.

**4.1.9. கண்காணிப்பு முறை**

**தேசிய கைபேசி கண்காணிப்பு முறை (National Mobile Monitoring System)**

தேசிய கைபேசி கண்காணிப்பு செயலி 21, மே 2021 அன்று ஒன்றிய அரசால்

அறிமுகப்படுத்தப்பட்டு அனைத்து மாநிலங்களும் தினசரி கட்டாயம் பயன்படுத்த அறிவுறுத்தியுள்ளது. மேலும், இச்செயலி மூலம் தினமும் இரு முறை தொழிலாளர்களது வருகையினை பணித்தளத்தில் இருந்து பதிவு செய்வதன் மூலம் ஓர் வெளிப்படை தன்மை ஏற்படுத்தப்படுகிறது. இத்திட்ட தொழிலாளர்களின் தினசரி வருகைப்பதிவினை இச்செயலி மூலம் மாநில அளவில் நடைபெற்று வரும் அனைத்து பணிகளும் எடுக்கப்படுவதைக் கண்காணித்து உறுதிசெய்யும் பணியில் களநிலை அலுவலர்களும் ஈடுபட்டுள்ளனர். இதற்காக அனைத்து பணித்தள பொறுப்பாளர்களுக்கும் உரிய பயிற்சி வழங்கப்பட்டுள்ளதோடு வட்டார / மாவட்ட அளவிலாள அலுவலர்கள் தினசரி முன்னேற்றத்தினை கண்காணிக்க உணர்த்தப்பட்டுள்ளனர்.

### பகுதி அலுவலர் ஆய்வு செயலி

பகுதி அலுவலர்கள் ஆய்வு செயலி 21.05.2021 அன்று ஊரக வளர்ச்சித் திட்டங்களை

திறம்பட கண்காணிப்பதற்காக ஒன்றிய அரசால் தொடங்கப்பட்டது.

இச்செயலி மாநில அலுவலர்கள் தங்களது கள ஆய்வு முடிவுகளை இணையதளம் மூலம் பதிவு செய்ய வழிவகுக்கும். இது ஊரக வளர்ச்சித் துறையால் தொடங்கப்பட்ட அனைத்து திட்டங்களுக்கும் நேரம் முத்திரையிடப்பட்ட மற்றும் புவிக்குறியீடு செய்யப்பட்ட புகைப்படத்தை பதிவு செய்ய அனுமதிக்கும். மேலும் கள ஆய்வு விவரங்களை தங்குதடையின்றி தெரிவிப்பதற்கும் இவ்விவரங்களை உயர் அலுவலர்கள் rural.nic.in இணையதளத்தின் மூலம் காண்பதற்கும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

### 4.1.10. வெளிப்படை தன்மை

#### சமுக தணிக்கை

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்ட தணிக்கை விதிகள் 2011 பிரிவு 3(1)–ன்படி ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும் இச்சட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்படும் பணிகளை மாநில அரசாங்கம்

குறைந்தபட்சம் ஆறு மாதங்களுக்கு ஒரு முறை சமூக தணிக்கை மேற்கொள்ள வழிவகை செய்யவேண்டும். சமூக தணிக்கை வள அலுவலர்களின் வழிகாட்டுதலின் அடிப்படையில், மக்களால் சமூக தணிக்கை மேற்கொள்ளப்படுகிறது. நிதி செலவினம் மட்டுமல்லாது திட்டத்தின் செயல்முறை, சமூக ஏற்றத்தாழ்வு மற்றும் பணித்திறன் ஆகிய கோணங்களிலிருந்து ஆய்வு செய்வது சமூக தணிக்கையின் நோக்கமாகும். சமூக தணிக்கை, தகவல் பரிமாற்றம், கல்வி, தகவல் தொடர்பு ஆகியவற்றின் மூலம் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புடைமையை அதிகப்படுத்தவும், வளர்ச்சித் திட்டங்களின் செயல்பாடுகளான திட்டமிடுதல், பணிகளை தேர்வு செய்தல், அமல்படுத்துதல், செயல்படுத்துதல் மற்றும் மதிப்பீடு செய்தல் ஆகியவற்றில் பொது மக்களின் பங்கேற்பினை அதிகப்படுத்தவும் உதவுகிறது.

**சமூக தணிக்கைக்கான நிறுவன அமைப்புகள்**

தமிழ்நாடு சமூக தணிக்கை சங்கமானது (SASTA) தமிழ்நாடு சங்கங்கள் பதிவு சட்டம் 1975–ன் கீழ் பதிவு

செய்யப்பட்டு இந்திய அரசின் வழிகாட்டுதல்படி இயங்குகிறது. ஊரக வளர்ச்சி துறை சாராத இயக்குனர் ஒருவர் தலைமையில் இது செயல்படுகிறது. இணை இயக்குநர் மற்றும் மாநில கண்காணிப்பாளர்கள் இந்த சமூக தணிக்கை கிராம அளவில் நடைபெறுவதை ஊக்கப்படுத்துவதற்கும் கண்காணிப்பதற்கும் உள்ளனர்.

மாவட்ட வள பயிற்றுநர்கள் மற்றும் வட்டார வள பயிற்றுநர்கள் ஒவ்வொரு கிராம வள பயிற்றுநர்கள் பயிற்சி அளித்து சமூக தணிக்கை நடைபெற உதவுவார்கள். ஒவ்வொரு ஊராட்சியிலும் கிராம வள பயிற்றுநர்கள் கிராம சபையால் தேர்வு செய்யப்பட்டு, அவர்களுக்கு எதேச்சையாக கிராமங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டு, சமூக தணிக்கை மேற்கொள்வார்கள்.

**சமூக தணிக்கை முறை:**

கிராம வள பயிற்றுநர் குழுவானது வட்டார வள பயிற்றுநர்களால் பயிற்றுவிக்கப்பட்டு வட்டார செயல் அலுவலர் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலரிடமிருந்து பணி வருகை, பண பட்டுவாடா அறிக்கை, அளவீடு

புத்தகங்கள் மற்றும் வேலை உத்தரவு ஆகியன பெற்று, பயனாளிகளின் வீடுதோறும் ஆய்வு, பணித்தள ஆய்வு, சொத்துக்கள் உருவாக்கப்பட்டதை உறுதி செய்தல் மற்றும் பணப்பட்டுவாடா செய்யப்பட்டதன் சரித்தன்மை ஆகியற்றை களப்பணியின்போது செய்யும். கிராம வள பயிற்றுநர் குழுவானது அறிக்கை தயார் செய்து சமூக தணிக்கைக்காக கூட்டப்படும் சிறப்பு கிராம சபைக்கு அளிக்கும்.

கிராம சபையால் அங்கீகரிக்கப்பட்ட சமூக தணிக்கை அறிக்கை மாவட்ட ஆட்சியர் தலைமையிலான உயர் மட்ட குழுவில் வைக்கப்பட்டு மேல் நடவடிக்கைக்காக உத்தரவுகள் பிறப்பிக்கப்படும்.

**சமூக தணிக்கையின் தாக்கம்**

சமூக தணிக்கையினை, திட்டத்தின் பயனாளிகளே மேற்கொள்வதால், சமூக தணிக்கையானது திட்டப் பயனாளிகளிடையேயும், திட்டத்தினை செயல்படுத்துபவர்கள் மத்தியிலும் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. சமூக தணிக்கைக்காக ஏற்பாடு செய்யப்படும் சிறப்பு கிராம சபையில்

நடைபெறும் விவாதமானது, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்ட செயல்பாட்டின் பொது கருத்து கேட்பினை ஒத்து இருப்பதால், இத்திட்டத்தில் பணிபுரிபவர்கள் தங்களுடைய உரிமைகள் மற்றும் பலன்களை அறிந்துகொள்ளும் விழிப்புணர்வு கூட்டமாகவும் சிறப்பு கிராம சபை அமைகிறது. மேலும், வட்டார அளவிலும் கிராம ஊராட்சி அளவிலும் பராமரிக்கப்படும் பதிவேடுகளின் பதிவுகள் மேம்படுத்தப்படுவதோடு அதன் முக்கியத்துவமும் அறியப்பட்டுள்ளது.

**2021-22-ம் ஆண்டிற்கான சமூக தணிக்கை நடவடிக்கைகள்**

2020-21-ம் நிதியாண்டில், கோவிட்-19 பெருந்தொற்றால் வழக்கமான சமூக தணிக்கை நடைபெறவில்லை. தற்போது 2021-22-ல் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் 2019-20 நிதியாண்டிற்கான செலவினம் தொடர்பாக சமூக தணிக்கை 12,524 கிராம ஊராட்சிகளிலும் நடத்தி முடிக்கப்பட்டுள்ளது. ஒன்றிய அரசு வழிகாட்டுதல்களின்

அடிப்படையில், தேசிய சமூக பாதுகாப்பு உதவித் திட்டம் (NSAP), பிரதம மந்திரி குடியிருப்பு திட்டம் (ஊரகம்) (PMAY–G) மற்றும் 15–வது நிதிக்குழு ஆகிய திட்டங்களுக்கு சமூக தணிக்கை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

**4.1.11. குறைகேள் அலுவலர்**

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டம் தொடர்பான குறைகள் மற்றும் புகார்களை நிவர்த்தி செய்ய மாவட்ட அளவில் குறை தீர் அலுவலர் அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. விரிவான தேர்வு முறையின் மூலம் அரசாணை (நிலை) எண்.34, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (ம.அ.தி–1) துறை, நாள் 21.03.2022–ன்படி, 31 மாவட்டங்களுக்கு குறைகேள் அலுவலர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

### 4.1.12. ஊதியம் தாமதமாக வழங்கியதற்கான இழப்பீடு மற்றும் வேலையில்லா படி வழங்குதல்

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதிச் சட்டம் தொழிலாளர்கள் வேலை கோரிய 15 நாட்களுக்குள் வழங்கப்படாத நிகழ்வுகளில் வேலையில்லா படி வழங்குவதற்கும் வேலை செய்ததற்கான ஊதியத்தினை தாமதமாக வழங்கும் நிகழ்வுகளில் அதற்கான இழப்பீட்டுத் தொகையும் வழங்குவதற்கும் வகை செய்கிறது. 2021–22–ம் ஆண்டில் இவ்விரு நிகழ்வுகளுக்கு காரணமான அலுவலர்களுக்கு பொறுப்பினை நிர்ணயம் செய்து விதிமுறைகளை வகுத்துள்ளது.

2021–22–ம் ஆண்டில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் தாமதமாக ஊதியம் வழங்கியதற்கான இழப்பீட்டு விதிமுறைகள் தமிழ்நாடு அரசின் அறிவிக்கை எண்.161, நாள் 11.03.2022–ல் வெளியிடப்பட்டுள்ளது. இதேபோல் வேலையில்லா படி வழங்குவதற்கான விதிமுறைகள்

தமிழ்நாடு அரசின் அறிவிக்கை எண்.185, நாள் 25.03.2022–ல் வெளியிடப்பட்டுள்ளது.

### 4.1.13. 2022–23–ம் ஆண்டிற்கான தொழிலாளர் வரவு செலவு மதிப்பீடு

மனித சக்தி நாட்களுக்கான தொழிலாளர் மதிப்பீடு ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும் அடிமட்ட தேவையினை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்படுகிறது. 2022–23–ம் நிதியாண்டிற்கான இம்மதிப்பீடு தயாரிக்கும் பணியில் தொகுப்பு வாரியான தேவைகளை கணக்கில் கொண்டு இறுதி செய்யப்பட்டுள்ளன.

ஒன்றிய அரசின் ஊரக வளர்ச்சி அமைச்சகம், 2022–23–ம் ஆண்டிற்கான தொழிலாளர் வரவு செலவு திட்டத்திற்கு 22 கோடி மனித சக்தி நாட்கள் ஒப்பளித்துள்ளது.

**4.1.14. கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்துடன் ஒருங்கிணைப்பு**

மாநில அரசின் ஓர் முதன்மை திட்டமாக கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தினை வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை துவக்கியுள்ளது இது அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம்–II செயல்படுத்தப்படவுள்ள அதே ஊராட்சிகளில் செயல்படுத்துவதன் மூலம் புவியியல் சார் ஒருங்கிணைப்பு உறுதி செய்யப்படும். 2021–22 இல் 2,657 கிராம ஊராட்சிகளிலும் 2022–23 இல் 2,544 கிராம ஊராட்சிகளிலும் இவ்விரு திட்டங்கள் இணைந்து செயல்படுத்தப்படும்.

அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம்–II–ன் கூறுகளான நீர் நிலைகளை புனரமைத்தல், வாழ்வாதாரம் மற்றும் சந்தைப்படுத்துதல், பொது உட்கட்டமைப்பு வசதிகள் போன்ற பணிகள் கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த

வேளாண் வளர்ச்சித் திட்ட நோக்கம் மற்றும் அதன் பலன்களுடன் நேரடியாக ஒருங்கிணைக்கப்படுகிறது. இதே போல் கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் குறிப்பிடத்தக்க பகுதி மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட கூறுகளுடன் குறிப்பாக நீர் வள பாதுகாப்பு பணிகளான தடுப்பணைகள் (சிமெண்ட் கான்கிரீட் / கம்பி வலை), பண்ணைக் குட்டைகள், அகழிகள், அமிழ்ந்த குழிகள், மீள் நிரப்புத் தண்டு போன்ற பிற பணிகளை மேற்கொள்ள வழிவகை செய்கிறது. கூடுதலாக மண் பாதுகாப்பு பணிகளான மண் வரப்புகள், கல் வரப்புகள் மற்றும் இதர நில மேம்பாட்டு பணிகள் வேளாண் விவசாயிகளுக்காக மேற்கொள்ளப்படுகிறது. இதேபோல், இத்துறை மூலம் அர்ப்பணிக்கப்பட்ட தோட்டக்கலை நாற்றங்கால் (1,500), முருங்கை நாற்றங்கால் (3,500) போன்றவை சிறு மற்றும் குறு விவசாயிகளின் நிலங்களில் நடவு செய்ய ஏற்படுத்தப்படும்.

இவ்வாறு கிராம ஊராட்சிகளின் தேர்வு மற்றும் திட்ட செயலாக்க கருப்பொருள் இரண்டும் கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம் மற்றும் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம்–II திட்டங்களின் கீழ் ஒருங்கிணைந்து செயல்படுத்தப்படும்.

கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்ட ஊராட்சிகளில் மேற்கொள்ளப்படும் ஒருங்கிணைந்த பணிக்கூறுகளுக்கு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் மூலம் சிறப்பு உந்துதல் தரப்படும். ஊரக வளர்ச்சித் துறையின் இத்தகைய முழுமையான அணுகுமுறை ஊரகப் பகுதியின் பலதரப்பட்ட வாழ்க்கைத் தரத்தை குறிப்பிடத்தக்க அளவு உயர்த்துவதோடு தன்னிறைவு அடைவதை உறுதி செய்யும்.

## 4.2. "அனைவருக்கும் வீடு" (பிரதம மந்திரி குடியிருப்பு திட்டம் – ஊரகம்)

### 4.2.1. முன்னுரை

இந்திரா காந்தி நினைவு குடியிருப்பு திட்டமாக செயல்படுத்தப்பட்டு வந்த ஊரக வீடு வழங்கும் திட்டத்தில் இருந்த குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் வகையில் அத்திட்டம் சீரமைக்கப்பட்டு பிரதம மந்திரி குடியிருப்பு திட்டம் (ஊரகம்) என 2016–17–இல் ஒன்றிய அரசால் துவங்கப்பட்டது. ஊரகப் பகுதிகளில் வாழும் வீடில்லாத ஏழைகளுக்கும், சிதிலமடைத்த வீடுகளில் வசிப்போருக்கும் அடிப்படை வசதிகளுடன் கூடிய நிலையான வீடுகள் வழங்கி "2022 ஆம் ஆண்டுக்குள் அனைவருக்கும் வீடு" என்ற நோக்கில் ஒன்றிய அரசு பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டத்தினை (ஊரகம்) செயல்படுத்துகிறது. தற்போது ஒன்றிய அரசு இத்திட்டத்தினை 2024 வரை மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு நீட்டித்துள்ளது.

### 4.2.2. வீட்டுவசதி திட்டத்திற்கு மாநில அரசின் பங்களிப்பு

பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டத்தின் (ஊரகம்) கீழ் ஒன்றிய மற்றும் மாநில அரசிற்கு இடையேயான நிதிப்பகிர்வு 60:40 ஆகும். ஒன்றிய அரசால் நிர்ணயிக்கப்பட்ட அலகுத்தொகை ரூ.1,20,000/-. ஆனால், 2021-22 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசின் செந்தர வீதப்பட்டியலின்படி பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டத்தின் (ஊரகம்) கீழ் 269 சதுர அடி வீடு கட்டுவதற்கான தொகை ரூ.4.62 இலட்சம் ஆகும். இத்தொகை ஒன்றிய அரசால் நிர்ணயிக்கப்பட்ட அலகுத் தொகையை விட மிகமிக அதிகமாகும்.

தமிழ்நாட்டில் பிரதம மந்திரி குடியிருப்பு திட்டத்தின் (ஊரகம்) கீழ் ஒரு வீடு கட்டுவதற்கான அலகுத் தொகை ரூ.2,76,570/- ஆகும். இதில் ஒன்றிய அரசால் வழங்கப்படுவது ரூ.1,03,770/- ஆகும். இத்தொகையில் பிரதம மந்திரி குடியிருப்பு திட்டத்தின் (ஊரகம்) கீழ் ஒன்றிய அரசின் பங்குத்தொகை

ரூ.72,000/-, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் அனுமதிக்கப்படும் 90 நாட்களுக்கான ஊதியத் தொகை ரூ.24,570/- மற்றும் தனிநபர் இல்லக் கழிப்பறை கட்ட தூய்மை பாரத இயக்கத்தின் கீழ் ஒன்றிய அரசின் பங்குத்தொகை ரூ.7,200/- ஆகியவை அடங்கும்.

பிரதம மந்திரி குடியிருப்பு திட்டத்தின் (ஊரகம்) கீழ் தமிழக அரசின் பங்களிப்பு ரூ.1,72,800/- ஆகும். இதில் மாநில அரசின் பங்குத்தொகை ரூ.48,000/-, வீடுகளுக்கு மேற்கூரை அமைத்திட கூடுதல் தொகை ரூ.1,20,000/- மற்றும் தனிநபர் இல்லக்கழிப்பறை கட்ட மாநில அரசின் பங்குத் தொகை ரூ.4,800/- ஆகியவை அடங்கும்.

பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டத்தின் (ஊரகம்) கீழ், ஒன்றிய மற்றும் மாநில அரசின் நிதிப்பகிர்வு 60:40 என நிர்ணயிக்கப்பட்டிருந்தாலும், தமிழ்நாட்டில் நிதிப்பகிர்வு 38:62 என்ற விகிதத்தில் நடைமுறையில் உள்ளது.

## அட்டவணை 4.1

## தமிழ்நாட்டில் வழங்கப்படும் அலகுத்தொகை விவரம்

(தொகை ரூபாயில்)

| விவரம் | ஒன்றிய அரசின் பங்கு 60% | மாநில அரசின் பங்கு 40% | மொத்தம் |
|---|---|---|---|
| அலகுத்தொகை | 72,000 | 48,000 | **1,20,000** |
| மாநில அரசின் மேற்கூரை வேய்வதற்கான கூடுதல் நிதி | | 1,20,000 | **1,20,000** |
| தனிநபர் இல்லக் கழிப்பறை கட்டுவதற்கு | 7,200 | 4,800 | **12,000** |
| மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் 90 மனித சக்தி நாட்களுக்கான ஊதியம்(ரூ.273X90) | 24,570 | -- | **24,570** |
| **மொத்தம்** | **1,03,770** | **1,72,800** | **2,76,570** |

### 4.2.3. முக்கிய அம்சங்கள்

1. சுகாதாரமான சமைக்கும் இடத்துடன் கூடிய ஒரு வீட்டின் குறைந்தபட்சம் பரப்பளவு 25 சதுர மீட்டர் (269 சதுர அடி) ஆகும்.
2. பிரதம மந்திரி குடியிருப்பு திட்டத்தின் (ஊரகம்) கீழ் நிர்ணயிக்கப்பட்ட இலக்கில் 60 விழுக்காடு

பட்டியலினத்தவர் மற்றும் பழங்குடியின மக்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது, மீதமுள்ள 40 விழுக்காடு இதர இனத்தவருக்கு ஒதுக்கப்படுகிறது. (தகுதி உள்ள சிறுபான்மை குடும்பங்கள் இருக்குமேயானால் அவர்களுக்கு வழங்கப்படும் 15 விழுக்காடு இதில் அடங்கும்) அனைத்து பிரிவுகளிலும் 5 விழுக்காடு ஒதுக்கீடு மாற்றுத்திறனாளிகளுக்கு வழங்கப்படுகிறது.

3. சமூக பொருளாதார சாதிவாரி கணக்கெடுப்பு புள்ளி விவரங்களிலிருந்து பிரதம மந்திரி குடியிருப்பு திட்ட (ஊரகம்) வழிகாட்டு நெறிமுறையில் தெரிவிக்கப்பட்டுள்ள சேர்த்தல், நீக்கல் காரணிகளின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட நிலையான காத்திருப்பு பட்டியலிலிருந்து பயனாளிகள் கிராம சபை மூலம் தேர்வு செய்யப்படுகின்றனர்.
4. சமூக பொருளாதார சாதிவாரி கணக்கெடுப்பு– நிரந்தர காத்திருப்போர் பட்டியலில் விடுபட்டவர்களை கண்டறிய ஒரு விரிவான கணக்கெடுப்பு 2018 இல் அனைத்து மாவட்டங்களிலும் மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்கெடுப்பு "ஆவாஸ் பிளஸ்" என பெயரிடப்பட்டது.

5. 2021–22 ஆம் ஆண்டிற்கு ஆவாஸ்பிளஸ் புள்ளிவிவர அடிப்படையில் வீடுகள் வழங்கப்பட்டு வருகிறது.
6. மாநில அளவில் பராமரிக்கப்படும் வங்கி கணக்கிலிருந்து வட்டார வளர்ச்சி அலுவலர் மூலம் தயாரிக்கப்படும் பட்டியலின்படி பொது நிதி மேலாண்மை முறையில் பயனாளிகளின் வங்கிக் கணக்கிற்கு நேரடியாக தொகை செலுத்தப்படுகிறது.

### 4.2.4. பிரதம மந்திரி குடியிருப்பு திட்டத்தின் (ஊரகம்) கீழ் கட்டி முடிக்கப்பட்ட வீடுகள்

பிரதம மந்திரி குடியிருப்பு திட்டத்தின் (ஊரகம்) கீழ் முதல் கட்டமாக 2016–17 முதல் 2018–19 ஆண்டு வரை 3,27,552 வீடுகளும், இரண்டாம் கட்டமாக 2019–20 முதல் 2021–22 ஆம் ஆண்டு வரை 4,89,887 வீடுகளும் ஒன்றிய அரசால் தமிழ்நாட்டிற்கு வழங்கப்பட்டுள்ளது. இதுவரை 3,34,699 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள வீடுகளின் கட்டுமானப் பணிகள் வெவ்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில்

உள்ளன. இவையனைத்தும் மார்ச் 2023-க்கு முன்னர் முடிக்கப்படும்.

### 4.2.5. ஒன்றிய அரசிடமிருந்து பெறப்பட்ட நிதி விவரம் (2021-22)

2018-19 ஆம் ஆண்டிற்கு 07.01.2022-இல் பிரதம மந்திரி குடியிருப்பு திட்டத்தின் (ஊரகம்) கீழ் ரூ.63 கோடி ஒன்றிய மற்றும் மாநில அரசுகளால் இரண்டாம் தவணைத் தொகையின் ஒரு பகுதியாக வழங்கப்பட்டுள்ளது (ஒன்றிய அரசின் பங்கு ரூ.37.80 கோடி மற்றும் மாநில அரசின் பங்கு ரூ.25.20 கோடி). மேற்படி தொகை முழுமையாக செலவழிக்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து 2021-22 ஆம் ஆண்டில் 2018-19, 2019-20, 2021-22 ஆகிய ஆண்டுகளில் வழங்கப்பட்ட வீடுகளுக்காக பிரதம மந்திரி குடியிருப்பு திட்டதின் (ஊரகம்) கீழ் ரூ.1485.22 கோடி (ஒன்றிய அரசின் பங்கு ரூ.891.13 கோடி, மாநில அரசின் பங்கு ரூ.594.09 கோடி) முதல் தவணையின் ஒரு பகுதியாக

விடுவிக்கப்பட்டுள்ளது. வீடுகள் கட்டும் பணி முன்னேற்றத்தின் அடிப்படையில் செலவினம் மேற்கொள்ளப்படுகிறது. ஒன்றிய மற்றும் மாநில அரசுகளிடமிருந்து 2021−22−ம் ஆண்டில் 2018−19, 2019−20, 2021−22 ஆம் ஆண்டுகளுக்கான நிலுவைத் தொகை மொத்தமாக ரூ.1548.22/− கோடி பெறப்பட்டுள்ளது.

### 4.2.6. மாநில அரசு 2021−22 ஆம் ஆண்டில் மேற்கொண்டுள்ள முனைப்பான நடவடிக்கைகள்

பிரதம மந்திரி குடியிருப்பு திட்டத்தின் (ஊரகம்) கீழ் வீடுகள் கட்டும் பணிகளை துரிதப்படுத்த தமிழக அரசு கீழ்காணும் முனைப்பான நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளது.

1. பிரதம மந்திரி குடியிருப்பு திட்டத்தின் (ஊரகம்) கீழ் வீடுகள் கட்டும் பணியின் முன்னேற்றத்தை துரிதப்படுத்திட ஒரு தொழில்நுட்ப உதவியாளருக்கு நிலுவையிலுள்ள 200 வீடுகள் என்ற வீதத்தில் கூடுதலாக தொழில்நுட்ப பணியாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் வெளிச்

சந்தையில் இருந்து ஆறு மாதங்களுக்கு தற்காலிகமாக பணி அமர்த்திட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

2. வருவாய் மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அதிகாரிகளை உறுப்பினர்களாகக் கொண்டு மாநில பணிக்குழு அமைத்து நிலமற்ற குடும்பங்களுக்கு வீட்டுமனை பட்டா வழங்கிட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. நிலமற்ற பயனாளிகளுக்கு வீட்டுமனை பட்டா வழங்கும் வகையில் ஆட்சேபனை அற்ற அரசு புறம்போக்கு நிலங்களை கண்டறிய வருவாய்த்துறை அதிகாரிகளுக்கு உத்தரவிட அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கும் உரிய அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.
3. இத்திட்டத்தின் கீழ் வீடு கட்டும் பணிகளை துரிதப்படுத்திட சமூக பொருளாதார சாதிவாரி கணக்கெடுப்பு, நிரந்தர காத்திருப்பு பட்டியலில் உள்ள நிலமற்ற குடும்பங்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கிட மாநில அளவிலும், வட்டார அளவிலும் கிராம ஊராட்சி அளவிலும் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.
4. 20.03.2022 அன்று உள்ளபடி நிலமற்ற 1,280 பயனாளிகளுக்கு மனைப் பட்டா வழங்கப்பட்டு அதன் அடிப்படையில் வீடுகள் வழங்கப்பட்டுள்ளன. மாதாந்திர அடிப்படையில்

தொடர்ந்து ஆய்வுக் கூட்டங்களை நடத்தி மீதமுள்ளவர்களும் பயன்பெறும் வகையில் நடவடிக்கை எடுக்கப்படும்.

## 4.3. ஜல் ஜீவன் இயக்கம்

### முன்னுரை

ஊரக பகுதிகளிலுள்ள அனைத்து வீடுகளுக்கும் நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 55 லிட்டர் குடிநீரினை பரிந்துரைக்கப்பட்ட தரத்தில் நீண்ட கால அடிப்படையில் தொடர்ச்சியாக மார்ச் 2024-க்குள் வழங்கிடும் உன்னத எண்ணத்துடன் ஜல் ஜீவன் இயக்கம் 2019-20-ம் ஆண்டு தொடங்கப்பட்டது. அத்தகைய குடிநீர் குழாய் இணைப்புகள் செயல்பாட்டு வீட்டு குடிநீர் குழாய் இணைப்புகள் என அழைக்கப்படும். திட்டமிடுதலில் சமூகத்தை ஈடுபடுத்தி குடிநீர் வழங்குதலை கண்காணித்தல் மற்றும் நிலைத்த குடிநீர் ஆதாரங்களை நீர் செறிவூட்டுதல் மூலம் வலுப்படுத்துதல், மறு பயன்பாட்டிற்கு ஊக்குவித்தல் ஆகியன இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

**திறன் மேம்பாடு மற்றும் தகவல் கல்வி தொடர்பு செயல்பாடுகள்:**

நீரினை சிக்கனமாக பயன்படுத்துதல், மழைநீர் சேகரிப்பு, நீர் ஆதார நிலைகளை பாதுகாத்தல், சமுதாய பங்களிப்பு, சொத்துக்களை பராமரித்தல், கழிவு நீர் மேலாண்மை மற்றும் பயனீட்டாளர்களால் செலுத்தப்படும் கட்டணம் தொடர்பாக விழிப்புணர்வுகளை உருவாக்க தகவல், கல்வி மற்றும் தொடர்பு செயல்பாடுகள் மேற்கொள்ளப்படுகிறது.

**திட்ட மூலதனத்தில் சமூக பங்களிப்பு**

ஜல் ஜீவன் திட்ட வழிகாட்டு நெறிமுறைகளில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, கிராம ஊராட்சியில் உள்ள நீர் விநியோக கட்டமைப்பு மற்றும் மூல ஆதாரத்தை மேம்படுத்த மலைவாழ் / வனப்பகுதிகள், 50% மற்றும் அதற்கு மேல் ஆதிதிராவிடர் / பழங்குடியின மக்களை கொண்ட கிராமங்களில் திட்ட மூலதன தொகையில் 5% மற்றும் இதர கிராம ஊராட்சிகளில் 10% பணமாகவோ / பொருளாகவோ / உடல் உழைப்பாகவோ பொது

மக்களிடமிருந்து சமூக பங்களிப்பாக பெறப்பட வேண்டும்.

## ஜல் ஜீவன் இயக்கத்தின் கூறுகள்

ஜல் ஜீவன் இயக்கத்தின் கீழ், கீழ்கண்ட கூறுகள் செயல்படுத்தப்படுகின்றன :

i) கிராம ஊராட்சிகளில் ஒவ்வொரு வீட்டிற்கும் குடிநீர் குழாய் இணைப்பு வழங்கிட தேவையான உள்ளூர் அளவிலான கட்டமைப்புகளை உருவாக்குதல்.

ii) நிலையான குடிநீர் ஆதாரங்களை உருவாக்குதல் மற்றும் நீர் ஆதாரங்களை மேம்படுத்துவதன் வாயிலாக குடிநீர் விநியோக அமைப்புகளை நீண்ட காலத்திற்கு செயல்பட வைத்தல்.

iii) ஊரகப் பகுதியிலுள்ள ஒவ்வொரு வீட்டிற்கும் குடிநீர் வழங்குவதற்காக தேவைப்படும் இடங்களில் கூட்டு குடிநீர் திட்டங்கள் போன்ற பெருவிநியோக அமைப்புகள் மூலமோ சுத்திகரிப்பு நிலையங்கள் மூலமோ தகுந்த விநியோக அமைப்புகளை உருவாக்குதல்.

iv) தற்போது செயல்பாட்டில் உள்ள தனி கிராம மற்றும் கூட்டு குடிநீர் திட்டங்களை மறுசீரமைப்பு செய்தல் வாயிலாக குறைந்தபட்சம் 55 லிட்டர் நீரினை நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு குழாய் இணைப்பு மூலம் வழங்கிடுதல்.

### நிதி பகிர்மான முறை

ஜல் ஜீவன் இயக்கத்தின் கீழ் பணிகளை மேற்கொள்வதற்கான நிதியினை ஒன்றிய அரசும் (50%), மாநில அரசும் (50%) வழங்கும். இருப்பினும், ஆதரவு மற்றும் நீர் தர கண்காணிப்பு நடவடிக்கைகளுக்கு ஒன்றிய அரசு மற்றும் மாநில அரசிற்கு இடையேயான நிதி பகிர்மான முறை 60:40 ஆகும்.

### செயல்படுத்தும் முறை:

தமிழ்நாட்டில் ஜல் ஜீவன் இயக்கத்தினை செயல்படுத்தும் துறையாக நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை உள்ளது. தமிழ் நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மேலாண்மை இயக்குநர்,

ஜல் ஜீவன் இயக்கத்தின் மாநில திட்ட இயக்குநராக உள்ளார்.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, குடிநீர் ஆதாரம் பாதுகாப்பு மண்டலத்தில் உள்ள வட்டாரங்களின் கிராம எல்லைக்குள் இருந்தால் குக்கிராம திட்டம் மற்றும் ஒற்றை கிராம திட்டத்தை வடிவமைத்தல், மதிப்பீடு தயாரித்தல் மற்றும் செயல்படுத்துதல் ஆகிய பணிகளை திட்டமிட்டு செயல்படுத்தும். இப்பணிகள் நீர் ஆதாரத்தை உருவாக்குதல், நீர் உந்தும் குழாய்கள், மேல் நிலை நீர்தேக்கத் தொட்டி மற்றும் இதர நீர் சேமிப்பு அமைப்புகள், தெரு விநியோக அமைப்புகள் மற்றும் வீட்டு குழாய் இணைப்புகள் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும். இதுபோன்றே, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் எடுக்கப்பட்ட பல் கிராம திட்டங்களில் கிராம உட்கட்டமைப்பு பணிகளை வடிவமைத்தல், மதிப்பீடு தயாரித்தல், செயல்படுத்துதல் ஆகிய பணிகளுடன் வீட்டு குழாய் இணைப்புகள்

வழங்கும் பணிகளையும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை மேற்கொள்ளும்.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் பல் கிராமங்களுக்கான திட்டத்தினை ஒன்றுக்கு மேற்பட்ட கிராம ஊராட்சிகளில், குடிநீர் ஆதாரம் கிராம எல்லைக்கு வெளியே இருந்தால், மேல் நிலை நீர்த் தேக்கத் தொட்டி வரை மொத்தமாக நீரினை வழங்கிட செயல்படுத்துகிறது.

**இத்திட்டத்தின் இதர முக்கிய அம்சங்கள் :**

- மூன்றாம் தரப்பு ஆய்வு – பணிகளின் தரத்தினை ஆய்வு செய்ய மூன்றாம் தரப்பு ஆய்வு நிறுவனங்கள் நியமிக்கப்பட்டுள்ளது.
- ஊரக பகுதிகளிலுள்ள வீடுகளுக்கு விநியோகிக்கப்படும் நீரின் தரம், அளவு மற்றும் நீண்ட கால அடிப்படையில் குடிநீர் வழங்குதல் ஆகியவற்றை கொண்டு செயல்பாட்டு மதிப்பீடு மேற்கொள்ளப்படும்.
- ஒருங்கிணைந்த தகவல் மேலாண்மை அமைப்பின் மூலம் வழிமுறைகள், பணிகளை

நிறைவேற்றுதல், பராமரித்தல் மற்றும் திட்டத்தின் செயல்பாடு ஆகியவை பதிவு செய்யப்படும்.

- களஆய்வு உபகரணங்களின் மூலம் நீரின் தரத்தினை உறுதி செய்தல். நீரின் தரம் கார–அமில தன்மை (pH), கடினத்தன்மை, ப்ளுரைடு, க்ளோரைடு, சல்பேட்டு மற்றும் பாக்டீரியாக்களின் அளவு ஆகிவற்றின் அனுமதிக்கப்பட்ட அளவின் அடிப்படையில் நீரின் தரத்தினை உறுதி செய்தல்.

**இயக்குதல் மற்றும் பராமரித்தல்**

குடிநீர் வழங்கல் பணிகளை இயக்குதல் மற்றும் பராமரித்தல் கிராம ஊராட்சியின் பொறுப்பாகும்.

பயனீட்டாளர்களுக்கான குறைந்தபட்ச குடிநீர் கட்டணம் ரூ.30/– ஆக குறிப்பிடப்பட்டுள்ள அரசாணை எண்.260, ஊரக வளர்ச்சித் துறை, நாள் 09.12.1998 பின்பற்றப்படுகிறது.

அரசால் நிர்ணயிக்கப்பட்ட மொத்த நீர் அளவு பரிமாற்ற கட்டணம், சம்பந்தப்பட்ட ஊராட்சியால் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு செலுத்தப்படுகிறது.

## 15–வது ஒன்றிய நிதிக்குழு மானியம் மற்றும் இதர திட்ட நிதிகளை ஒருங்கிணைத்தல்

15–வது ஒன்றிய நிதிக்குழு மானியத்தின் வரையறுக்கப்பட்ட நிதியில் 50% மற்றும் 5–வது மாநில நிதிக்குழு மானியத்தின் கீழ் மாவட்ட ஊராட்சிகள், வட்டார ஊராட்சிகள் மற்றும் கிராம ஊராட்சிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் நிதியின் மூலம் ஜல் ஜீவன் இயக்கத்தின் கீழ் கிராம உட்கட்டமைப்பு பணிகள் மேற்கொள்ளப்படும்.

## ஜல் ஜீவன் இயக்கத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள பணிகள்

i. 2020–21–ம் ஆண்டு, ரூ.2006.06 கோடி மதிப்பீட்டில் ஜல் ஜீவன் இயக்கத்தின் கீழ் 35 மாவட்டங்களில் 15860 குக்கிராமங்களுக்கு 19,74,985 குடிநீர் குழாய் இணைப்புகள் வழங்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ii. 25.03.2022 வரை ரூ.1301.27 கோடி செலவினத்தில் 16,00,983 குடிநீர் குழாய் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளது.

**ஜல் ஜீவன் இயக்கத்தில் 2022–23–ம் ஆண்டில் மேற்கொள்ள உத்தேசிக்கபட்டுள்ள பணிகள்**

i. ஜல் ஜீவன் இயக்க நிதியின் மூலம் 30 மாவட்டங்களில் 6328 குக்கிராமங்களுக்கு 6 இலட்சம் குடிநீர் குழாய் இணைப்புகள் ரூ.500 கோடி மதிப்பீட்டில் வழங்க உத்தேசிக்கபட்டுள்ளது.

ii. 15–வது ஒன்றிய நிதி குழு மானியத்தின் வரையறுக்கப்பட்ட நிதியில் 37 மாவட்டங்களில் 15,400 குக்கிராமங்களுக்கு 6.50 லட்சம் குடிநீர் குழாய் இணைப்புகள் ரூ.761.46 கோடி மதிப்பீட்டில் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் மொத்தமுள்ள 1.26 கோடி ஊரக வீடுகளில் 52.51 லட்சம் ஊரக வீடுகளுக்கு குடிநீர் குழாய் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 74.37 லட்சம் வீடுகளுக்கு 2024 ஆம் ஆண்டு மார்ச் இறுதிக்குள் குடிநீர் குழாய் இணைப்புகள் வழங்கப்படும். 2022–23 ஆம் ஆண்டு ஜல் ஜீவன் இயக்கத்தினை செயல்படுத்த ரூ.3,000 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 4.4. நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் (MPLADS)

1993–ம் ஆண்டு ஒன்றிய அரசால் நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்டமானது தொடங்கப்பட்டு, ஊரகம் மற்றும் நகர்ப்புற பகுதிகளில் உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துவதில் உள்ள இடைவெளியினை நிரப்பிட இத்திட்டம் வழிவகை செய்கிறது. நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ஒரு தொகுதிக்கு ஒரு ஆண்டுக்கு ரூ.5 கோடி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

தமிழ்நாட்டில், இத்திட்ட செயலாக்கத்திற்கு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையே தொடர்பு துறை ஆகும். நாடாளுமன்ற உறுப்பினர்களால் பரிந்துரைக்கப்படும் பணிகளுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் நிர்வாக அனுமதி வழங்குவார். இத்திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யக்கூடிய பணிகள் குறித்த விளக்கப்பட்டியலும், தடை செய்யப்பட்ட பணிகள் குறித்தும் வழிகாட்டு நெறிமுறையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ், குளங்கள்,

குட்டைகள், ஆறுகள், வாய்க்கால் தூர் வாருதல் போன்ற அனைத்து வகையான பராமரிப்பு பணிகளும் தடை செய்யப்பட்டுள்ளன.

ஒன்றிய அரசு (புள்ளியியல் மற்றும் திட்ட செயலாக்க அமைச்சகம்) இத்திட்டத்தினை நவம்பர் 2021–ல் மீள துவங்கி 2021–22–ம் ஆண்டிற்கு மீதமுள்ள மாதங்களுக்கு ஒரு தொகுதிக்கு ரூ.2 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது.

### 4.5. நாடாளுமன்ற உறுப்பினர் மாதிரி கிராமத் திட்டம் (SAGY)

நாடாளுமன்ற உறுப்பினர் மாதிரி கிராமத் திட்டம் 11.10.2014–ல் ஒன்றிய அரசால் தொடங்கப்பட்டது. நாடாளுமன்ற உறுப்பினர் மாதிரி கிராமத் திட்டத்தின் நோக்கமானது, ஒன்றிய மற்றும் மாநில அரசுகளின் திட்டங்களை திறம்பட ஒருங்கிணைத்து கூடுதல் நிதி ஒதுக்கீடு ஏதுமின்றி கிராம ஊராட்சியின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு வழிவகை செய்வதே ஆகும். கிராம ஊராட்சியே இத்திட்ட செயலாக்கத்தின் அடிப்படை

அலகாகும். சமவெளிப்பகுதிகளில், 3,000 முதல் 5,000 வரை மக்கள் தொகை கொண்ட கிராம ஊராட்சிகளையும் மலைப்பகுதி மற்றும் பழங்குடி கிராமங்கள் எனில் மக்கள் தொகை 1,000 முதல் 3,000 வரையும் உள்ள கிராம ஊராட்சியை ஒவ்வொரு நாடாளுமன்ற உறுப்பினரும் தேர்ந்தெடுக்க வேண்டும். மாவட்டங்களில் இந்த அலகு அளவுக்கு மக்கள் தொகை கிடைக்கவில்லை என்றால் ஏறக்குறைய இதே அளவுக்கு மக்கள் தொகை உள்ள கிராம ஊராட்சிகளை தேர்வு செய்யலாம். நாடாளுமன்ற உறுப்பினர் தனது அல்லது தனது மனைவியின் / கணவரின் சொந்த கிராமத்தை தவிர்த்து இதர கிராமங்களிலிருந்து மாதிரி கிராமமாக உருவாக்க வேண்டிய கிராம ஊராட்சியை தங்கள் விருப்பப்படி கண்டறியலாம். மக்களவை உறுப்பினர் தனது தொகுதிக்குள்ளும், மாநிலங்களவை உறுப்பினர் தனது மாநிலத்திற்குள்ளும், நியமன உறுப்பினர் இந்திய அளவில் எந்த ஒரு மாநிலத்திலும், ஒரு கிராமத்தை தேர்ந்தெடுக்கலாம். நகர்ப்புர தொகுதியை பொறுத்தவரையில் கிராம ஊராட்சிகள்

இல்லையெனில் சம்பந்தப்பட்ட மக்களவை உறுப்பினர் அருகிலுள்ள ஊரகத் தொகுதியிலிருந்து கிராமத்தை தேர்ந்தெடுக்க வேண்டும். 2024-க்குள் 5 மாதிரி கிராம ஊராட்சிகளை (ஆண்டிற்கு ஒன்று வீதம்) தேர்வு செய்து மேம்படுத்த வேண்டும்.

## 4.6 பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம்

### 4.6.1. பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம்-I

இணைப்புச் சாலை வசதி இல்லாத 500-க்கும் மேல் மக்கள் தொகை கொண்ட குக்கிராமங்களுக்கு அனைத்து பருவ காலங்களுக்கும் ஏற்புடைய இணைப்புச் சாலை வசதி வழங்குவதே பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம்-I-ன் நோக்கமாகும்.

தமிழ்நாட்டில், இத்திட்டத்தின் கீழ் இணைப்புச் சாலை வசதி இல்லாத 1,986 குக்கிராமங்கள் (500-க்கும் மேல் மக்கள் தொகை) இணைக்கப்பட்டுள்ளன. கட்டம் I முதல் XI வரை 16,296 கி.மீ நீளமுள்ள 7,678 ஊரக சாலைகள் மற்றும்

98 பாலங்கள் ரூ.4,586 கோடி மதிப்பீட்டில் எடுக்கப்பட்டு முடிக்கப்பட்டுள்ளன.

### 4.6.2. பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம்–II

ஊரக வணிக சந்தை மற்றும் வளர்ச்சி மையங்களுக்கு செல்லும் சாலைகளை மேம்படுத்துவதற்கு பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம்–II, ஒன்றிய அரசால் 2013–ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. தமிழ்நாட்டிற்கு, இத்திட்டத்தின் கீழ் 2,940 கி.மீ நீளமுள்ள 860 சாலைப்பணிகள் மற்றும் 34 பாலங்கள் ரூ.1,434 கோடி மதிப்பீட்டில் எடுக்கப்பட்டு முடிக்கப்பட்டுள்ளன.

### 4.6.3. பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம்–III

குக்கிராமங்களை அருகில் உள்ள சந்தை, உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் மருத்துவமனைகள் போன்றவற்றுடன் இணைக்கும் பிரதான சாலைகள் மற்றும் முக்கிய ஊரக இணைப்பு சாலைகளை மேம்படுத்துவதற்கு, பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம்–III அறிமுகப்படுத்தப்பட்டது. இதற்கான

ஒன்றிய மற்றும் மாநில அரசின் நிதி பகிர்வு 60:40 ஆகும்.

பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம்–III–ன் கீழ், தமிழ்நாட்டிற்கு 7,375 கி.மீ நீளமுள்ள ஊரக சாலைகளை மேம்படுத்துவதற்கு இலக்கு நிர்ணயிக்கபட்டுள்ளது. 2019–20 மற்றும் 2020–21 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டிற்கு 3,198 கி.மீ நீளமுள்ள 880 சாலைப் பணிகள் ரூ.1,817 கோடி மதிப்பீட்டில் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

2021–22–ம் ஆண்டில், 2017 கி.மீ நீளமுள்ள சாலைகள் மேம்பாடு செய்யப்பட்டுள்ளன மற்றும் ரூ.1054 கோடி செலவினம் செய்யப்பட்டுள்ளது.

2021–22–ம் ஆண்டில், 1253.52 கி.மீ நீளமுள்ள 275 சாலைப்பணிகளை மேம்பாடு செய்ய ரூ.745.22 கோடி மதிப்பீட்டில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

### 4.6.4. பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள ஊரகச் சாலைகளைப் பராமரித்தல்

பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டத்தின் வழிகாட்டு நெறிமுறைகளின் படி, இச்சாலைகள் 5 ஆண்டுகால தொடர் பராமரிப்பு, இச்சாலைகளை அமைத்த அதே ஒப்பந்ததாரரால் செய்யப்பட வேண்டும். 5 ஆண்டுகால தொடர் பராமரிப்புக்கான நிதி மாநில அரசால் வழங்கப்பட வேண்டும். மேலும் 5 ஆண்டுகால தொடர் பராமரிப்பு முடிவுற்ற பிறகு, பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள ஊரகச் சாலைகள், மாநில அரசின் இதர திட்டங்களின் கீழ் காலமுறை பராமரிப்பு செய்யப்படுகின்றன.

### 4.6.5. தரக்கட்டுப்பாடு

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில், மாநில அளவில் தரக்கட்டுப்பாட்டு பிரிவு கண்காணிப்பு பொறியாளர் (தரக்கட்டுப்பாடு) அவர்களின்

தலைமையில் அமைக்கப்பட்டுள்ளது. மத்திய அரசு நியமித்த தேசிய தரக்கட்டுப்பாட்டு ஆய்வாளர்கள் (NQMs) மற்றும் மாநில தரக்கட்டுப்பாட்டு ஆய்வாளர்கள் (SQMs), பணிகளின் அனைத்து நிலைகளிலும் தரக்கட்டுப்பாட்டு சோதனைகளை மேற்கொள்கின்றனர். இத்துறையில் பணிபுரியும் களப்பொறியாளர்களின் திறனை மேம்படுத்த, பல்வேறு திறன் மேம்பாடு மற்றும் தரக்கட்டுப்பாட்டு பயிற்சிகள் பல்வேறு தேசிய மற்றும் மாநில அளவிலான சிறந்த பயிற்சி நிறுவனங்கள் மூலம் வழங்கப்படுகின்றன.

### 4.6.6. தொழில்நுட்ப ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு முயற்சிகள் (R & D Initiatives)

நீடித்து நிலைத்து நிற்கக்கூடிய சாலைகளை குறைந்த செலவில் அமைப்பதற்காக, தொழில்நுட்ப ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு முயற்சியாக, தமிழக அரசு நிரூபிக்கப்பட்ட மற்றும் நவீன தொழில்நுட்பங்களின் மூலம் ஊரகச் சாலைகளைக் கட்டமைக்க உறுதி ஏற்றுள்ளது.

பிரதம மந்திரி கிராம சாலைகள் திட்டத்தின் கீழ், புதிய தொழில்நுட்ப முயற்சிகளைப் பயன்படுத்தி எடுக்கப்பட்ட சாலைகளுக்கான நீளங்களின் விவரங்கள் கீழே அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 4.2**

| வ. எண். | மாற்று தொழில்நுட்பம் | நீளம் (கி.மீ) |
|---|---|---|
| 1. | நெகிழிச் சாலைகள் | 1289.97 |
| 2. | தார் குளிர் கலவை | 215.62 |
| 3. | உருளை கொண்டு அமைக்கப்பட்ட கான்கிரீட் | 5.45 |
| 4. | சணல்/தென்னை நார் | 52.82 |
| | **பலப்படுத்துதல்** | |
| 5. | (i) இரசாயணம் | 885.44 |
| 6. | (ii) தொழிற்சாலை கழிவு | 34.71 |
| 7. | (iii) சிமெண்ட் | 181.07 |
| 8. | (iv) மண் | 212.72 |
| | **மொத்தம்** | 2877.80 |

இந்த புதிய தொழில்நுட்ப முயற்சிகளைப் பின்பற்றுவதால் உள்ளூரில் கிடைக்கும் பொருட்களின் பயன்பாடு அதிகரித்துள்ளது, அதன்மூலம் கட்டுமான செலவு, நேரம் குறைக்கப்படுவதோடு சுற்றுச்சூழலும் பாதுகாக்கப்படுகிறது.

### 4.7. தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்)

"தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்)" 2014 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 2 ஆம் நாள் ஒன்றிய அரசால் தொடங்கப்பட்டு, மக்களிடையே மனமாற்றத்தை ஏற்படுத்துதல் மற்றும் சுகாதார வசதிகள் அனைவருக்கும் முழுமையாக சென்றடைவதை 2019 ஆம் ஆண்டுக்குள் உறுதி செய்யும் பொருட்டு, இது தொடர்பான அனைத்து முயற்சிகளும் துரிதப்படுத்தப்பட்டது. இவ்வியக்கம் தற்போது பகுதி–II ஆக நீட்டிக்கப்பட்டு தொடர் நடத்தை மாற்றம் மற்றும் தகவல் தொடர்பு மூலம் திறந்த வெளியில் மலம் கழித்தலற்ற நிலையின் கூடுதல் நடவடிக்கைகளான எந்த ஒரு குடும்பமும் கழிப்பறை வசதி பெறுவதில்

விடுபடாமல் இருப்பதை உறுதி செய்வதன் மூலம் திறந்த வெளியில் மலம் கழித்தலற்ற நிலையினை தக்க வைத்தல் மற்றும் ஊரகப் பகுதிகளில் சுகாதார நிலையினை மேம்படுத்திட, திட மற்றும் திரவக் கழிவு மேலாண்மை நடவடிக்கைகள் போன்றவை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**ஊரகத் தூய்மை பாரத இயக்கத்தின் கூறுகள்:**

தனிநபர் இல்லக் கழிப்பறை, சமுதாய சுகாதார வளாகம், திட மற்றும் திரவக் கழிவு மேலாண்மைத் திட்டம் ஆகியவை ஊரகத் தூய்மை பாரத இயக்கத்தின் முக்கிய கூறுகளாகும். தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்) பகுதி II–ன் செயல்பாட்டு வழிகாட்டுதல்களின்படி, தனிநபர் இல்லக் கழிப்பறை கட்டுதல் தவிர ஏனைய கூறுகள் அனைத்தும் 15–வது நிதிக் குழு மானியம் மற்றும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்துடன் ஒருங்கிணைந்து செயல்படுத்தப்படுகிறது.

**அ) தனி நபர் இல்லக் கழிப்பறைகள்**

அனைத்து ஊரகக் குடும்பங்களும் கழிப்பறை வசதி பெறுவதை உறுதி செய்வதே இவ்வியக்கத்தின்

நோக்கமாகும். முழுமையாக முடிக்கப்பட்ட தனி நபர் இல்ல கழிப்பறையானது, அடித்தளக் கட்டுமானம், மேல்தளக் கட்டுமானம் மற்றும் தண்ணீர் வசதி ஆகியவற்றை உள்ளடக்கியதாகும். கண்டறியப்பட்ட தகுதி வாய்ந்த குடும்பத்திற்குத் தனி நபர் இல்ல கழிப்பறைக் கட்ட ரூ.12,000/- ஊக்க நிதியாக வழங்கப்படுகிறது. 2021-22 ஆம் ஆண்டில் ரூ.23.60 கோடி மதிப்பீட்டில் 19,669 கழிப்பறைகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

**ஆ) சமுதாய சுகாதார வளாகங்கள்**

திறந்த வெளியில் மலம் கழித்தலற்ற நிலையின் கூடுதல் நடவடிக்கைகளில் நிறைவுற்ற ஊராட்சி என்ற நிலையினை பெறுவதற்கு, அங்கு வந்து செல்லும் மக்களின் தேவைகளை பூர்த்தி செய்யும் விதமாக, குறைந்தபட்சம் ஒரு சமுதாய சுகாதார வளாகம் இருத்தல் அவசியமானதாகும். ஆண்கள் மற்றும் பெண்களுக்கான தனித் தனியாக போதிய எண்ணிக்கையிலான கழிப்பறைகள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு ஒரு கழிப்பறையும்,

குளியலறைகள், கை கழுவுவதற்கான வசதி மற்றும் இதர வசதிகளை உள்ளடக்கிய சமுதாய சுகாதார வளாகங்கள், கிராம மக்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய மற்றும் எளிதில் அணுகக் கூடிய இடத்தில் இத்திட்டத்தின் கீழ் அமைக்கப்படுகிறது. 2021–22 ஆம் ஆண்டில் ரூ.5.46 கோடி மதிப்பீட்டில் 104 சமுதாய சுகாதார வளாகங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

**இ) திட மற்றும் திரவக் கழிவு மேலாண்மை**

திட மற்றும் திரவக் கழிவு மேலாண்மை, இத்திட்டத்தின் ஒரு முக்கியக் கூறாகும். தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்) பகுதி–II திட்டத்தின் கீழ், திட மற்றும் திரவக்கழிவு மேலாண்மைத் திட்ட செயலாக்கத்திற்கான மொத்த உதவித் தொகை ஒவ்வொரு கிராம ஊராட்சியின் மொத்த மக்கள் தொகை அடிப்படையில் கணக்கிடப்படும். அனைத்துப் பணிகளும் 15–வது நிதிக் குழு மானியம் மற்றும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டங்களுடன் ஒருங்கிணைந்து செயல்படுத்தப்படுகிறது.

**ஈ) திடக்கழிவு மேலாண்மை நடவடிக்கைகள்**

தமிழகத்தில் உள்ள அனைத்து கிராம ஊராட்சிகளிலும் ஏற்கனவே திடக்கழிவு மேலாண்மை வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. எனினும், சிறந்த முறையில் திடக்கழிவுகளை மேலாண்மை செய்திடும் பொருட்டு முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகிறது.

அனைத்து கிராம ஊராட்சிகளிலும் 'திடக்கழிவுத் தணிக்கை' நடத்தப்பட்டு அந்த ஊராட்சியில் உற்பத்தியாகும் திடக்கழிவுகளின் வகைகள் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது. உற்பத்தியாகும் கழிவுகளில், 70 விழுக்காட்டிற்கும் மேலாக மக்கும் தன்மை உடைய கழிவுகளே காணப்படுகிறது. அவற்றை சிறந்த முறையில் உரமாக்க ஏதுவாக குப்பையை வீட்டிலேயே தரம் பிரித்து வழங்கிட பொதுமக்களுக்கு விழிப்புணர்வு வழங்கப்பட்டு வருகிறது.

நகர்ப்புரத்தை ஒட்டிய பெரிய கிராம ஊராட்சிகளில் உற்பத்தியாகும் திடக் கழிவுகளை சிறந்த முறையில் கையாள வேண்டி, 2020-21 ஆம் ஆண்டில் 287 நுண் உரம் தயாரிக்கும் மையங்கள் அமைக்கப்பட்டுள்ளது.

## உ) நெகிழிக் கழிவு மேலாண்மை

ஊராட்சி ஒன்றிய அளவில் நெகிழிக் கழிவு மேலாண்மை அலகு அமைக்க ரூ.16 லட்சம் தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்) பகுதி–II திட்டத்தின் கீழ் வழங்கப்படுகிறது. சுய உதவிக் குழுக்களால் நடத்தப்படும் இந்த அலகுகளில் இருந்து பெறப்படும் துகள்களாக்கப்பட்ட நெகிழிக் கழிவுகள், சாலைகள் அமைப்பதற்குப் பயன்படுத்தப்படும். சுய உதவிக் குழுக்களால் நடத்தப்படும் அலகுகளில் நெகிழிக் கழிவுகளை பயன்படுத்தி மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களான நடைபாதை அமைக்க பயன்படுத்தப்படும் பேவர்பிளாக், பூங்காக்களில் அமைக்கப்படும் இருக்கைகள் போன்ற பொருட்கள் தயாரிக்க தேவைப்படும் வசதிகள் ஏற்படுத்தித்தரப்படும். வீடுகளில், மறுசுழற்சி செய்யக்கூடிய நெகிழிப் பொருட்களை தரம் பிரிப்பதை ஊக்குவிக்கும் வகையில், நேரடி '**நெகிழி மீள வாங்கும் கொள்கை**' அறிமுகப்படுத்தப்பட்டு நெகிழி பொருட்களை மீள வாங்கும் மையங்கள் (Direct Plastic Buyback Centres) கிராம ஊராட்சிகளில் அமைக்கப்படும்.

2021–22 ஆம் ஆண்டில் ரூ.5.28 கோடி மதிப்பீட்டில் 33 நெகிழிக் கழிவு மேலாண்மை அலகுகள் அமைக்கப்பட்டுள்ளது.

**ஊ) திரவக்கழிவு மேலாண்மை நடவடிக்கைகள்**

ஒரு ஊராட்சி ஒன்றியத்திற்கு இரண்டு கிராம ஊராட்சிகள் வீதம், மொத்தம் 776 கிராம ஊராட்சிகள் முன்மாதிரியாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. கழிவு நீர் மேலாண்மையில் நிறைவுற்ற (Saturation) நிலையினை அடைந்திட, சுகாதார நடை பயணம், அடிப்படை உட்கட்டமைப்புகள் அடங்கிய குக்கிராம வாரியான வரைபடம், தேவைப்படும் கழிவு நீர் மேலாண்மை வசதிகள் மற்றும் அதற்கான நிதி ஆதாரம் ஆகிய அனைத்து நடவடிக்கைகளும் தேர்ந்தெடுக்கப்பட்ட கிராம ஊராட்சிகளில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கழிவு நீரை திறம்பட கையாளவும், அவை சாலைகள் / தெருக்கள் மற்றும் பொது இடங்களில் தேங்குவதைத் தடுக்கும் நோக்குடன், சமுதாய உறிஞ்சுக்குழிகள், கிடைமட்ட / செங்குத்து வடிகட்டிகள் அமைத்தல், ஆகியவை தூய்மை பாரத

இயக்கம் (ஊரகம்) பகுதி–II–திட்டத்தின் கீழ் 15–வது நிதிக் குழு மானியத்துடன் ஒருங்கிணைந்து எடுத்துச்செய்யப்படுகிறது.

**எ) மலக்கழிவு மேலாண்மை**

நகர்ப்புரத்தை ஒட்டிய பெரிய கிராம ஊராட்சிகளிலும், கழிவு நீர்த் தொட்டிகள் (Septic tanks) அதிகம் உள்ள கிராம ஊராட்சிகளிலும், கழிப்பறையில் இருந்து வெளியேறும் கருப்பு நீர், நீர் நிலைகளை மாசுபடுத்தாத வகையில் திறம்பட மேலாண்மை செய்திட மலக்கழிவு மேலாண்மை அலகுகள், தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்) பகுதி–II திட்டத்தின் கீழ் அமைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

சம்பந்தப்பட்ட ஊராட்சிகளிலிருந்து 10 கி.மீ. சுற்றளவில் உள்ள நகர்ப்புர பகுதிக்குட்பட்ட மலக்கழிவு மேலாண்மை அலகில் போதிய கூடுதல் கொள்ளளவு இருப்பின் அவற்றுடன் இணைந்து மலக்கழிவுகளை மேலாண்மை செய்திட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**ஏ) சாண எரிவாயு கலன் (GOBAR–dhan)**

விவசாயக் கழிவுகள் மற்றும் கால்நடை சாணக் கழிவுகளை வளமாக மாற்றுதல் மற்றும் கழிவுகளை மேலாண்மை செய்வதன் மூலம் கிராமத்தின் சுகாதாரத் தரத்தை மேம்படுத்துவது என்பது இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். தமிழகத்தில் புதுக்கோட்டை மற்றும் மதுரை மாவட்டங்களில் 2 சாண எரிவாயு கலன்கள் அமைக்கும் பணிகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது,

தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்) பகுதி–II–திட்டத்தின் கீழ், முழு திட்ட காலத்திற்கும், ஒரு மாவட்டத்திற்கு ரூ.50 இலட்சம் வரை சாண எரிவாயு திட்டத்தை மேற்கொள்ள அனுமதிக்கப்படுகிறது.

**ஐ) நேரடி தகவல் பரிமாற்றத்தில் ஊக்குநர்களை ஈடுபடுத்துதல்**

சுய உதவிக் குழுக்கள் / ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு ஆகியவற்றிலிருந்து கண்டறியப்பட்ட சுமார் 12,000 ஊக்குநர்களுக்கு, கள அளவில் நேரடி

தகவல் பரிமாற்றத்தை பயனுள்ள வகையில் மேற்கொள்வதை உறுதிசெய்திட, திறந்த வெளியில் மலம் கழித்தல் அற்ற நிலையை அடைதல் மற்றும் அது தொடர்பான கூடுதல் நடவடிக்கைகளில் (ODF Plus) அடிப்படை பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. அவர்கள், பெண்கள் மற்றும் பொது மக்களிடையே கழிப்பறை பயன்பாட்டின் முக்கியத்துவம் குறித்து கலந்துரையாடுகிறார்கள். மேலும், பிற துறைகளைச் சார்ந்த களப்பணியாளர்களுடன் இணைந்து கூட்டு முயற்சியாக பள்ளிகள், அங்கன்வாடி மையங்கள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஆகிய இடங்களுக்கு சென்று சுகாதாரம் குறித்த விழிப்புணர்வினை ஏற்படுத்துகின்றனர். ஊக்குநர்களின் செயல்பாடுகள் 'தூய்மை தமிழகம்' கைப்பேசி செயலி மூலம் கண்காணிக்கப்படுகிறது. மேலும் அவர்களுக்கு அதற்கேற்ப ஊக்கத்தொகையும் வழங்கப்படுகிறது.

### 4.8. ஷியாம பிரசாத் முகர்ஜி ரூர்பன் இயக்கம்

கிராமங்களில் பொருளாதார வளர்ச்சியை ஊக்கப்படுத்தவும், அடிப்படை சேவைகளை

மேம்படுத்தவும் மற்றும் நகர்ப்புரங்களுக்கு இணையான வளர்ச்சி உடையதாக சரியான திட்ட வடிவமைப்புடன் கூடிய "ரூர்பன் தொகுப்பினை" உருவாக்குவதே ஷியாம் பிரசாத் முகர்ஜி ரூர்பன் இயக்கத்தின் நோக்கமாகும். தமிழ்நாட்டிற்கு மூன்று கட்டங்களாக 11 பழங்குடியினர் அல்லாத தொகுப்புகள் ஒன்றிய அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு தேவையான நிதியினை ஒன்றிய மற்றும் மாநில அரசுகளால் செயல்படுத்தப்படும் திட்டங்கள் மூலம் ஒருங்கிணைக்கப்படுகிறது. ஷியாம் பிரசாத் முகர்ஜி ரூர்பன் திட்டத்தின் கீழ் 14 கூறுகள் விரும்பத்தக்கதாக கருதப்படுகின்றன. இதில் பொருளாதார நடவடிக்கையுடன் கூடிய திறன் வளர்ப்பு பயிற்சியும் அடங்கும். இடைநிரவல் நிரப்பு நிதியின் (CGF) கீழ் ரூ.330 கோடி மதிப்பீட்டில் 976 பணிகள் மேற்கொள்ளப்பட்டு 734 பணிகள் நிறைவடைந்துள்ளன. மீதமுள்ள 242 பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. ஒருங்கிணைப்பு நிதியின் (Convergence) கீழ் ரூ.799.88 கோடி மதிப்பீட்டில் 874 பணிகள்

மேற்கொள்ளப்பட்டு 862 பணிகள் நிறைவடைந்துள்ளன. மீதமுள்ள 12 பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

**4.9. தேசிய கிராம சுயாட்சி திட்டம்** (RGSA)

ஊராட்சி நிறுவனங்களின் திறனை வலுப்படுத்தவும் ஊரக உள்ளாட்சி நிர்வாகம் உள்ளூர் வளர்ச்சிக்கு அதிக முக்கியத்துவம் வழங்குவதை உறுதி செய்யவும் ஒன்றிய அரசானது சீரமைத்த தேசிய கிராம சுயாட்சி திட்டத்தினை 2018–ல் அறிமுகப்படுத்தியது. மேலும் மக்கள் பங்கேற்புடன் கூடிய திட்டம் தயாரித்தல், தொழில்நுட்ப உதவியுடன் உள்ளூர் வளங்களை திறமையாக பயன்படுத்தி நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகளுடன் தொடர்புடைய உள்ளூர் பிரச்சனைகளுக்கு தீர்வுகள் ஏற்படுத்துவதும் இத்திட்டத்தின் நோக்கமாகும். ஐக்கிய நாடுகளின் நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகளை (SDGs) 2030-க்குள் அடைவதற்கு ஊராட்சிகள் முக்கிய பங்கு வகிக்கின்றன.

**நோக்கங்கள்**

- நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகளை அடைய ஊராட்சி நிறுவனங்களின் நிர்வாகத் திறனை மேம்படுத்துதல்.
- அனைவரையும் உள்ளடக்கிய உள்ளாட்சி நிர்வாகத்தை அளித்திடவும், உள்ளூர் வளங்களை தேவையான அளவு பயன்படுத்தி மற்ற திட்டங்களுடன் ஒருங்கிணைந்து ஊராட்சிகளின் திறனை மேம்படுத்துதல்.
- கூடுதல் வருவாய் ஆதாரங்களை திரட்டும் வண்ணம் ஊராட்சிகளின் திறனை மேம்படுத்துதல்.
- ஊராட்சி நிர்வாகத்தில் மக்கள் பங்களிப்பு, வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புடைமையுடன் செயல்பட கிராம சபைகளை வலுப்படுத்துதல்.
- ஊராட்சிகளின் திறன் மேம்பாடு மற்றும் அதனை வழி நடத்துவதற்காக கல்வி மற்றும் சீர்மிகு நிறுவனங்களை ஒன்றிணைத்தல்.
- ஊராட்சி நிறுவனங்களின் திறன் மேம்பாட்டிற்காக பல்வேறு நிலைகளில் நிறுவனங்களை வலுப்படுத்துதல்.

- நிர்வாகத்திறன் மற்றும் மேம்படுத்தப்பட்ட சேவைகளை வழங்கும் வகையில் ஊராட்சிகளில் மின்ஆளுமை மற்றும் இதர தொழில்நுட்ப உத்திகளைப் பயன்படுத்துதல்.
- செயல்திறன் அடிப்படையில் ஊராட்சி நிறுவனங்களை அங்கீகரித்து ஊக்குவித்தல்.

## நிதி ஒதுக்கீடு

தேசிய கிராம சுயாட்சி திட்டமானது (RGSA) ஒன்றிய மற்றும் மாநில அரசு 60:40 என்ற நிதி விகிதாச்சார முறையில் செயல்படுத்தப்படுகிறது. ஒன்றிய அரசானது பயிற்சி, பயிற்சிக்கான உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் மனிதவளம், தொலைதூரக் கல்வி, புதுமையான முயற்சிகள், ஊராட்சிகளுக்கு தொழில்நுட்ப உதவிகள், நிர்வாகம் மற்றும் நிதி தகவல் பகுப்பாய்வு மற்றும் திட்டப் பிரிவு, ஊராட்சி கட்டடம் மற்றும் சமுதாயகூடம், ஊராட்சி மின்னணு செயலாக்கம், பொருளாதார வளர்ச்சி மற்றும் வருவாய் மேம்படுத்துதலுக்கு திட்ட அடிப்படையில் உதவிகள், தகவல், கல்வி மற்றும்

தொடர்பு (2%) மற்றும் திட்ட மேலாண்மை(5%) ஆகியவைகளுக்கு நிதி அளிக்கிறது.

மேலும் 2021-22-ம் ஆண்டு வருடாந்திர செயல் திட்டத்திற்கு தேசிய கிராம சுயாட்சி திட்டத்தின் (RGSA) கீழ் பல்வேறு பயிற்சிகள், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் மனித வளத்தை மேம்படுத்தல் ஆகியவைகளுக்கு ஒன்றிய அரசு 307.371 கோடி ரூபாய் ஒப்புதல் அளித்துள்ளது. ஒன்றிய அரசின் பங்கு 39.89 கோடி ரூபாய் மற்றும் மாநில அரசின் பங்கு 26.59 கோடி ரூபாய் சேர்த்து 66.48 கோடி ரூபாய் அரசு விடுவித்துள்ளது.

**பயிற்சி கூறுகள்**

தேசிய கிராம சுயாட்சி திட்டத்தின் கீழ், பல்வேறு தலைப்புகளில் கீழ்க்கண்டவாறு பயிற்சிகள் நடத்தப்படுகின்றன:

அ) பயிற்சி நிறுவனங்களின் மூலம் கிராம ஊராட்சியின் வளர்ச்சித் திட்டம், வட்டார ஊராட்சியின் வளர்ச்சித் திட்டம், மாவட்ட ஊராட்சியின் வளர்ச்சித் திட்டம் தயாரித்தல்.

ஆ) தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994, ஊராட்சி நிர்வாகம், கணக்குகள் பராமரிப்பு, தணிக்கை, சமூக தணிக்கை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் பல்வேறு திட்டங்கள் குறித்த பயிற்சி.

இ) இ–கிராம சுவராஜ், தகவல் தொடர்பு, புவி இடம் சார்ந்த தொழில்நுட்பம், கட்டட தொழில்நுட்பம், தரக் கட்டுப்பாடு ஆகிய தலைப்புகளில் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. தற்போது சமூக பாதுகாப்பு, ஆரோக்கியம், சத்துணவு, குடிநீர், பல்லுயிர், சுகாதாரம், கழிவு மேலாண்மை, பாலின சமத்துவம், குழந்தை நட்பு ஊராட்சிகள், பேரிடர் மேலாண்மை, கல்வி, ஆளுமை வளர்ச்சி போன்ற சிறப்பு பயிற்சிகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.

## அட்டவணை 4.3

## தேசிய கிராம சுயாட்சி திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட பயிற்சிகளின் விவரம் (RGSA) 2021-22

| வ. எண். | பயிற்சியின் பெயர் | பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | கிராம ஊராட்சி வளர்ச்சித் திட்டம் / வட்டார ஊராட்சி வளர்ச்சித் திட்டம் / மாவட்ட ஊராட்சி வளர்ச்சித் திட்டம் | 7106 |
| 2. | தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் மாதிரி ஊராட்சிகளுக்கான பயிற்சிகள். | 427 |
| 3. | தகவல் தொழில்நுட்ப பயிற்சிகள் | 32309 |
| 4. | கட்டட தொழில்நுட்ப பயிற்சி | 8164 |
| 5. | சுய உதவிக் குழுக்கள் மற்றும் ஊராட்சி நிறுவனங்களின் ஒருங்கிணைப்பு பயிற்சி | 75150 |
| 6. | பல்வேறு துறை சார்ந்த பயிற்சிகள் | 1760 |
| 7. | சமூக தணிக்கை பயிற்சி | 616 |
| 8. | வாழ்வாதார பயிற்சி | 893 |
| 9. | ஊராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சி திட்டம் பற்றிய மூன்று மாத சான்றிதழ் படிப்பு. | 2174 |
| 10. | ஊராட்சிகள் சொந்தமாக வருவாய் ஈட்டுதல் குறித்த பயிற்சி | 1728 |
| | **கூடுதல்** | **130327** |

2022-23-ம் ஆண்டில் புதுப்பிக்கப்பட்ட தேசிய கிராம சுயாட்சி திட்டத்தின் சிறப்பு முக்கியத்துவம்,

நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகளின் உள்ளூர்மயமாக்குதலுக்கு (LSDG) அளிக்கப்படும்.

## 4.10. கண்காணித்தல்

### 4.10.1. முக்கிய செயல்பாட்டு குறியீடுகள்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையானது கிட்டத்தட்ட 9 ஒன்றிய மற்றும் 11 மாநில அரசின் திட்டங்களை செயல்படுத்துவதோடு மட்டுமல்லாமல் மூன்றடுக்கு உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஒதுக்கீடு செய்யப்படும். 15வது ஒன்றிய நிதிக்குழு மற்றும் 5வது மாநில நிதிக்குழு நிதிகளின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களின் முன்னேற்றத்தினையும் கண்காணித்து வருகிறது. இத்திட்டங்களின் முன்னேற்றத்தினை உடனுக்குடன் ஒன்றிய அரசின் பல்வேறு இணைய முகப்புகள் மூலமாகவும், tnrdpr.gov.in மூலமாகவும் பதிவேற்றம் செய்யப்படுகிறது.

திட்டங்களின் முன்னேற்றத்தினை கண்காணிப்பதில் திட்டத்தின் செயல்பாடுகள் மற்றும் அதன் முடிவுகள் ஆகியவற்றை அளவிடக்கூடிய குறியீடுகளை உருவாக்குவது மிகவும்

முக்கியமானதாகும். முதல் கட்டமாக பல்வேறு திட்டங்களின் முன்னேற்றத்தினை அறிவியல் பூர்வமாக கண்காணித்து உடனுக்குடன் முடிவுகளை எடுப்பதற்கு உதவும் "முக்கிய செயல்பாட்டு குறியீடுகளை" (Key Performance Indicators) இத்துறை உருவாக்கியுள்ளது. அவ்வாறு உருவாக்கப்பட்ட குறியீடுகளை கொண்டு முதல் முறையாக பல்வேறு திட்டப்பணிகளின் முன்னேற்றங்கள் மாவட்ட வாரியாக மற்றும் பல்வேறு திட்டங்களின் ஒட்டுமொத்த செயல்பாடு மற்றும் செயல்திறன்வாரியாக தரவரிசை செய்யப்பட்டு, மாதந்திர வளர்ச்சி அறிக்கை ஜனவரி 2022-ல் வெளியிடப்பட்டது.

இவ்வாறான அறிவியல் சார்ந்த அணுகுமுறை மாவட்ட, வட்டார அளவில் திட்டங்களை செயல்படுத்துவது மற்றும் கண்காணிப்பதில் பெருமளவிலான மாற்றத்தினை கொண்டு வந்துள்ளது. 2022-2023-ம் ஆண்டிற்குள் ஒன்றிய அரசின் திட்ட இணைய முகப்புகளில் உள்ள தரவுகள் பகிரப்படும்போது (API-Application Programming Interface) திட்டங்களின் நிலைகளை உடனுக்குடன் அறிந்து

கொள்வதற்கு ஒருங்கிணைந்த முகப்பு பலகை (Dashboard) உருவாக்கப்படும். இது கொள்கை முடிவுகள் எடுப்பவர்களுக்கும், செயல்படுத்தும் அலுவலர்களுக்கும் திட்டங்களை சிறப்பாக செயல்படுத்துவதற்கும், உள்ளாட்சி அமைப்புகளின் தலைவர்கள் / அமைப்புகள் தமக்கான இலக்கீடுகளை நிர்ணயித்தும், முன்னேற்றத்தின் தடங்களை கண்டறிவதற்கும் மற்றும் தேவையான முடிவுகளை அடைந்திட முக்கியமான கருவியாக அமையும்.

### 4.10.2. செயல்திறன் கண்காணித்தல் மற்றும் குறைதீர்த்தல்

பிரதம மந்திரி குடியிருப்பு திட்டத்தின் (ஊரகம்) கீழ் கள ஆய்வு மேற்கொள்ளவும், வீடுகள் கட்டும் பணி முன்னேற்றத்தினை துல்லியமாக கண்காணிக்கவும், கைப்பேசி செயலி ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. இச்செயலி வீடுகட்டும் பணி முன்னேற்றத்திற்கு ஏற்ப தாமதமின்றி நிதி விடுவிக்க உறுதி செய்கிறது. இச்செயலியின் உதவியுடன் ஒவ்வொரு வீட்டின்

அன்றாடப் பணி முன்னேற்றத்தை கண்காணித்து பயனாளிகளை ஊக்குவிக்கும் வகையில் ஊக்குவிப்பாளர்கள் நியமிக்கப்படுவார்கள். தற்போது, கடலூர் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டங்களில் சோதனை முயற்சியாக செயல்படுத்தப்படுகிறது. மாநிலத்தின் இதர மாவட்டங்களுக்கும் நீட்டிக்கப்படும்.

பிரதம மந்திரி குடியிருப்பு திட்டம் (ஊரகம்) மற்றும் ஊரக வளர்ச்சித் துறையின் இதர திட்டங்களின் கீழ் பெறப்படும் பயனாளிகளின் குறைகளை தீர்க்கும் வண்ணம் ஒரு அழைப்பு மையம் நிறுவப்பட்டு, அது செயலி மற்றும் புலனத்துடன் இணைக்கப்படும்.

### 4.10.3. கல்வி நிறுவனங்களை பயன்படுத்தி தரக்கட்டுப்பாடு செயல்முறை உருவாக்குதல்

மாநில மற்றும் ஒன்றிய திட்டங்களின் கீழ் நடைபெறும் சாலை மற்றும் பாலங்களின் பணிகளில் நவீன தொழில்நுட்பங்கள் மற்றும் உபகரணங்களை கொண்டு தரக்கட்டுபாட்டு சோதனை மேற்கொள்ள சிறந்த பொறியியல் கல்வி நிறுவனங்களின்

தொழில்நுட்ப சேவைகளை பயன்படுத்தி தரக்கட்டுபாட்டு கண்காணிப்பு அமைப்பு வலுப்படுத்தப்படும்.

### 4.10.4. ஊரும் வாழ்வும் (Rural Digest)

மாவட்ட அளவிளான அலுவலர்கள் வட்டார அளவில் உள்ள சிறந்த செயல்பாடுகளை மற்ற வட்டாரங்களுக்கு விரிவுபடுத்துவதற்கும் ஒரு மாவட்டத்தில் உள்ள சிறப்பான செயல்பாடுகள் மற்ற மாவட்டங்களுக்கு பகிரப்படுவதற்கான வாய்ப்புகள் குறைவாக உள்ளன. இதனை கருத்தில் கொண்டு மற்றவர்களுக்கு உந்துதலை ஏற்படுத்தும் விதமாகவும், சிறந்த செயல்பாடுகளை ஆவணப்படுத்தும் வழக்கத்தினை ஏற்படுத்தும் நோக்கிலும் மற்றும் அனுபவ பரிமாற்றம் நிகழும் வகையிலும் **"ஊரும் வாழ்வும்" (Rural Digest)** என்ற மாதந்திர மின்னிதழ் வெளியிடப்பட்டது. இம்மாதாந்திர மின்னிதழ் புதிய தகவல்களை கற்றுக்கொடுக்கும் நோக்கிலும், வெற்றிக் கதைகளை முன்னிலைப்படுத்தும் விதமாகவும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் தலைவர்கள்,

முன்னோடிகளின் வெற்றிப்பயணங்களை தாங்கி ஒவ்வொரு மாதமும் இவ்விதழ் பிரசுரிக்கப்படுகிறது. இம்மாதாந்திர மின்னிதழ் ஒவ்வொரு மாதமும் பிரசுரிக்கப்படும். இது கற்றல் மற்றும் சிறப்பான செயல்பாடுகளை பகிர்வதற்கு சீரிய தளமாக அமையும்.

# 5. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் பணியமைப்பு

### 5.1. பணியமைப்பு

கிராம பகுதிகளில் அடிப்படை வசதிகள் மற்றும் உட்கட்டமைப்பு உருவாக்குதல், சுகாதாரம், வீட்டு வசதி, வாழ்வாதாரம் மற்றும் கிராம ஊராட்சிகள் நிர்வாகம் மாநில மற்றும் ஒன்றிய அரசு திட்டத்தின் கீழ் வளர்ச்சி பணிகள் உள்ளிட்ட பணிகளை செயல்படுத்தும் முக்கிய துறையாக ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை விளங்குகிறது.

மாநில அளவில் 64 அரசிதழ் பதிவு பெற்ற அலுவலர்கள், 23 பொறியாளர்கள் / தொழில்நுட்ப அலுவலர்கள் மற்றும் 251 அரசிதழ் பதிவு பெறாத பணியாளர்களும், மாவட்ட / இதர அலுவலகங்களில் 1628 அரசிதழ் பதிவு பெற்ற அலுவலர்கள், 5292 பொறியாளர்கள் / தொழில்நுட்ப அலுவலர்கள் மற்றும் 98326 அரசிதழ் பதிவு பெறாத பணியாளர்களும் உள்ளனர்.

### 5.2. அரசிதழ் பதிவு பெற்ற பணியமைப்பு

இத்துறையில், மேற்கண்ட பணிகளை முறையாக திட்டமிடவும், செயல்படுத்திடவும், கண்காணிக்கவும் மாநில மற்றும் மாவட்ட அளவிலான அலுவலர் பணியிடங்கள் ஏற்படுத்தப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

## அட்டவணை 5.1

## வகை வாரியான பணியாளர்கள் விபரம்

## அரசிதழ் பதிவு பெற்ற அரசுப் பணியாளர்கள்

| வ. எண். | பதவியின் பெயர் | அனுமதிக்கப்பட்ட பணியிடங்களின் எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|
| | | இயக்குநரகம் | மாவட்ட / இதர அலுவலகங்கள் | மொத்தம் |
| 1. | கூடுதல் இயக்குநர் | 6 | 17 | 23 |
| 2. | இணை இயக்குநர் | 2 | 95 | 97 |
| 3. | உதவி இயக்குநர் | 10 | 445 | 455 |
| 4. | வட்டார வளர்ச்சி அலுவலர் | 46 | 1071 | 1117 |
| | மொத்தம் | 64 | 1628 | 1692 |

- கூடுதல் இயக்குநர் நிலையில், இதர துறைகளில் மாற்றுப்பணியில் 7 அலுவலர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.
- இணை இயக்குநர் நிலையில், இதர துறைகளில் மாற்றுப்பணியில் 7 அலுவலர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

## 5.3. பொறியியல் பணியமைப்பு

இத்துறையின் தொழில்நுட்ப அலுவலர்களைக் கொண்ட பிரிவானது ஊரகப் பகுதிகளில் உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகள் தொடர்பான கட்டுமானம் மற்றும் பராமரிப்பு பணிகளை மேற்கொள்வதுடன் ஒன்றிய மற்றும் மாநில அரசு திட்டங்களை செயலாக்கும் பொறுப்பினை கொண்டது.

### அட்டவணை 5.2

### வகை வாரியான பொறியியல் பணியாளர்கள் விவரம்

| வ. எண். | பதவியின் பெயர் | அனுமதிக்கப்பட்ட பணியிடங்களின் எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|
| | | இயக்குநரகம் | மாவட்ட / இதர அலுவலகங்கள் | மொத்தம் |
| 1. | தலைமைப் பொறியாளர் | 2 | – | 2 |
| 2. | கண்காணிப்பு பொறியாளர் | 3 | – | 3 |
| 3. | செயற்பொறியாளர் | 1 | 44 | 45 |
| 4. | உதவி செயற்பொறியாளர் | 3 | 194 | 197 |
| 5. | உதவிப் பொறியாளர் | 11 | 933 | 944 |
| 6. | முதுநிலை வரைதொழில் | – | 37 | 37 |

| வ. எண். | பதவியின் பெயர் | அனுமதிக்கப்பட்ட பணியிடங்களின் எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|
| | | இயக்குநரகம் | மாவட்ட / இதர அலுவலகங் கள் | மொத்தம் |
| | அலுவலர் | | | |
| 7. | இளநிலைப் பொறியாளர் | – | 314 | 314 |
| 8. | பணிமேற்பார்வையாள ர் / இளநிலை வரைதொழில் அலுவலர் | 3 | 2619 | 2622 |
| 9. | சாலை ஆய்வாளர் | – | 1151 | 1151 |
| | **மொத்தம்** | 23 | 5292 | 5315 |

- இத்துறையில் 45 செயற்பொறியாளர்கள் உள்ளனர். அவர்களில் இதர துறைகளில் மாற்றுப்பணியில் 5 செயற்பொறியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.
- இத்துறையில் உதவி செயற்பொறியாளர் நிலையில் 197 உதவி செயற்பொறியாளர்கள் உள்ளனர். அவர்களில் இதர துறைகளில் மாற்றுப்பணியில் 14 உதவி செயற்பொறியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.
- இத்துறையில் 944 உதவிப் பொறியாளர்களும், 314 இளநிலைப் பொறியாளர்களும், 37 முதுநிலை வரைதொழில் அலுவலர்களும், 2622 பணி

மேற்பார்வையாளர்கள் / இளநிலை வரைதொழில் அலுவலர்களும் 1151 சாலை ஆய்வாளர்கள் உள்ளனர். இத்துறையில் உள்ள 944 உதவிப் பொறியாளர்களில் இதர துறைகளில் மாற்றுப்பணியில் 17 உதவிப்பொறியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

## முதுநிலை அலுவலர்களை பிற துறைக்கு மாற்றுப் பணியில் அனுப்புதல்

இத்துறையைச் சார்ந்த கூடுதல் இயக்குநர், இணை இயக்குநர், செயற்பொறியாளர், உதவி இயக்குநர் மற்றும் உதவி செயற்பொறியாளர் நிலையில் உள்ள முதுநிலை அலுவலர்களை சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை, தொழில்முனைவோர் மேம்பாட்டு நிறுவனம் (EDII), தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம், தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (TAHDCO), சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் (CMDA), சிப்காட் (SIPCOT), தேசிய நலவாழ்வு இயக்கம் (NHM), தேசிய ஊரக உட்கட்டமைப்பு மேம்பாட்டு முகமை (NRIDA), தமிழ்நாடு

கண்ணாடி இழை வலையமைப்பு நிறுவனம் (TANFINET) மற்றும் தமிழ் இணையக் கல்விக் கழகம் (TVA) போன்ற துறைகளில் மாற்றுப் பணியில் பணிபுரிய உத்தரவிடப்பட்டுள்ளது. இதுபோன்ற பல்வேறு இதர துறைகளில் பணிபுரிவதன் மூலம் இதர துறை சார்ந்த பணிகளை கற்றுக் கொண்டு அதன் மூலம் தமது தொழிற்திறனை வளர்த்துக் கொள்ள உதவி புரிகிறது.

### 5. 4. அரசிதழ் பதிவு பெறாத பணியாளர் பணியமைப்பு

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் அடிப்படை பணியாளர்கள், விதிகள், தமிழ்நாடு அமைச்சுப்பணியாளர்கள் மற்றும் ஊரக வளர்ச்சி சார்நிலைப்பணி விதிகளுக்குட்பட்ட பணியாளர்கள் மற்றும் அரசிதழ் பதிவு பெறாத பணியாளர்கள் அனைவரது பணிகள் இப்பிரிவின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதனுடன் ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் கிராம ஊராட்சிகளின் பணியாளர்கள் நலன் சார்ந்த அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அரசிதழ் பதிவு பெறாத பணியமைப்பின் கீழ் மாநில அளவில் 251 பணியாளர்களும், மாவட்டங்களிலும் மற்றும் பிற அலுவலகங்களிலும் 98326 பணியாளர்கள் பணியாற்றுகின்றனர்,

அரசிதழ் பதிவு பெறாத பணியமைப்பின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள பணியாளர்கள் விவரம் மற்றும் அனுமதிக்கப்பட்ட பணியிடங்கள் கீழே அட்டவணையிடப்பட்டுள்ளன.

**அட்டவணை 5.3**
**அரசிதழ் பதிவுபெறாத பணியாளர்கள் விவரம்**

| வ. எண் | பதவியின் பெயர் | அனுமதிக்கப்பட்ட பணியிடங்கள் எண்ணிக்கை | |
|---|---|---|---|
| அரசுப் பணியாளர்கள் | | | |
| | | இயக்குநரகம் | மாவட்டம் / இதர அலுவலகங்கள் |
| 1 | துணை வட்டார வளர்ச்சி அலுவலர் | 47 | 3936 |
| 2 | உதவியாளர் | 49 | 5642 |
| 3 | இளநிலை உதவியாளர் | 38 | 3171 |
| 4 | சுருக்கெழுத்து தட்டச்சர் | 17 | 185 |
| 5 | தட்டச்சர் | 26 | 1054 |
| 6 | ஓட்டுநர் | 11 | 934 |

| வ. எண் | பதவியின் பெயர் | அனுமதிக்கப்பட்ட பணியிடங்கள் எண்ணிக்கை | |
|---|---|---|---|
| 7 | பதிவுரு எழுத்தர் | 7 | 149 |
| 8 | அலுவலக உதவியாளர் | 54 | 670 |
| 9 | இரவுக் காவலர் | 2 | 135 |
| 10 | மசால்சி | 0 | 14 |
| **மொத்தம்** | | **251** | **15890** |

| உள்ளாட்சிப் பணியாளர்கள் விவரம் | | |
|---|---|---|
| அ) ஊராட்சி ஒன்றியப் பணியாளர்கள் | | |
| 1 | ஓட்டுநர் | 776 |
| 2 | பதிவுரு எழுத்தர் | 390 |
| 3 | அலுவலக உதவியாளர் | 1533 |
| 4 | இரவுக் காவலர் | 380 |
| 5 | மசால்சி | 9 |
| **மொத்தம்** | | **3088** |
| ஆ) கிராம ஊராட்சிப் பணியாளர்கள் | | |
| 1 | ஊராட்சி செயலர் | 12525 |
| 2 | தூய்மை பணியாளர் | 26404 |
| 3 | மேல்நிலை நீர்தேக்க தொட்டி இயக்குபவர் | 40419 |
| **மொத்தம்** | | **79348** |

**1) கிராம ஊராட்சி பணியாளர்களுக்கான சலுகைகள்**

கிராம ஊராட்சி செயலர்களுக்கு ஏற்கனவே அனுமதிக்கப்பட்டு வரும் சலுகைகளுடன் திருமணமான பெண் ஊராட்சி செயலர்களுக்கு மகப்பேறு விடுப்பினை ஒன்பது மாதங்களிலிருந்து ஓராண்டாக 01.07.2021 முதல் உயர்த்தி அரசால் ஆணையிடப்பட்டுள்ளது.

**2) பவானிசாகர் அடிப்படைப் பயிற்சி**

பவானிசாகர் அரசு அலுவலர் பயிற்சி நிலையத்தில் பணியாளர்களுக்கு பயிற்சி வழங்க தாமதமேற்படுவதால் தகுதிகாண் பருவம் நிறைவு செய்வதில் தாமதம் ஏற்பட்டது. இந்நிலையினை தவிர்க்க பணியாளர்கள் பணிபுரியும் மாவட்டத்திலேயே இப்பயிற்சியினை வழங்க அரசு ஆணையிட்டதற்கேற்ப ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் இதுவரை 1002 பணியாளர்கள் தாங்கள் பணிபுரியும் மாவட்டத்திலேயே இப்பயிற்சியினை நிறைவு செய்துள்ளனர். இதன் மூலம் அவர்களது தகுதிகாண் பருவம் நிறைவு செய்தல், ஊதிய உயர்வு

மற்றும் பதவி உயர்வு தாமதமின்றி பெறுவதற்கு வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

# 6. வறுமை ஒழிப்பு மற்றும் வாழ்வாதார இயக்கங்கள்

## 6. வறுமை ஒழிப்பு மற்றும் வாழ்வாதார இயக்கங்கள்

தமிழ்நாடு அரசு ஏழை எளிய அடித்தட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்திட, பல்வேறு சமூகப் பொருளாதார வளர்ச்சித் திட்டங்களை வகுத்து, அதன் பயன் அனைவருக்கும் சென்றடைய வேண்டும் என்ற நோக்கத்துடன், பல்வேறு முன்னோடித் திட்டங்களைச் செயல்படுத்தி முன்மாதிரி மக்கள் நல அரசாக விளங்கி வருகிறது.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையானது, ஏழை, எளிய, விளிம்பு நிலை மற்றும் நலிவுற்ற மக்களின் வறுமையை ஒழிப்பது மற்றும் சமூகப் பொருளாதாரத்தை மேம்படுத்துவது ஆகியவற்றை முக்கிய கடமையாகக் கொண்டு, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் திட்டங்கள் மற்றும் உலக வங்கி நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் வாழ்ந்து காட்டுவோம் திட்டங்கள் மூலமும் வாழ்வாதாரத்தினை அதிகரிக்க உதவும் பல்வேறு நலத்திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

### 6.1. சுய உதவிக் குழு இயக்கம்

தொலைநோக்கு பார்வை கொண்ட முன்னாள் முதலமைச்சர் கலைஞர் மு, கருணாநிதி அவர்களின் தலைமையின் கீழ், 1989 ஆம் ஆண்டு தருமபுரி மாவட்டத்தில் சுய உதவிக்குழுக்களுக்கான விதை விதைக்கப்பட்டது பெருமைக்குரியதாகும். ஐஃபாடு

(IFAD) நிதி உதவியுடன் செயல்படுத்தப்பட்ட திட்டத்தின் கீழ் சுய உதவிக் குழு இயக்கம் வலுப்பெற்றது. 1996 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட மகளிர் திட்டத்தின் கீழ் இந்த இயக்கம் மற்ற மாவட்டங்களுக்கும் விரிவுப்படுத்தப்பட்டது. 2000 ஆம் ஆண்டுக்குள் சென்னை உட்பட அனைத்து மாவட்டங்களிலும் சுய உதவிக் குழுக்கள் உருவாக்கப்பட்டன. பலமான சுய உதவிக் குழு அஸ்திவாரம் உருவாக்கப்பட்டிருந்ததால், 1999 ஆம் ஆண்டு ஒன்றிய அரசின் பங்களிப்புடன் ஸ்வர்ணஜெயந்தி கிராம சுய வேலை வாய்ப்புத் திட்டம் (SGSY) அறிமுகப்படுத்தப்பட்டபோது, ஊரகப் பகுதியில் உள்ள சுய உதவிக் குழுக்களின் பொருளாதார முன்னேற்றத்திற்கான திட்டத்தினைத் திறம்பட செயல்படுத்த முடிந்தது.

### 6.2. தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், 1983 ஆம் ஆண்டு கல்வி, வேலைவாய்ப்பு, பொருளாதார மேம்பாடு மற்றும் தற்சார்பு மூலமாக மகளிர் சமூகப் பொருளாதார மேம்பாடு அடைவதை முதன்மை நோக்கமாகக் கொண்டு தமிழ்நாடு அரசால் நிறுவப்பட்டது. தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் பல்வேறு வறுமை ஒழிப்புத் திட்டங்களின் மூலம் தமிழ்நாட்டில் சுய உதவிக் குழுக்களுக்குத் திறன் வளர்ப்புப் பயிற்சிகள் வழங்கி, வலுவான சமுதாயம்

சார்ந்த அமைப்புகளான ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு, வட்டார அளவிலான கூட்டமைப்பு ஆகியவற்றை உருவாக்கி, வங்கிக் கடன் இணைப்புகளையும், தொழில் முன்னேற்றத்தையும் ஏற்படுத்தி, பெண்களின் ஆற்றலை அதிகரித்து, சுய உதவிக் குழு இயக்கத்தை முன்னெடுத்துச் செல்கிறது.

### 6.2.1. நிறுவன ஏற்பாடுகள்

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், நிறுவனமாக பதிவு செய்யப்பட்டு, அரசு முதன்மைச் செயலாளர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை அவர்களைத் தலைவராகக் கொண்டு செயல்படுகிறது. ஊரகம் மற்றும் நகர்ப்புர திட்டங்களைச் செயல்படுத்த மேலாண்மை இயக்குநர் அவர்களும், நகர்ப்புர வாழ்வாதாரத் திட்டத்தின் செயல் இயக்குநர், கருப்பொருள் வல்லுநர்களான கூடுதல் இயக்குநர்கள், இணை இயக்குநர்கள் மற்றும் இதர அலுவலர்களுடன் மாநில அளவில் செயல்படுத்தப்படுகிறது. நிதி உள்ளாக்கம், வேளாண்மை மற்றும் தொழில் நிறுவன மேம்பாடு உள்ளிட்ட கருப்பொருட்களில் ஆலோசனை வழங்க திட்ட ஆலோசகர்கள் நியமிக்கப்படுகின்றனர்.

மாவட்ட அளவில், இணை இயக்குனர் நிலையில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையைச் சேர்ந்த அலுவலரை திட்ட இயக்குநர் TNSRLM தலைமையாகக் கொண்டு மாவட்ட திட்ட செயலாக்க அலகு

செயல்படுகிறது. உதவித் திட்ட அலுவலர்கள் திட்டக் கூறுகளுக்கான அனைத்து களப் பணிகளையும் ஒருங்கிணைத்து செயல்படுத்தி வருகின்றனர்.

வட்டார இயக்க மேலாண்மை அலகானது, வட்டார இயக்க மேலாளர் தலைமையின் கீழ் செயல்பட்டு வருகிறது. வட்டார ஒருங்கிணைப்பாளர்கள் ஒதுக்கப்பட்ட திட்டக் கூறுகளை செயல்படுத்தி வருகிறார்கள். நகர்ப்புரங்களில், 3,000 ஏழைக் குடும்பங்களை உள்ளடக்கிய பகுதிகளுக்கு ஒரு சமுதாய ஒருங்கிணைப்பாளர் வாழ்வாதாரத் திட்டத்தினைக் கண்காணித்து செயல்படுத்துவர்.

**6.2.2. தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள்:**

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் பின்வரும் நான்கு முக்கிய திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

i. **தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் (TNSRLM)**
ii. **தேசிய ஊரகப் பொருளாதாரப் புத்தாக்கத் திட்டம் (NRETP)**
iii. **தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கம் (TNULM)**
iv. **தீன் தயாள் உபாத்தியாய கிராமப்புறத் திறன் மேம்பாட்டுத் திட்டம் (DDU–GKY)**

## 6.3. தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் (TNSRLM)

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் 2012–13 ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு அரசால் செயல்படுத்தப்படுகிறது. வாழ்வாதார மேம்பாடு, நிதி மற்றும் பிற சேவைகளை அணுகுவதன் வாயிலாக ஏழைக் குடும்பங்கள் சுய வேலைவாய்ப்பு மற்றும் திறமையான வேலை வாய்ப்புகளைப் பெறுவதன் மூலம் வறுமையைக் குறைப்பதே தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் நோக்கமாகும். ஏழைகளின் வலுவான மற்றும் துடிப்பான நிறுவனத் தளங்களை உருவாக்குவதன் மூலமும், நிலையான வாழ்வாதார வாய்ப்புகளை வழங்குவதற்காக செயல்திறன் மிக்க சமுதாயம் சார்ந்த அமைப்புகளாக உருவாக்கி நிலைத்த வாழ்வாதாரம் உருவாக்கப்படும்.

### வாழ்வாதார இயக்கத்தின் கீழ் மகளிர் சுய உதவிக் குழுக்கள்

மகளிர் திட்டம் மூலம் செயல்படுத்தப்படும் தமிழ்நாடு ஊரக வாழ்வாதார இயக்கமானது 18 முதல் 60 வயதுடைய 12 முதல் 20 எண்ணிக்கையிலான பெண்கள் தன்னார்வ அடிப்படையில் இணைந்து

சேமிப்பு மற்றும் சிக்கனப் பழக்கத்தினை மேம்படுத்துகிறது.

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார திட்டமானது வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் கொள்கையின் அடிப்படையில் சுய உதவிக் குழு, ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு போன்ற அமைப்புகளின் மூலம் கடையனுக்கும் கடைத்தேற்றம் என்ற அடிப்படையில் மிகவும் ஏழ்மை நிலையில் உள்ள மக்களின் வருவாயினை உயர்த்திட DAY–NRLM திட்டக் கூறுகள் மற்றும் வங்கி இணைப்பு சேவைகளின் மூலம் செயல்படுத்துவதாகும்.

மக்கள் பங்கேற்புடன் கூடிய மக்கள் நிலை ஆய்வு (PIP) மூலம் ஏழைகளை அடையாளம் காணும் கணக்கெடுப்பு நடத்தப்பட்டு, கிராமப்புறங்களில் விடுபட்ட ஏழைகள் கண்டறியப்பட்டு புதிய சுய உதவிக் குழுக்கள் விடுபட்ட ஏழைப் பெண்களைக் கொண்டு உருவாக்கப்பட்டது. கிராமப்புறங்களில் 2014–15 முதல் நாளது வரை 1.36 இலட்சம் சுய உதவிக் குழுக்கள் இலக்கு மக்களைக் கொண்டு தமிழ்நாடு ஊரக வாழ்வாதார இயக்கத்தால் உருவாக்கப்பட்டுள்ளன.

## அட்டவணை 6.1

| வ. எண். | வருடம் | சுய உதவிக் குழுக்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | 2014 – 15 | 11,328 |
| 2. | 2015 – 16 | 9,482 |
| 3. | 2016 – 17 *வாழ்ந்துகாட்டுவோம் திட்டம் உட்பட | 42,724 |
| 4. | 2017 – 18 | 9,338 |
| 5. | 2018 – 19 | 8,774 |
| 6. | 2019 – 20 | 13,510 |
| 7. | 2020 – 21 | 24,456 |
| 8. | 2021 – 22 | 16,519 |
| | **மொத்தம்** | **1,36,131** |

* வாழ்ந்துகாட்டுவோம் திட்டம் 70 வட்டாரங்களில் 2005–11 வரை செயல்படுத்தப்பட்டது. மேலும் 2011–17 வரை 50 வட்டாரங்களுக்கு விரிவுபடுத்தப்பட்டது. இத்திட்டம் 2017–ல் முடிவுற்றவுடன், இக்குழுக்கள் அனைத்தும் தமிழ்நாடு ஊரக வாழ்வாதார இயக்கத்துடன் இணைக்கப்பட்டன.

தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வதார இயக்கம் 2016 முதல் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தால் செயல்படுத்தப்படுகிறது. தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார

திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட 95,842 சுய உதவிக் குழுக்கள், சுவர்ண ஜெயந்தி சஹரி ரோஜ்கர் யோஜனா (SJSRY) திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட 4776 குழுக்கள் உட்பட தற்போது 1,00,618 நகர்ப்புர சுய உதவிக்குழுக்கள் செயல்படுகின்றன.

தமிழ்நாட்டில் மொத்தம் 3.95 லட்சம் சுய உதவிக் குழுக்கள் கிராமப்புற மற்றும் நகர்ப்புரங்களில் செயல்பட்டு வருகின்றன. இத்துடன் இதர அரசுத் துறைகள் மற்றும் தொண்டு நிறுவனங்கள் மூலம் அமைக்கப்பட்ட மகளிர் சுய உதவி குழுக்களும் தற்போது செயல்பட்டு வருகின்றன.

**தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் செயல்பாடுகள்**

தமிழ்நாடு ஊரக வாழ்வாதார இயக்கத்தின் முக்கிய நோக்கம் வறிய நிலையில் உள்ள அனைத்து குடும்பங்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்தி, நிதி சேவைகளை வழங்கி அவர்களை வாழ்க்கையில் உயர்ந்த நிலைக்கு கொண்டுவர வேண்டுமென்பதே ஆகும்.

| | | |
|---|---|---|
| அ. சமூக ஒருங்கிணைப்பு மற்றும் நிறுவன கட்டமைப்பு | ஆ. திறன் மேம்பாடு மற்றும் பயிற்சி | இ. நிதி உள்ளாக்கம் |
| ஈ. வாழ்வாதார மேம்பாடு மற்றும் சந்தைப்படுத்தல் | உ. திறன் பயிற்சி | ஊ. கூட்டாண்மை மற்றும் ஒருங்கிணைப்பு |

### 6.3.1 சமூக ஒருங்கிணைப்பு மற்றும் நிறுவன கட்டமைப்பு (SM & IB)

சமூக ஒருங்கிணைப்பு என்பது 18 முதல் 60 வயது வரை உள்ள மகளிரை கொண்டு 12 முதல் 20 உறுப்பினர்களை உள்ளடக்கிய சுய உதவிக் குழுக்கள் உருவாக்குவதை உறுதி செய்கிறது. இக்குழுக்கள் அடித்தட்டு மக்களின் நிறுவனமாக உருவாக்கப்பட்டு நிதிக் கட்டுப்பாடுகளை வரையறுத்து, ஜனநாயக முறையில் முடிவுகளை எடுக்க உதவுகிறது. மேலும் சுய உதவிக் குழுக்களிடையே முறையான கூட்டம் நடத்துதல், சேமித்தல், உள்கடன் வழங்குதல், கடன் திரும்ப செலுத்துதல் மற்றும் கணக்கு பதிவேடுகளை பராமரித்தல் ஆகிய ஐந்து கொள்கைகளை முறையாக கடைபிடிக்கின்றன.

**புதிய சுய உதவிக் குழுக்கள் உருவாக்குதல்**

2021–22 ஆம் ஆண்டில் 16,519 புதிய சுய உதவிக் குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. 2022–23 ஆம் நிதியாண்டில் விடுபட்ட மிகவும் ஏழை, ஏழை விளிம்பு நிலை மற்றும் நலிவுற்ற மக்களை கொண்டு விடுபடாமல் அனைவரையும் இணைக்க வேண்டும் என்ற நோக்கோடு புதிய சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்படும்.

**சுய உதவிக் குழுக்களுக்கான நிதியுதவி**

**அ. சுழல்நிதி (RF)**

தரமதிப்பீடு செய்யப்பட்ட சுய உதவிக் குழுக்களுக்கு, குழு ஒன்றிக்கு ரூ.15,000 சுழல்நிதி வழங்கப்படுகிறது. இந்நிதி சேமிப்போடு தொகுப்பு நிதியை அதிகப்படுத்தி உள்கடன் வழங்குவதற்கு பயன்படுகிறது.

2021–22 ஆம் ஆண்டில் 21,598 குழுக்களுக்கு ரூ.32.39 கோடி சுழல் நிதி வழங்கப்பட்டுள்ளது.

**ஆ. சமுதாய முதலீட்டு நிதி (CIF)**

சமுதாய முதலீட்டு நிதியாக குழு ஒன்றிற்கு அதிகபட்சமாக ரூ.1.50 லட்சம் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு மூலம் பொருளாதார நடவடிக்கை மேற்கொள்ள வழங்கப்படுகிறது.

2021-22 ஆம் ஆண்டில் சமுதாய முதலீட்டு நிதியாக 37,500 குழுக்களுக்கு ரூ.255.25 கோடி வழங்கப்பட்டுள்ளது.

**இ. நலிவு நிலைக்குறைப்பு நிதி (VRF)**

மக்கள் நிலை ஆய்வின் மூலம் கண்டறியப்பட்ட மாற்றுத்திறனாளி மற்றும் நலிவுற்றோரின் நலிவு நிலையினை குறைப்பதற்கு ரூ.10,000 முதல் ரூ.25,000 வரை நுகர்விற்கோ அல்லது உற்பத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகவோ கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களின் மூலம் வழங்கப்படுகிறது.

2021-22 ஆம் ஆண்டில் ரூ.14.59 கோடி 9,830 தனி நபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

**சமுதாயம் சார்ந்த அமைப்புகள்**

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார திட்டச் செயல்பாடுகள் சமுதாய அமைப்புகளான சுய உதவிக்குழு, ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு, கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் மற்றும் வட்டார அளவிலான கூட்டமைப்புகள் ஆகியவை திட்ட நோக்கத்தை அடைவதற்கு வலுவான தூண்களாக அமைகின்றன.

**அ) ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு**

கிராம ஊராட்சியிலுள்ள அனைத்து சுய உதவிக் குழுக்களும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பில்

உறுப்பினராக்குவதுடன், நிதி உள்ளாக்கம், தகவல் தொடர்பு, தணிக்கை, குழு தரமதிப்பீடு மற்றும் கடன் மதிப்பீடு, குறைந்த வட்டியில் வங்கி கடன் பெற வழிவகை செய்வதுடன் அரசின் திட்டங்களை பெற வழிவகை செய்கிறது.

**ஆ) கிராம வறுமை ஒழிப்புச் சங்கம்**

கிராம வறுமை ஒழிப்பு சங்கமானது 11 முதல் 19 இலக்கு மக்களை உள்ளடக்கிய தன்னிறைவு மற்றும் சுயசார்பு நிறுவனமாக செயல்படுகிறது. 474 பழங்குடியினர் சங்கங்களை உள்ளடக்கிய 12,734 கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் செயல்படுகின்றன.

**இ) வட்டார அளவிலான கூட்டமைப்பு**

வட்டார அளவிலான கூட்டமைப்புகள் பதிவு செய்யப்பட்ட அமைப்பாக 388 வட்டாரங்களிலும் செயல்படுகிறது. ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் அனைத்தும் வட்டார அளவிலான கூட்டமைப்பின் உறுப்பினராவர். இக்கூட்டமைப்பானது ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் செயல்பாடுகள் அனைத்தையும் செயல்படுத்துவதோடு திட்டம் குறித்த பல்வேறு திறன் மேம்பாட்டு பயிற்சிகளை சமுதாய வளப் பயிற்றுநர் மூலம் அளிக்கும் பயிற்சி நிறுவனமாக வட்டார அளவில் செயல்படும்.

**ஈ) சமூகத் தணிக்கை குழு**

கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் செயல்பாடுகளை சமூக தணிக்கைக் குழு கண்காணித்து கிராம சபைக்கு அறிக்கை சமர்ப்பிக்கும்.

**திறன் மேம்பாடு**

சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கான பயிற்சி, ஊக்குநர் மற்றும் பிரதிநிதி பயிற்சி, கிராம வறுமை ஒழிப்புச் சங்க புத்தக பராமரிப்பாளர்களுக்கான பயிற்சி, ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் நிர்வாகிகளுக்கான பயிற்சி, வட்டார அளவிலான கூட்டமைப்பின் புத்தக பராமரிப்பாளர்களுக்கான பயிற்சி முதலிய திறன் மேம்பாட்டுப் பயிற்சி மூலம் அவர்களது அறிவு மற்றும் திறமைகளை வளர்த்து திறம்பட பணியாற்றிட உதவுகிறது. இலக்கு மக்களிடையே சிறந்த மேலாண்மை மற்றும் முடிவெடுக்கும் தன்மை, உருவாக்க பயிற்சி வழங்கப்படுகிறது. இப்பயிற்சியின் மூலம், இலக்கு மக்களிலிருந்து சமூக மூலதனம் உருவாக்கப்பட்டு, கடைநிலை வரை சேவைகள் சென்றடைய வழிவகை உருவாக்கப்பட்டுள்ளது.

2021–22 ஆம் ஆண்டு 2,42,571 மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு ரூ.6.22 கோடி செலவில் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

**சமுதாய வள பயிற்றுநர்கள்**

சமுதாய வள பயிற்றுநர்கள், சுய உதவிக் குழுக்களிலிருந்து உருவாக்கப்பட்டு கீழ்கண்ட இனங்களில் சமுதாய வல்லுநர்களாகப் பணியாற்றி வருகின்றனர்.

i. சமுதாய சுய உதவிக் குழு பயிற்றுநர் (CST)
சமூக ஒருங்கிணைப்பு மற்றும் திறன் பயிற்சி சுய உதவிக் குழு உருவாக்குதல் மற்றும் கண்காணித்தல்.

ii. சமுதாய வங்கி ஒருங்கிணைப்பாளர் (CBC)
சுய உதவிக் குழுக்கள் கடன் பெற வங்கிகளுடன் இணைந்து செயல்படுதல்.

iii. சமுதாய வள பயிற்றுநர்– பண்ணை (CRP–Farm)
மகளிர் சுய உதவிக் குழு பண்ணைச் சார்ந்த தொழில் அமைக்க உதவுதல்.

iv. சமுதாய வள பயிற்றுநர் – தொழில் வளர்ச்சி (CRP–EP)
மகளிர் சுய உதவிக் குழுக்களை தொழில் நிறுவனம் துவக்க உதவுதல்.

v. சமுதாய வல்லுநர் – வேலை வாய்ப்பு (CP – Jobs)
தொழில் பயிற்சிக்கு கிராமப்புற இளைஞர்களை கண்டறிதல், திரட்டுதல்

vi. சமுதாய வள பயிற்றுநர் – கூட்டாண்மை மற்றும் ஒருங்கிணைப்பு (CRP–P&C)

சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு அரசு திட்டங்கள் சென்றடைய வழிவகை செய்தல்.

**சிறப்பாகச் செயல்படும் மகளிர் சுய உதவி குழுக்கள் மற்றும் கூட்டமைப்புகளுக்கு விருதுகள் வழங்குதல்**

மணிமேகலை விருதுகள் வழங்கும் திட்டம் கடந்த 2006 – 07 ஆம் ஆண்டு முதல் சிறப்பாக செயல்படும் மகளிர் சுய உதவிக் குழுக்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு வழங்கப்பட்டு வந்தது. இவ்விருதுகள் சுய உதவிக் குழுக்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளை மேன்மேலும் சிறப்பாகச் செயல்பட ஊக்குவிக்கும் விதமாக இருந்தது. இத்திட்டம் சிறிது காலம் கைவிடப்பட்டது. 2021–22 ஆம் ஆண்டு முதல் மீண்டும் தொடங்கப்பட்டு சிறப்பாக செயல்படும் சமுதாயம் சார்ந்த அமைப்புகளான மகளிர் சுய உதவிக்குழுக்கள், கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், வட்டார அளவிலான கூட்டமைப்புகள், பகுதி அளவிலான கூட்டமைப்புகள் மற்றும் நகர்ப்புர அளவிலான கூட்டமைப்புகள் சமுதாயத்தில் மகளிரின் பொருளாதார மேம்பாடு விளிம்பு நிலை மற்றும் நலிவுற்ற பிரிவினருக்கான சமூக பொருளாதார அரசியல் மேம்பாட்டில் இவர்களின் பங்களிப்பு மற்றும் பணிகளை

அங்கீகரித்து அவர்களை பாராட்டும் விதமாக விருதுகள் வழங்கப்படும்.

சிறப்பாக செயல்படும் சமுதாயம் சார்ந்த அமைப்புகளுக்கு, வட்டார, மாவட்ட மற்றும் மாநில அளவில், ரொக்க பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

### 6.3.2. நிதி உள்ளாக்கம் மற்றும் நுண்கடன்

தமிழ்நாடு மாநில மகளிர் மேம்பாட்டு நிறுவனமானது (TNCDW) ஏழை மக்களின் நிதி உள்ளாக்கத்தை ஊக்குவிக்கும் பொருட்டு கீழ்க்கண்ட முக்கிய நிதி சேவைகளை வழங்கி வருகிறது.

- வங்கி சேமிப்பு கணக்கு துவங்குதல்.
- உற்பத்தி மற்றும் நுகர்வுக்கான வங்கி கடன் பெற வழிவகுத்தல்.
- காப்பீட்டு சேவைகளை வழங்குதல்.
- ஓய்வூதிய பலன்களை கிடைக்கச் செய்தல்.

**சுய உதவிக் குழுக்களுக்கான வங்கிக் கடன் இணைப்பு**

கடன் பெறும் உரிமையானது, உகந்த நேரத்தில், குறைந்த வட்டி விகிதத்தில், போதுமான அளவு கடன் எளிதில் கிடைப்பதாகும்.

ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் நிதி இடைநிலையர்களாக செயல்பட்டு, வங்கிகளில் பெருங்கடன் பெற்று, சுய உதவிக்குழுக்களின் நிதித் தேவைகளை பூர்த்தி செய்வதன் மூலமாக, அதிக

வட்டியில் கடன் வழங்கும் தனிநபர்களின் பிடிக்கு இரையாகாமல் சுய உதவிக் குழுக்கள் தடுக்கப்படுகின்றன.

சுய உதவிக் குழுக்களின் தேவைகளின் அடிப்படையில், தவணை கடன் (Term Loan) அல்லது ரொக்கக்கடன் (Cash Credit limit) அல்லது இரண்டு வகை கடன்களையும் பெற்றுக்கொள்ளலாம். தவணை கடனானது குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் செலுத்தப்பட வேண்டும். ரொக்க கடனானது, குறைந்தபட்சம் ரூ.6.00 இலட்சம் என்ற அளவில் நிர்ணயம் செய்யப்பட்டு, வருடத்திற்கு ஒருமுறை வரையறுக்கப்பட்ட அளவின்படி (Yearly Drawing Power) 3 ஆண்டுகள் வரை அனுமதிக்கப்படுகிறது. குறு தொழில்களுக்கான கடன் உத்தரவாத நிதியானது (CGFMU), முதிர்ச்சி அடைந்த சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.10.00 இலட்சத்திற்கு மேல் ரூ.20.00 இலட்சம் வரை தேவைப்படும் கடன் தேவையை பூர்த்தி செய்வதாகும். கடந்த 20 ஆண்டுகளில் 35,45,343 சுய உதவிக் குழுக்களுக்கு 96,419.72 கோடி ரூபாய் கடனாக சுய உதவிக் குழு வங்கிக் கடன் இணைப்பு மூலம் வழங்கப்பட்டுள்ளது.

2021–22ம் ஆண்டில், சுய உதவிக் குழுக்களின் கடன் இணைப்பு இலக்கீடான ரூ.20,000 கோடியில் 4,08,740 சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.21,392.52 கோடி ரூபாய் கடனுதவி வழங்கப்பட்டுள்ளது. ஒரு சுய

உதவிக் குழுவின் சராசரி கடன் அளவு ரூ.5.20 இலட்சம் ஆகும்.

**வங்கிகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்**

சுய உதவிக் குழுக்களுக்கு எளிதாக, குறைந்த வட்டி விகிதத்தில் அதிக அளவிலான கடன் கிடைப்பதை உறுதி செய்வதற்காக வங்கிகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் (MoU) மேற்கொள்ளப்படுகிறது.

நாளது தேதி வரை, ஐ.டி.பி.ஐ. வங்கி (IDBI Bank), ஐ.சி.ஐ.சி.ஐ வங்கி (ICICI Bank), பேங்க் ஆஃப் பரோடா (BOB), பாரத ஸ்டேட் வங்கி (SBI Bank), யூகோ வங்கி (UCO Bank) மற்றும் தமிழ்நாடு கிராம வங்கி (TGB) ஆகிய வங்கிகள் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன.

குறைந்த வட்டி விகிதத்தில், போதுமான அளவு கடனைக் கால தாமதமின்றி அனுமதித்தல் போன்ற அம்சங்களை இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் உள்ளடக்கியுள்ளது. பிற வங்கிகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**சுய உதவிக் குழுக்களுக்கான வட்டி மானியம்**

ஏழை எளிய மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கு குறைந்த வட்டி விகிதத்தில் வங்கி கடன் வழங்கும் பொருட்டு, ரூ.3.00 இலட்சம்

வரையிலான கடன்களுக்கு வட்டி மானியம் வழங்கப்படுகிறது. மாவட்டங்களைப் பொறுத்து, இத்திட்டம் இரு வகையாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

பிரிவு–1–ல் கடலூர், தருமபுரி, திண்டுக்கல், நாகப்பட்டினம், தஞ்சாவூர், திருவண்ணாமலை, திருச்சிராப்பள்ளி, வேலூர் மற்றும் விழுப்புரம் ஆகிய 9 மாவட்டங்கள் அடங்கும். இம்மாவட்டங்களில் உள்ள தகுதிவாய்ந்த சுய உதவிக் குழுக்களுக்கு, ரூ.3.00 இலட்சம் வரையிலான கடன்களுக்கு 7 சதவிகிதம் வட்டி விகிதத்தில் வங்கிகள் கடன் வழங்குகின்றன. மேலும், கடனை முறையாக திரும்ப செலுத்துவதை, ஊக்குவிப்பதற்காக கூடுதலாக 3 சதவிகிதம் வட்டி மானியம் வழங்குவதன் மூலம், சுய உதவிக் குழுக்களின் வங்கி கடனின் வட்டி விகிதம் வெறும் 4 சதவிகிதம் ஆக குறைக்கப்படுகிறது.

மீதமுள்ள மாவட்டங்களில் (பிரிவு–2) உள்ள சுய உதவிக் குழுக்களுக்கு, வங்கிகள் சுய உதவிக் குழு கடன்களுக்காக நிர்ணயம் செய்திருக்கும் வட்டி விகிதத்தில் கடன் வழங்குகின்றன. தவணை தவறாமல் கடன்களை திரும்ப செலுத்தும் சுய உதவிக் குழுக்களுக்கு 7 சதவிகிதத்திற்கு மேல் விதிக்கப்பட்ட வட்டி விகிதத்தில் அதிகபட்சமாக 5.5 சதவிகிதம் வரை வட்டிமானியம் நேரடியாக அவர்களின் வங்கி கணக்கில் செலுத்தப்பட்டு வருகின்றது.

2021–22ம் ஆண்டில், 1,62,069 சுய உதவிக் குழுக்களுக்கு 27.12 கோடி ரூபாய் வட்டி மானியமாக விடுவிக்கப்பட்டுள்ளது.

### 6.3.3 காப்பீடு மற்றும் ஓய்வூதிய திட்டங்கள்

தகுதியான சுய உதவிக் குழு உறுப்பினர்கள் அனைவரும் ஆயுள் காப்பீடு, விபத்து காப்பீடு மற்றும் மருத்துவக் காப்பீடு திட்டங்களில் 100 சதவிகிதம் இணைக்கப்பட வேண்டும் என்பதே அரசின் முக்கிய நோக்கமாகும்.

2021–22–ம் ஆண்டில், 17,11,837 சுய உதவிக் குழு உறுப்பினர்கள் ஆயுள் காப்பீட்டிலும், 21,01,722 உறுப்பினர்கள் விபத்து காப்பீட்டிலும், 22,09,249 உறுப்பினர்கள் மருத்துவ காப்பீட்டிலும் பதிவு செய்துள்ளனர்.

### ஓய்வூதிய திட்டம்

அமைப்பு சாரா துறையில் ஈடுபட்டுள்ள 18 முதல் 40 வயது வரையிலான அனைத்து உறுப்பினர்களும் 60 வயது எய்திய பின்னர் ஓய்வூதியம் பெறும் பொருட்டு, அடல் ஓய்வூதிய திட்டத்தில் (APY) பதிவு செய்யலாம்.

பல்வேறு காப்பீட்டுத் திட்டங்கள் மற்றும் ஓய்வூதிய திட்டங்களில் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் மற்றும் அவர்களின் குடும்ப உறுப்பினர்களை பதிவு செய்வதற்கு

வட்டாரங்களில் உள்ள சமுதாய வள பயிற்றுனர்கள் (CRP) உதவுகின்றனர்.

2021-22-ம் ஆண்டில், 1,53,585 சுய உதவிக் குழு உறுப்பினர்கள் அடல் ஓய்வூதிய திட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

### 6.4. வாழ்வாதார மேம்பாடு

ஊரக பகுதிகளில் உள்ள ஏழை மக்களின் குடும்பங்களுக்கு கடினமான காலக்கட்டங்களில் குறைந்தபட்ச வருமானத்தை உறுதி செய்ய ஒவ்வொரு குடும்பத்திற்கும் 2 அல்லது 3 வாழ்வாதார நடவடிக்கைகள் இருப்பதை தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளது. மேலும், பல்வேறு வாழ்வாதார நடவடிக்கைகள் மூலம் ஒவ்வொரு கிராமத்தில் உள்ள குடும்பத்தின் ஆண்டு வருமானம் ரூ.1.00 இலட்சத்துக்கு குறையாமல் இருப்பதை உறுதி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

வாழ்வாதார மேம்பாட்டு நடவடிக்கைகள் இரு பெரிய பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளன.

i. பண்ணை சார் தொழில்கள்
ii. பண்ணை சாரா தொழில்கள்

### 6.4.1 பண்ணை சார் தொழில்கள்

பண்ணை சார் வாழ்வாதாரத் தொழில்களாவது பயிர் உற்பத்தி, முதல்நிலை மதிப்பு கூட்டுதல் மற்றும் மதிப்பு சங்கிலி மேலாண்மை ஆகியவற்றை வலியுறுத்துகிறது. பண்ணை நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள அதிகப்படியான கிராமப்புற மகளிர் தொழிலாளர்களாக இருந்து பயிர் சாகுபடியாளராகவும், விவசாய தொழில் முனைவோராகவும் மாறி வருகின்றனர். 2017-ம் ஆம் ஆண்டிலிருந்து விவசாய தொழில் புரியும் மகளிரின் விபரங்கள் சேகரிக்க தொடங்கப்பட்டு, தற்போது வரை 11.52 இலட்சம் தரவுகள் உள்ளன.

**உற்பத்தியாளர் குழுக்கள்**

ஒரே வகையான பயிர் சாகுபடியில் ஈடுபட்டு, ஒரே மாதிரியான வாய்ப்புகள் மற்றும் இடர்பாடுகளை சந்திக்கும் மகளிர் விவசாயிகள் உற்பத்தியாளர் குழுக்களாக ஒருங்கிணைக்கப்படுகின்றனர். இந்த உற்பத்தியாளர் குழுக்களுக்கு அவர்களின் உற்பத்தித்திறன் மற்றும் இலாபத்தை மேம்படுத்துவதற்காக ரூ.2.00 லட்சம் செயல்பாட்டு மூலதனம் மற்றும் உள்கட்டமைப்பு ஆதரவுக்காக சுழல் நிதியாக வழங்கப்படுகிறது. நிதி ஆதரவு தவிர, வணிகத் திட்டம் தயாரித்தல், தொழில் மேம்பாட்டிற்கான பொருட்களை அடையாளம்

காண்பது மற்றும் புதிய தொழில்நுட்ப நடவடிக்கைகள் குறித்த பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

2021-22 ஆம் ஆண்டில், 4,768 உற்பத்தியாளர் குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

**ஒருங்கிணைந்த பண்ணை தொகுப்புகள்**

பண்ணை மற்றும் பண்ணை சார்ந்த நடவடிக்கைகளை ஒத்திசைவுடன் சீரமைக்கும் முறையின் பலனை பெறுவதற்காக, விவசாயம் சார்ந்த பண்ணை நடவடிக்கைகள் கால்நடை வளர்ப்புடன் ஒருங்கிணைந்து மேற்கொள்ளப்படுகின்றன. இதில், உயிர் உரம் பயன்படுத்துவதன் மூலம் உற்பத்தி செலவுகள் குறைக்கப்பட்டு பல்வேறு வருமானம் ஈட்டும் வாய்ப்புகளும் ஏற்படுத்தப்படுகின்றன. 2 முதல் 3 கிராம ஊராட்சிகளிலிருந்து, சுமார் 250 மகளிர் விவசாயிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு தொகுப்பாக ஒருங்கிணைக்கப்பட்டு, ஒரு தொகுப்புக்கு ரூ.20.00 இலட்சம் வீதம் வாழ்வாதார சேவை மையம் அமைக்கவும், கால்நடைகள் வாங்கவும், ஊடு பயிர்கள் பயிரிடவும், இயற்கை இடு பொருட்கள் தயாரிக்கும் அலகுகள் அமைக்கவும், இயந்திர வாடகை மையம் ஏற்படுத்தவும், பயிற்சிகள் வழங்கவும், சந்தைப்படுத்துதல் மற்றும் வணிக குறியீடு இடுதல் ஆகியவற்றிற்கு வழங்கப்படுகிறது.

2021–22 ஆம் ஆண்டில், 185 ஒருங்கிணைந்த பண்ணைத் தொகுப்புகள் கண்டறியப்பட்டு அவற்றிற்கு ஒருங்கிணைந்த பண்ணையத்தின் பல்வேறு நடவடிக்கைகள் பற்றிய பயிற்சி வழங்கப்பட்டு வருகின்றன

**இயற்கை வேளாண் தொகுப்புகள்**

இயற்கை விவசாயம் என்பது சுற்றுச்சூழலைப் பாதுகாத்து, அதிக மதிப்புள்ள இயற்கை விளை பொருட்களை இரசாயனமற்ற பாரம்பரிய விவசாய முறையில் உற்பத்தி செய்யும் வேளாண்மை முறையாகும். இயற்கை விவசாயத்தில் ஆர்வமுள்ள அடுத்தடுத்த கிராமங்களைச் சேர்ந்த 50 மகளிர் விவசாயிகள் கொண்ட குழுவுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி, பதிவு செய்தல், சான்றிதழ்கள் பெறுதல், இயற்கை இடு பொருள் அங்காடி மற்றும் ஒருங்கிணைந்த பண்ணை முறை அமைப்பதற்காக ரூ.6.00 இலட்சம் வழங்கப்படுகிறது.

2021–22 ஆம் ஆண்டில் 50 இயற்கை வேளாண் தொகுப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.

**6.4.2 பண்ணை சாரா தொழில்கள்**

கிராமப்புறங்களில் உள்ள ஏழைகளுக்கு பண்ணை சாரா தொழில் முக்கியமான

வாழ்வாதாரமாகும். உற்பத்தி அலகுகள், சேவை மற்றும் வர்த்தக துறையில் மகளிர் தலைமையிலான நுண் மற்றும் குறு தொழில் நிறுவனங்களுக்கு ஆதரவு வழங்கப்படுகிறது.

**அ. வட்டார வணிக வள மையம் (BBRC)**

வட்டார அளவிலான குழுக் கூட்டமைப்பு உறுப்பினர்களால் வட்டார வணிக வள மையங்கள் ஏற்படுத்தப்பட்டு வழிநடத்தப்படுகிறது, இந்த மையம் வங்கி, நிதி, சட்டம், போன்ற இதர பல்வேறு செயல்பாட்டு வல்லுநர்களை கொண்டு கட்டமைக்கப்பட்டு, புதிய மற்றும் செயல்பாட்டில் உள்ள தொழில் நிறுவனங்களுக்கு வணிகத் திட்டம் தயாரித்தல், சந்தைப்படுத்துதல் சட்டபூர்வ பதிவுகள், உரிமம் மற்றும் தர மேம்பாட்டிற்கு உதவி புரியும்.

2021–22–ம் ஆண்டில் 36 மாவட்டங்களில் உள்ள 55 வட்டாரங்களில் 8,250 மகளிரால் நடத்தப்படும் தொழில் நிறுவனங்களுக்கு உதவி புரிந்துள்ளது.

**ஆ. தொழில் தொகுப்புகள் உருவாக்குதல்**

தொழில் தொகுப்பு உருவாக்கத்தின் நோக்கமானது, உற்பத்திச் செலவுகளைக்

குறைப்பதும், ஒரே இடத்தில் உள்ள வளங்களைத் திரட்டுவதன் மூலம் இலாப வரம்பை அதிகரித்து பொருளாதாரத்தை மேம்படுத்துவதே ஆகும். அமைப்பு சாரா தொழில் நிறுவனங்களுக்கு கிராமப்புரப் பொருளாதாரத்தில் அணுகுமுறை வளர்ச்சி, சந்தை அணுகுமுறை மற்றும் பொதுவான வசதி மையங்களை சிறப்பாகப் பயன்படுத்துவதற்கு வழிவகுக்கிறது. ஒவ்வொரு தொழில் தொகுப்பிற்கும் ரூ.2.50 லட்சம் ஆரம்ப செலவிற்காகவும், செயல்பாட்டு மூலதனத்திற்காகவும் வழங்கப்படுகிறது.

2021-22 ஆம் ஆண்டில் 148 தொழில் தொகுப்புகள் அடையாளம் காணப்பட்டு, சாத்தியக் கூறு ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## 6.5 மகளிர் சுய உதவிக்குழுத் தயாரிப்புகளை சந்தைப்படுத்துதல்

கிராமப்புரப் பகுதிகளில் மகளிரால் உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்கு அதிக தேவையும், சமமற்ற சந்தை வாய்ப்புகளும் உள்ளன. சுய உதவிக் குழு பொருட்களின் சந்தைப்படுத்தலை மேம்படுத்த சந்தை நுண்ணறிவு, பொருட்களின் ஆய்வு, மதிப்புக் கூட்டல் போன்ற பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. சுய உதவிக் குழு

பொருட்களை சந்தைப்படுத்த கண்காட்சிகள் நடத்துதல், மதி அங்காடிகள் மற்றும் விற்பனை சங்க வளாகங்கள் அமைத்தல் ஆகியவற்றை தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் மேற்கொண்டு வருகிறது.

2021–22ஆம் ஆண்டில் 8 மாவட்டங்களிலுள்ள மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனை சங்க வளாகங்கள் ரூ.66.00 இலட்சம் மதிப்பீட்டில் புதுப்பிக்கப்பட்டுள்ளன. தற்போது 134 மதி அங்காடிகள் மூலம் சுய உதவிக்குழு பொருட்கள் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. மதி அங்காடிகளின் விற்பனை பரிவர்த்தனைகளை கணினிமயமாக்க HDFC வங்கியுடன் பங்குதாராக இணைந்து, இணையதளம் மற்றும் கைப்பேசி செயலி ஆகியவை வடிவமைக்கப்பட்டு வருகின்றன.

2021–22 ஆம் ஆண்டில், மாநில அளவிலான கண்காட்சி அக்டோபர் மாதம் நடைபெற்றது. இதில் 224 சுய உதவிக்குழு உறுப்பினர்கள் பங்கேற்று ரூ.43.73 இலட்சம் மதிப்பிலான பொருட்களை விற்பனை செய்துள்ளனர். 6 தேசிய மற்றும் மண்டல அளவிலான கண்காட்சிகளில் 26 சுய உதவிக் குழுக்கள் பங்கேற்று ரூ.17.35 இலட்சத்திற்கு விற்பனை செய்துள்ளனர்.

சுய உதவிக்குழு தயாரிப்புகளை மின்னணு வர்த்தக இணையதளங்களாகிய அமெசான், பிளிப்கார்ட் மற்றும் இந்திய அரசாங்கத்தின் ஜெம் (GeM) ஆகியவற்றில் சந்தைப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### 6.6. இளைஞர்களுக்கான திறன் பயிற்சி

இளைஞர்களுக்கான திறன் வளர் பயிற்சி நிலைத்த வாழ்வாதார மேம்பாட்டுக்கான முக்கிய காரணிகளுள் ஒன்றாகும். இத்தகைய திறன் பயிற்சித் திட்டமானது இளைஞர்களின் ஆர்வம், திறமை மற்றும் தகுதி அடிப்படையிலும், சந்தையில் வேலைவாய்ப்புக்கான தேவை மற்றும் வாய்ப்புகளைக் கருத்தில் கொண்டும், திட்டமிட்டு செயல்படுத்தப்படுகிறது.

### 6.6.1. தனியார் நிறுவனங்களில் வேலைவாய்ப்புக்கான திறன்பயிற்சி

தீன்தயாள் உபாத்யாய கிராமப்புரத் திறன் மேம்பாட்டுத் திட்டமானது, (DDU–GKY) ஒன்றிய அரசு மற்றும் தமிழ்நாடு அரசு இடையே 60:40 என்ற நிதிப் பகிர்வு முறையைக் கொண்ட வேலைவாய்ப்புடன் கூடிய திறன் பயிற்சித் திட்டமாகும். இத்திட்டத்தின் கீழ் 18 முதல் 35 வயதிற்கு உட்பட்ட இளைஞர்களுக்குப் பல்வேறு துறைகளின் கீழ் பதிவுப் பெற்ற நிறுவனங்கள்

மூலம் திறன் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. பயிற்சி பெற்ற இளைஞர்களுக்கு குறைந்தபட்சம் 70 சதவீதம் கட்டாய பணியமர்வும் அளிக்கப்படுவது இத்திட்டத்தின் சிறப்பம்சமாகும்.

இத்திட்டம் சமூகத்தில் பின் தங்கிய பிரிவினர்களான தாழ்த்தப்பட்ட வகுப்பினர்–62%, பழங்குடியினர்–3%, சிறுபான்மையினர்–16%, மாற்றுத்திறனாளிகள்– 3% மற்றும் மகளிர் – 33% (அனைத்து பிரிவுகளிலும் சேர்த்து) போன்றவர்களும் பயன்பெறும் விதமாக கட்டாய சமூக உள்ளாக்கத்தை கொண்டுள்ளது. பயிற்சிக்குரிய பாடத்திட்டமானது தேசிய திறன் தகுதி கட்டமைப்பு (National Skill Qualification Framework – NSQF) இயைந்த முறையிலும், அவற்றோடு மென்திறன்களான ஆங்கில அறிவு, அடிப்படை கணினி அறிவு ஆகிய பாடத்திட்டங்கள் சேர்க்கப்பட்டுள்ளதால், இத்திட்டத்தின் கீழ் பயிற்சி முடிக்கும் இளைஞர்களுக்கு வேலை கிடைப்பதற்கான வாய்ப்புகள் கூடுதலாக்கப்பட்டுள்ளது.

2021–22–ம் நிதியாண்டில், 11,290 இளைஞர்களுக்குப் பல்வேறு பிரிவுகளின் கீழ் திறன் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

### 6.6.2 சுய வேலை வாய்ப்புக்கான பயிற்சிகள்

கிராமப்புர இளைஞர்களுக்குப் பயிற்சியளித்து சுய வேலைவாய்ப்பை உருவாக்கிட, ஒவ்வொரு

மாவட்டத்திலும் அந்தந்த மாவட்ட முன்னோடி வங்கி மூலம் ஊரக சுய வேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனங்கள் (Rural Self Employment Training Institutes–RSETIs) அமைக்கப்பட்டுள்ளன. பயிற்சி பெற்ற இளைஞர்களுக்குத் தொழில் முனைவை ஊக்கப்படுத்திட வங்கி கடன் இணைப்பு வசதி ஏற்படுத்தித் தர நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

தற்போது 30 ஊரக சுயவேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன. புதிதாக உருவாக்கப்பட்ட 6 மாவட்டங்களில் ஊரக சுய வேலைவாய்ப்புப் பயிற்சி நிறுவனங்கள் துவங்க உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2021–22–ம் நிதியாண்டில், 15,736 இளைஞர்கள் பயிற்சி பெற்று அவர்களில் 13,069 இளைஞர்கள் சுய தொழில் துவங்கியுள்ளனர்.

### 6.6.3 வேலைவாய்ப்பு முகாம்கள்

படித்த மற்றும் திறன் பயிற்சி பெற்ற இளைஞர்களுக்குத் தனியார் நிறுவனங்களில் வேலைவாய்ப்பு பெற்றுத்தர வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்படுகின்றன. முகாமில் பங்கேற்கும் நிறுவனங்கள், அவற்றின் காலிப்பணியிடங்கள், அப்பணிகளுக்குத் தேவையான தகுதிகள், வேலைவாய்ப்பு முகாம் நடைபெறும் இடம் மற்றும் தேதி போன்ற தகவல்கள் பல்வேறு தகவல் தொடர்பு முறைகள்

மூலம் இளைஞர்களுக்கு முன்கூட்டியே தெரிவிக்கப்படுகிறது. மேலும், வேலை தேடும் இளைஞர்களின் கல்வித் தகுதி மற்றும் விருப்பம் அடிப்படையில் தகுதியான வேலையை தேர்ந்தெடுக்க உதவி செய்யப்படுகிறது.

2021–22 ஆம் நிதியாண்டில், மாநிலம் முழுவதும் 50 மாவட்ட அளவிலான வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்பட்டு, 32,517 இளைஞர்கள் வேலைவாய்ப்பு கிடைக்கப் பெற்று பயனடைந்துள்ளனர்.

### 6.7 சமூக செயல்பாடுகள்

பொருளாதார வளர்ச்சி மற்றும் கிராமப்புர மேம்பாட்டு பணிகள் மட்டுமல்லாது, சமூகத்தின் பலதரப்பட்ட பிரச்சனைகளைக் களைந்திடும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் தற்பொழுது மருத்துவத்துறை, சமூகநலத்துறை மற்றும் மகளிர் உரிமைத்துறை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை ஆகிய துறைகளுடன் இணைந்து சமூக நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. அரசுத் துறைகள் மற்றும் பிற முகமைகளுடனான கூட்டாண்மை மற்றும் ஒருங்கிணைப்பு செயல்பாடுகள் மூலம் தனிநபர் மற்றும் சமுதாய அமைப்புகளுக்கு அதிக பலன்கள் கிடைக்கப் பெறுவது மட்டுமின்றி பொருள், கால விரயம் தவிர்க்கப்படுகிறது.

### 6.7.1 மக்களைத் தேடி மருத்துவம்

மக்களைத் தேடி மருத்துவ திட்டமானது தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்துடன் குடும்ப நலன் மற்றும் சுகாதாரத் துறை இணைந்து செயல்படுத்தும் சிறப்பு முயற்சியாகும். இத்திட்டத்தின் மூலம் மகளிர் சுகாதார தன்னார்வலர்கள் மக்களின் வீடுதோறும் சென்று தொற்றா நோய்களுக்கான மருத்துவ சேவைகளை வழங்கி வருகிறார்கள். இவர்கள் நீரிழிவு, இரத்த அழுத்தம், கர்ப்பபை வாய்புற்றுநோய், மார்பகபுற்றுநோய் மற்றும் காச நோயாளிகளைப் கண்டறிந்து அதற்குரிய பரிசோதனை செய்து ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு பரிந்துரை செய்கின்றனர். நோயாளிகளைப் பற்றிய அடிப்படை விவரங்களை TNPHR செயலியில் பதிவு செய்தல், மருந்துகளை சிகிக்சைபெறும் நோயாளியின் இல்லம் தேடிச்சென்று வழங்கி வருகின்றார்கள். இத்திட்டத்தில் 8,713 மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்கள் மருத்துவ தன்னார்வலர்களாக துணை சுகாதார மையங்களுடன் இணைந்து செயலாற்றி வருகின்றனர்.

## 6.8 தேசிய ஊரக பொருளாதாரப் புத்தாக்கத் திட்டம் (NRETP)

2019-2020 ஆம் ஆண்டு முதல் தேசிய ஊரக பொருளாதாரப் புத்தாக்கத் திட்டமானது திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், ஈரோடு, சேலம் மற்றும் கடலூர் ஆகிய 5

மாவட்டங்களின் 20 வட்டாரங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன் நோக்கமானது உயர்தர செயல்பாடுகளான வட்டார அளவிலான கூட்டமைப்புகளை வலுப்படுத்துதல், மதிப்பு கூட்டு சங்கிலி, பண்ணைசார் மற்றும் பண்ணை சாரா துறைகளில் தனிநபர் மற்றும் கூட்டு நிறுவனங்களை நிறுவுதல், திறன் மேம்பாடு மற்றும் மாற்று நிதிச் சேவைகள் வழங்குதல் போன்ற உயர்நிலை நடவடிக்கைகளை செயல்படுத்துவதில் கவனம் செலுத்தி, சமூக முன்னேற்ற உத்திகள் கையாளப்படுகிறது. இத்திட்டம் 60:40 என்ற விகிதத்தில் ஒன்றிய அரசு மற்றும் தமிழக அரசு நிதியுதவியுடன் செயல்படுத்தப்படுகிறது.

**முக்கிய முயற்சிகள்**

i. சுய உதவிக் குழுக்களின் உயர்நிலை நிறுவனங்களை மாதிரி வட்டார அளவிலான கூட்டமைப்பாக உருவாக்குவதன் மூலம், மற்ற வட்டாரங்களுக்கு கருத்தாழ் (Immersion) நிறுவனமாக செயல்படும்.

ii. **சமுதாயம் நிர்வகிக்கும் பயிற்சி மையம் (CMTCs)**

சமுதாயம் நிர்வகிக்கும் பயிற்சி மையமானது உள்ளூர் பகுதியில் பயிற்சியின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக சமுதாயத்தால் பராமரிக்கப்பட்டு வருகிறது. 2020–21 ஆம்

ஆண்டிற்கு ஒரு சமுதாயம் நிர்வகிக்கும் பயிற்சி மையத்திற்கு ரூ.8 லட்சம் வீதம் ரூ.40 லட்சத்தில் 5 பயிற்சி மையங்கள் உருவாக்கப்பட்டுள்ளது.

iii. **சுயஉதவிக்குழுக்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு** உடனடி கட்டணம் செலுத்தும் சேவை (IMPS), ஒருங்கிணைந்த கட்டண சேவை தளம் (UPI), பணபரிவர்த்தனை உபகரணம் (POS Machine) போன்ற மின்னனு நிதி சேவைகள் பயன்படுத்துவது தொடர்பாக பயிற்சியளிக்கப்பட்டுள்ளது. 53 சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு இந்திய வங்கி மற்றும் நிதியியல் நிறுவனத்தில் (IIBF) மின்னனு பரிவர்த்தனைகள் தொடர்பாக பயிற்சி அளிக்கப்பட்டு, சுய உதவிக் குழுவில் உள்ள மகளிருக்கு மின்னனு பரிவர்த்தனைகள் குறித்து கற்றுதரப்படுகிறது.

iv. **மகளிர் வாழ்வாதார சேவை மையம்**

தேசிய ஊரக பொருளாதாரப் புத்தாக்கத் திட்டம் செயல்படும் ஒவ்வொரு மாவட்டத்திலும், சுய உதவிக் குழு மகளிர் தொழில் நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், விரிவுப்படுத்தவும் அனைத்து வகையான வழிநடத்துதல் மற்றும் ஆதரவு சேவைகளை வழங்க மகளிர் வாழ்வாதார சேவை

மையம் அமைக்கப்பட்டுள்ளது. வணிகத் திட்டம் தயாரித்தல், வங்கி இணைப்புகளுக்கு வழிநடத்துதல், சட்டப்பூர்வமான விதிமுறைகளுக்கு உட்பட்ட சேவைகள் வழங்கப்படுகின்றன.

இத்திட்டத்தின் பல்வேறு அம்சங்களாகிய வலுவான நிறுவனக் கட்டமைப்பை உருவாக்குதல், வாழ்வாதார மேம்பாடு, சமூக செயல்பாடுகள் ஆகியவை வட்டார அளவிலான அமைப்புடன் வலுவான ஒருங்கிணைப்பு மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. காப்பீட்டு மற்றும் ஓய்வூதியத் திட்டங்களின் வாழ்வாதார மேம்பாடு, தொழில் நிறுவன மேம்பாடு, தயாரிப்புகளை சந்தைப்படுத்தல் மற்றும் சுய உதவிக்குழு குடும்பங்களின் சமூக–பொருளாதார நிலையில் முழுமையான முன்னேற்றம் ஆகியவற்றை உள்ளடக்கிய உத்திகள், பதிவு செய்தல் மற்றும் புதுப்பித்தல் ஆகியவற்றை வட்டார அளவிலான அமைப்புகள் வழிநடத்தும்.

### 6.9. வாழ்ந்து காட்டுவோம் திட்டம் (VKP)

வாழ்ந்து காட்டுவோம் திட்டம் உலக வங்கியின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வரும் மூன்றாம் தலைமுறை வறுமை ஒழிப்பு மற்றும் பொருளாதார

அதிகாரம் அளிக்கும் திட்டம் ஆகும். இத்திட்டம், பெண்களை மையப்படுத்திய நிறுவனங்களை உருவாக்குவதன் மூலம், ஊரகப் பகுதிகளில் வாழும் மக்கள் வாழ்க்கையில் நிலையான வருமானத்தைப் பெறவும், வாழ்க்கையை ஒளிமயமானதாக மாற்றியமைக்கவும் முடியும் என்ற நோக்கத்தின் அடிப்படையில் செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டமானது 31 மாவட்டங்களிலுள்ள (சென்னை, தஞ்சாவூர், அரியலூர், பெரம்பலூர், தர்மபுரி, கன்னியாகுமரி மற்றும் திருப்பத்தூர் நீங்கலாக) 120 ஒன்றியங்களில் 3,994 கிராம ஊராட்சிகளில் செயல்பட்டு வருகிறது.

தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டம் என்ற பெயரில் செயல்பட்டு வந்த இத்திட்டம் அரசாணை (நிலை) எண்.12, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (CGS-3) துறை, நாள்: 07.02.2022–ன் படி **"வாழ்ந்து காட்டுவோம் திட்டம்"** என பெயர் மாற்றம் செய்யப்பட்டு, ஊரகப் பகுதிகளில் சமூகப் பொருளாதார மாற்றத்தையும், தொழில் மேம்பாடு மற்றும் மேல்நோக்கிய வளர்ச்சியையும் தொலைநோக்காகக் கொண்டு செயல்படுத்தப் பட்டு வருகிறது.

உலக வங்கி மற்றும் தமிழ்நாடு அரசு இந்த திட்டத்திற்கு 70:30 என்ற விகிதத்தில் ரூ.910.37 கோடி மதிப்பீட்டில் நிதியளிக்கிறது.

**முக்கிய செயல் திட்டங்கள்**

1. நிதி உதவி வழங்குதல்
2. திறன் மேம்பாடு மற்றும் திறன் வளர்ப்புப் பயிற்சி
3. நிறுவனங்களை உருவாக்குதல்

**6.9.1 நிதி உதவி வழங்குதல்**

**அ. துவக்க நிதி**

குழுத் தொழில் நடவடிக்கைகள் மூலம் உற்பத்தியை அதிகப்படுத்துதல், உள்ளீடு செலவை குறைத்தல், தரத்தை மேம்படுத்துதல் மற்றும் உறுப்பினர்களின் வருமானம் மற்றும் இலாபத்தை அதிகப்படுத்துவதற்காக வழங்கப்படுகிறது.

(i) **உற்பத்தியாளர் குழுவானது** – 30 முதல் 150 நபர் வரையிலான உற்பத்தியாளர்களை ஒன்று திரட்டி, உற்பத்தியினை மேம்படுத்துவதால் அதிக வருமானத்தை ஈட்ட வழிவகை செய்கிறது. உற்பத்தியாளர் குழுக்கள் உரிய தகுதியை அடைந்த பின்னர் துவக்க நிதியாக ரூ. 75,000 வழங்கப்படும்.

2021–22ம் ஆண்டில், 2477 உற்பத்தியாளர் குழுக்கள் உருவாக்கப்பட்டு, 2000 உற்பத்தியாளர் குழுக்களுக்கு ரூ.15 கோடி துவக்க நிதி வழங்கப்பட்டுள்ளது.

(ii) **தொழில் குழுவானது** 10–30 உறுப்பினர்களைக் கொண்ட குழு நிறுவனம் ஆகும். உற்பத்திச் செலவுகளைக் குறைக்கவும், தரத்தை மேம்படுத்தவும், கூட்டு உரிமை மற்றும் வணிகச் செயல்பாடுகளின் மீதான கட்டுப்பாட்டுடன், வருவாயை அதிகரித்து, லாபத்தை பகிர்ந்து கொள்ளும் தொழில் நிறுவனம் ஆகும். தொழில் குழுக்கள் உரிய தகுதியை அடைந்த பின்னர், துவக்க நிதியாக ரூ.75,000 வழங்கப்படும்.

2021–22 நிதியாண்டில், 804 தொழில் குழுக்கள் உருவாக்கப்பட்டு, 500 தொழில் குழுக்களுக்கு ரூ.3.75 கோடி துவக்க நிதி வழங்கப்பட்டுள்ளது.

(iii) **உற்பத்தியாளர் கூட்டமைப்பானது** உற்பத்தியாளர்களை ஒருங்கிணைத்து, மதிப்பு கூட்டல், சந்தைப்படுத்தல் மற்றும் பொருளாதார சேவை வழங்குதல் ஆகியவற்றினை ஒருங்கிணைக்கும் உயர்நிலை நிறுவனமாகும். இது 300–3000 உற்பத்தியாளர்களை உறுப்பினர்களாகக் கொண்டதாகும். உற்பத்தியாளர் கூட்டமைப்புகள் உரிய தகுதியை அடைந்த பின்னர், துவக்க நிதியாக ரூ.30 இலட்சம் வழங்கப்படும்.

2021–22 நிதியாண்டில், 15 உற்பத்தியாளர் கூட்டமைப்புகள் நிறுவன சட்டம் 2013–ன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன.

**ஆ) இணை மானிய நிதி (MGP)**

ஊரகத் தொழில்முனைவோருக்கு தேவைப்படும் கடனுதவியை நிதி நிறுவனங்களிடமிருந்து எளிதாக பெற வழி வகை செய்ய இணை மானிய நிதி திட்டம் துணைபுரிகிறது. இத்திட்டத்தின் கீழ், ரூ. 91.60 கோடி ஊரக நிறுவனங்களுக்கு மானியமாக விடுவிக்கப்படும். இதனால் வங்கிகள் மூலம் ரூ.300 கோடி வரை தொழில் முனைவோர்களுக்கு கடனுதவி கிடைக்கும். இணை மானிய நிதி மூலம் தனி நபர் நிறுவனங்கள் மற்றும் குழு நிறுவனங்கள் பயனடையலாம். கடன் பெற்ற தனிநபர் மற்றும் குழு நிறுவனங்கள் முறையாக 70% கடனை திருப்பிச் செலுத்திய பின்பு மீதமுள்ள 30% கடன் தொகையினை செலுத்துவதிலிருந்து விலக்குப் பெறலாம்.

இத்திட்டத்தின் கீழ் 6000 நுண் நிறுவனங்கள், 500 குறு நிறுவனங்கள் மற்றும் 120 சிறு நிறுவனங்களுக்கு இணை மானிய நிதி வழங்கப்படும். இணை மானிய நிதியாக நுண், குறு மற்றும் சிறு நிறுவனங்களுக்கு முறையே ரூ.1 இலட்சம், ரூ.3 இலட்சம் மற்றும் ரூ.5 இலட்சம் என வழங்கப்படும்.

**6.9.2. திறன் மேம்பாடு மற்றும் திறன் வளர்ப்புப் பயிற்சி**

வாழ்வாதார மேம்பாட்டிற்கும் வருமானத்தை உயர்த்துவதற்கும் ஏழை எளிய மக்களின் திறனை அதிகரிக்கவும் திறன் பயிற்சி முக்கிய தேவையாகும். ஊரகப் பகுதிகளில் வசிக்கும் திறன் வாய்ந்த தொழில் வல்லுநர்கள் மூலம் சமுதாயத் திறன் பள்ளிகள் மற்றும் சமுதாயப் பண்ணைப் பள்ளிகள் அமைக்கப்படுகின்றன.

ஊராட்சி / வட்டார அளவில் தொன்மையான கைவினைத் தொழில்கள் மற்றும் ஊரகப் பகுதிகளில் அதிக வருமானம் ஈட்டும் தொழில் முனைவோர்களில் அனுபவமுள்ள பயிற்றுநர்களைக் கண்டறிந்து, குறைந்தபட்ச உள்கட்டமைப்புகளை உருவாக்கி, இளைஞர்கள் வேலைவாய்ப்பு மற்றும் சுயதொழில் தொடங்குவதற்கு தொழிற்பயிற்சி அளிப்பதற்காக சமுதாயத் திறன் பள்ளிகள் உருவாக்கப்பட்டு வருகின்றன. 2021-22 ஆம் ஆண்டில், 501 சமுதாயத் திறன் பள்ளிகள் அமைக்கப்பட்டு 11,718 ஊரக இளைஞர்களுக்கு ரூ.3.92 கோடி செலவில் தொழிற்பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

பல வருட அனுபவத்தின் வாயிலாக நிபுணத்துவம் பெற்ற புதிய யுத்திகளைக் கையாளும் மற்றும் பிற விவசாயிகள், உற்பத்தியாளர்களுக்கு தொழில்நுட்ப அறிவை கற்றுக் கொடுக்கும் திறன் கொண்ட

விவசாயிகளால் சமுதாயப் பண்ணைப் பள்ளிகள் அமைக்கப்படுகின்றன.

2021-22 ஆம் நிதியாண்டில், 1131 சமுதாய பண்ணைப் பள்ளிகள் அமைக்கப்பட்டு, உற்பத்தியாளர் குழுக்களில் உள்ள 34,689 உறுப்பினர்களுக்கு வேளாண்மை மற்றும் கால்நடை பராமரிப்பு தொடர்பான பயிற்சிகள் ரூ.7.62 கோடி செலவில் வழங்கப்பட்டுள்ளது.

### 6.9.3. நிறுவனங்களை அமைத்தல்

(i) **மகளிர் வாழ்வாதார சேவை மையமானது** பொது கட்டமைப்புடன் வணிக மேம்பாட்டிற்கான ஆதரவு மற்றும் வேலை வாய்ப்புச் சேவைகளை வழங்க நிறுவப்பட்டுள்ளது. ஊரகத் தொழில்களை மேம்படுத்துவதற்காக 30 மகளிர் வாழ்வாதார சேவை மையங்கள் நிறுவப்பட்டுள்ளன.

(ii) **புலம் பெயர்ந்தோர் ஆதரவு மையமானது** சிறந்த வேலை வாய்ப்புகளுக்காகவும் மற்றும் தனிநபர் தொழில் மேம்பாட்டிற்காகவும் இடம் பெயர்ந்த திறனுள்ள கிராமப்புர இளைஞர்களின் தொழில் வளர்ச்சியினை ஊக்குவிக்கவும் அவர்களின் அடிப்படைத் தேவைகளுக்கு வழிகாட்டிடவும் செயல்படுத்தப்படும். இந்த முயற்சியினை பிற

அமைப்புகளோடு குறிப்பாக தொழிற்கல்வி நிறுவனங்கள், தொழில் நிறுவன கூட்டமைப்புகள் மற்றும் சமுதாய அமைப்புகளோடும் இணைந்து செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

**முதலீட்டு பகுப்பாய்வு உத்தி மற்றும் திட்டமிடல்**

1. **மாவட்ட பகுப்பாய்வு அறிக்கையானது** மாவட்டங்களில் உள்ள முக்கிய பண்ணை சார் மற்றும் பண்ணை சாரா துறைகளை கண்டறிவதற்காக மாவட்ட பகுப்பாய்வு அறிக்கை (DDS) அனைத்து திட்ட மாவட்டங்களிலும் மேற்கொள்ளப்பட்டது.
2. **மதிப்புத் தொடர் ஆய்வானது** சந்தைக் கட்டுப்பாடுகள் மற்றும் வாய்ப்புகள் பற்றிய ஆழமான புரிதலைப் பெறுவதற்கு மாவட்ட பகுப்பாய்வு அறிக்கை மூலம் அடையாளம் காணப்பட்ட 24 முன்னுரிமைப் பொருட்களில் பகுப்பாய்வு நடத்தப்பட்டு மதிப்புத் தொடர் ஆய்வு அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.
3. **மக்கள் பங்கேற்புடன் கூடிய வளர்ச்சித் திட்டமானது,** தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவனங்களை அடையாளம் காண கிராம அளவில் நடத்தப்படும் முதலீட்டு திட்டங்களை உள்ளடக்கிய பயிற்சியாகும். கிராம

முதலீட்டுத் திட்டங்கள் தயாரித்து ஒருங்கிணைக்கப்பட்டு, வட்டார முதலீட்டுத் திட்டங்களாகவும், மாவட்ட முதலீட்டுத் திட்டங்களாகவும் உருவாக்கப்பட்டுள்ளன.

**6.10 தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கம்** (TNULM)

தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் நோக்கமானது, நகர்ப்புர ஏழைகளிடையே சமுதாயம் சார்ந்த அமைப்புகளை உருவாக்கி, அவர்களின் வறுமையையும் நலிவு நிலையையும் குறைத்து,சுய வேலை வாய்ப்பு மற்றும் திறன் மேம்பாட்டுடன் கூடிய வேலை வாய்ப்புகளுக்கு வழி வகுத்து, அதன் மூலம் அவர்களின் வாழ்வாதாரத்தினை குறிப்பிடத்தக்க அளவில் மேம்படுத்துவதும், நிலைத்த தன்மை அடையச் செய்வதும் ஆகும். தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கமானது 60:40 என்ற விகிதத்தில் ஒன்றிய மற்றும் மாநில அரசுகளின் நிதியுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கம் (TNULM) ஆரம்ப கால கட்டத்தில் நகராட்சி நிர்வாக இயக்குநரகத்தால் செயல்படுத்தப்பட்டது. 2016-17 ஆம் ஆண்டு முதல், இத்திட்டம் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தால் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**இத்திட்டத்தின் கூறுகள்**

1. **சமூக ஒருங்கிணைப்பு மற்றும் நிறுவன மேம்பாடு** (SMID)
2. **வேலைவாய்ப்புடன் கூடிய திறன் வளர்ப்பு பயிற்சி மற்றும் பணியமர்வு** (ESTP)
3. **திறன் மேம்பாடு மற்றும் பயிற்சி** (CBT)
4. **சுயவேலைவாய்ப்புத் திட்டம்** (SEP)
5. **நகர்ப்புர வீடற்றோருக்கு உறைவிடம்** (SUH)
6. **நகர்ப்புர தெருவோர வியாபாரிகளுக்கான வாழ்வாதார திட்டம்** (SUSV)
7. **புதுமை மற்றும் சிறப்புத் திட்டங்கள்** (ISP)

**6.10.1 சமூக ஒருங்கிணைப்பு மற்றும் நிறுவன மேம்பாடு**

**அ) சுய உதவிக்குழுக்கள் அமைத்தல் மற்றும் சுழல் நிதி வழங்குதல்**

தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கம் நகர்ப்புர ஏழைகள் மற்றும் நலிவுற்றோரை உறுப்பினர்களாகக் கொண்டு, சுய உதவிக் குழுக்கள் மற்றும் கூட்டமைப்புகள் அமைத்து, ஒட்டுமொத்த சமுதாயத்தினை மேம்படுத்துவதை குறிக்கோளாகக் கொண்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் அமைக்கப்படும் சுய உதவிக்குழுக்களுக்கு அடிப்படைப் பயிற்சிகள் வழங்கி மூன்று மாதங்கள் முடிவடைந்த பின்பு,

தரமதிப்பீட்டின் அடிப்படையில், அக்குழுக்களுக்கு சுழல்நிதி வழங்கப்படுகிறது.

2021–22 ஆம் ஆண்டில் 20,438 சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது. அதில் 15,959 சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதியாக 15.96 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

**ஆ) பகுதி அளவிலான கூட்டமைப்புகள் ஏற்படுத்துதல் மற்றும் சுழல் நிதி வழங்குதல்**

பகுதி அளவிலான கூட்டமைப்பு குறைந்த பட்சம் 10 சுய உதவிக் குழுக்களை ஒருங்கிணைத்து குடியிருப்புப் பகுதி / வார்டு அளவில் ஏற்படுத்தப்படுகிறது. ஒவ்வொரு பகுதி அளவிலான கூட்டமைப்பும், அதன் உறுப்பினர் குழுக்களுக்கு முறையான வட்டி விகிதத்தில் உடனடியாக கடன் பெற வழிவகை செய்தல், மற்றும் சுய உதவிக் குழுக்களின் பொருளாதார நடவடிக்கைகளுக்கு வழிகாட்டியாக உள்ளது.

2021–22 ஆம் ஆண்டில் 300 பகுதி அளவிலான கூட்டமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளது. அதில் 215 பகுதி அளவிலான கூட்டமைப்புகளுக்கு சுழல் நிதியாக 1.08 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

### 6.10.2. வேலைவாய்ப்புடன் கூடிய திறன்வளர்ப்பு பயிற்சி மற்றும் பணியமர்வுத் திட்டம்

வேலை வாய்ப்புடன் கூடிய திறன்வளர்ப்புப் பயிற்சி மற்றும் பணியமர்வுத் திட்டமானது நகர்ப்புர ஏழை எளிய குடும்பங்களை சார்ந்த இளைஞர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சியளித்து சுய தொழில் அல்லது ஊதியத்துடன் கூடிய வேலைவாய்ப்பினை ஏற்படுத்தி அவர்களின் வருமானத்தைப் பெருக்கி நிலைத்த வாழ்வாதார மேம்பாட்டிற்கு வழிவகை செய்கிறது. இத்திட்டத்தின் மூலம் தினக்கூலி அல்லது பருவகால தொழில் செய்யக்கூடிய நகர்ப்புர ஏழைகளின் தொழில் பாதிப்புகளை குறைக்கும் வகையிலான பயிற்சிகள் வழங்கப்படுகிறது.

2021–22 ஆம் ஆண்டில் 7,662 நகர்ப்புரத்தை சார்ந்த இளைஞர்களுக்கு 11.20 கோடி ரூபாய் செலவில் வேலைவாய்ப்புடன் கூடிய திறன்வளர்ப்புப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

### 6.10.3. திறன் மேம்பாடு மற்றும் பயிற்சி

நகர்ப்புரத்தில் வறுமையை ஒழிப்பதற்கும், வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கும் தேவையான பயிற்சிகளை வழங்குவது திறன் மேம்பாடு மற்றும் பயிற்சி திட்டத்தின் நோக்கமாகும். இந்த உட்கூறின் கீழ்

மாநில, மாவட்ட மற்றும் நகர அளவில் திட்டத்தினை அமலாக்கம் செய்யும் அலுவலர்கள் மற்றும் களப்பணியாளர்களுக்கு பயிற்சிகள் வழங்குவதன் வாயிலாக ஏழை மக்களின் சமூக அமைப்புகளை கட்டமைப்பு செய்து திட்டத்தை சிறப்பாக செயல்படுத்த வழிவகை செய்கிறது.

### 6.10.4. சுய வேலைவாய்ப்புத் திட்டம்

இத்திட்டமானது நகர்ப்புர ஏழை குடும்பங்களைச் சார்ந்த தனி நபர் மற்றும் சுய உதவிக் குழுக்களைச் சார்ந்த வேலை வாய்ப்பற்ற மற்றும் தகுதிக்கும் குறைவான வருமானத்தில் பணிபுரிபவர்களை அடையாளம் கண்டு, அவரவர் திறன் மற்றும் உள்ளூர் நிலைமைக்கு ஏற்றார் போல் சுய வேலைவாய்ப்பு மற்றும் சிறு தொழில் தொடங்குவதற்கு வட்டி மானியத்துடன் கூடிய வங்கிக்கடன் அளிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

2021-22 ஆம் ஆண்டில் 8,053 தனி நபர்களுக்கு 45 கோடி ரூபாய், 5,245 தொழில் குழுக்களுக்கு 167.48 கோடி ரூபாய் மற்றும் 14,237 சுய உதவிக் குழுக்களுக்கு 644.42 கோடி ரூபாய் வட்டி மானியத்துடன் கூடிய வங்கிக்கடன் வழங்கப்பட்டுள்ளது.

கீழ்க்கண்ட திட்டங்கள் நகராட்சி நிர்வாக இயக்குநரகத்தால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

இத்திட்டங்களை ஒருங்கிணைத்து நிதியுதவி வழங்கி செயல்படுத்தி வருகிறது.

1. நகர்ப்புர வீடற்றோருக்கு உறைவிடம் (SUH)
2. நகர்ப்புர தெருவோர வியாபாரிகளுக்கான வாழ்வாதாரம் (SUSV)
3. பிரதம மந்திரி தெருவோர வியாபாரிகள் சுய சார்பு நிதி திட்டம் (PMSVANidhi)

## 6.11. புதிய முயற்சிகள்

1. **நெகிழி இல்லா தமிழகம் அமைய உதவும் நடவடிக்கைகள்:**

மக்களின் விழிப்புணர்வு பிரச்சாரம் மூலம், "ஒருமுறை மட்டுமே பயன்படுத்தக்கூடிய நெகிழி" இல்லா மாநிலமாக மாற்ற தமிழ்நாடு அரசு உறுதி மேற்கொண்டுள்ளது. கடந்த 23 டிசம்பர் 2021 அன்று "**மீண்டும் மஞ்சப்பை**" பிரச்சாரம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடங்கப்பட்டது.

ஒருமுறை மட்டுமே பயன்படுத்தும் நெகிழியினைத் தவிர்க்கும் பொருட்டு, மகளிர் சுய உதவி குழுவினரால் உற்பத்தி செய்யப்பட்ட சுற்றுச் சூழலுக்கு ஏற்ற துணி

மற்றும் சணல் பைகள், பனை ஓலை கிண்ணங்கள், காகிதம் மற்றும் மண் பாத்திரங்கள், தானியங்களால் செய்யப்பட்ட சாப்பிடக்கூடிய சமையல் உபகரணங்கள் ஆகியவற்றைத் தேர்ந்தெடுக்கப்படும் விதமாகவும் விழிப்புணர்வு பிரச்சாரத்தை ஏற்படுத்த மகளிர் சுய உதவிக் குழுவினர் உதவுவார்கள்.

மேற்கண்ட செயல்பாடுகளை வாழ்வாதார இயக்கம் ஒவ்வொரு மாவட்டத்திலும் தொழிற் தொகுப்பு குழு மூலம் சீரிய முறையில் மேற்கொள்ளும்.

**2. ஊட்டச்சத்து குறைபாடற்ற தமிழகம்**

தேசிய குடும்ப நல கள ஆய்வு – 5ன் படி (NFHS–5), குழந்தைகள் ஊட்டச்சத்து குறைபாடு மற்றும் பெரியவர்கள் இரத்தசோகை ஆகியவை கவலை அளிப்பதாக உள்ளது. ஊரக பெண்களின் சரிவிகித உணவு, உணவு பழக்கவழக்கங்கள், தனிப்பட்ட சுகாதாரம் முதலியவை குறித்து சமூக வள பயிற்றுநர்கள் மூலம் சமூகநலம் மற்றும் மகளிர் உரிமை துறையுடன் இணைந்து தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறவனத்தால் விழிப்புணர்வு மேற்கொள்ளப்படும். சிறந்த ஊராட்சி விருதுக்கு

ஊட்டச்சத்து குறைபாடற்ற ஊராட்சி என்ற காரணி ஒரு முக்கிய காரணியாக சேர்க்கப்படும். இதுதொடர்பாக சமூக வள பயிற்றுநர்களால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளும் ஊக்கத் தொகையுடன் அங்கீகரிக்கப்படும்.

### 3. கலைஞர் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் மேம்பாட்டு திட்டத்துடன் இணைந்து செயல்படுதல்

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் வாழ்வாதார இயக்கம் பண்ணை சார்ந்த நடவடிக்கைகள் கலைஞர் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் மேம்பாட்டு திட்டத்துடன் இணைந்து செயல்படுத்தப்படும். வேளாண் மற்றும் உழவர் நலத்துறை சிறப்பு திட்டத்தின் மூலம் தரிசாக உள்ள நிலங்கள் சாகுபடிக்கு கொண்டுவரப்பட்டு இரண்டாவது பசுமைப் புரட்சி ஏற்படுத்தப்படும். பண்ணை சார் கூறுகளான நாற்றங்கால் ஏற்படுத்துதல், ஒருங்கிணைந்த பண்ணைத் தொகுப்பு, சிறு உபகரண வங்கி உற்பத்தியாளர் குழு, மதிப்புக்கூட்டல் போன்றவை உருவாக்குதல் மற்றும் மேம்படுத்துதல் ஆகியவைகள் கலைஞர் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் மேம்பாட்டு திட்டத்தின் மூலம் இணைந்து செயல்படுத்தப்படும்.

**4. மகளிர் சுய உதவிக் குழு பசுமை தமிழ்நாடு திட்டத்தை முன்னெடுத்து செல்லுதல்**

மகளிர் சுய உதவிக் குழுக்கள் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதி திட்டம் மூலம் நாற்றங்கால் ஏற்படுத்துதல், மரக் கன்றுகளை நடுதல் மற்றும் பராமரித்தல் ஆகியவற்றிற்கு திட்ட செயலாக்க முகமையாக செயல்படும் (PIAs). முருங்கை மற்றும் பழக் கன்றுகள் ஆகியவை மகளிர் சுய உதவி குழுக்களுக்கு தங்களது புழக்கடையில் நட்டு பராமரிப்பதற்காக வழங்கப்படும். இந்த செயல்பாடு வனத்துறையின் பசுமை தமிழ்நாடு திட்டத்திற்கு மெருகேற்றுவதாக அமையும்.

5. **அரசு திட்டங்கள் மற்றும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்திற்கான சமூக தணிக்கை**

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின் சமூக தணிக்கை குழுவில் பயிற்சி பெற்ற, மகளிர் சுய உதவிக்குழு பெண்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இதர அரசு திட்டங்களான பிரதம மந்திரி வீட்டு வசதி திட்டம், ஜல் ஜீவன் மிஷன், சமூக பாதுகாப்பு திட்டங்கள் மற்றும் தேசிய ஊரக வாழ்வாதார

இயக்கம் ஆகியவற்றுக்கான சமூக தணிக்கை மேற்கொள்ள இவர்களுக்கு பயிற்சி அளிப்பதன் மூலம் திறன் மேம்படுத்தப்பட்டு, சமூக தணிக்கையில் ஈடுபடுத்தப்படுவர்.

**6. மகளிர் சுய உதவி குழு செயலி**

சமூக மற்றும் பொருளாதாரத்தில் பெண்களுக்கான அதிகாரம் மற்றும் மகளிர் சுய உதவி குழு ஏற்படுத்துதல் ஆகியவற்றுக்கு தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் தொடர்பு முகமை ஆகும். பல்வேறு சிறப்பான திட்டங்களை தீட்டவும் மற்றும் செயல்படுத்தவும் ஒவ்வொரு மகளிர் சுய உதவி குழு கூட்டமைப்பின் தரவுகள் முக்கியமானதாகும். எனவே, ஒவ்வொரு மகளிர் சுய உதவி குழுவிற்கான விபரங்களை தனித்த அடையாளங்களுடன் ஏற்படுத்துவதும் ஆதார் மற்றும் வங்கி கணக்குகளுடன் இணைத்து தரவுகளை பெறவும் மார்ச் 2022ல் கைபேசி செயலி தொடங்கப்பட்டுள்ளது. இத்தரவுகள் சீரிய கண்காணிப்பிற்காகவும் மற்றும் எதிர்காலத் திட்டமிடுதலுக்காகவும் அவ்வப்போது மேம்படுத்தப்படும்.

**7. இ-சேவை மையங்களை மேம்படுத்துதல்**

ஒவ்வொரு பஞ்சாயத்திலும் இ-சேவை மையம் அமைக்கப்பட்டு வருகிறது. 1497 இ-சேவை மையங்கள் கிராம ஊராட்சி சேவை மைய கட்டிடங்களில் சுய உதவிக் குழுக்களால் நடத்தப்பட்டு வருகிறது.

2022-23 ஆம் ஆண்டில் மகளிர் சுய உதவி குழு பெண்களால் நடத்தப்படும் வகையில் இ-சேவை மையங்கள் விரிவாக்கம் செய்யப்படும். மேலும், ஒன்றிய அரசின் மின் மைய சேவை மையம் மற்றும் இதர சேவைகள் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**6.12 2022 – 23 ஆண்டுகளில் செயல்படுத்தப்பட உத்தேசிக்கப்பட்டுள்ள திட்டங்கள்**

- 10 மாவட்டங்களில் ரூபாய் 12.88 கோடி மதிப்பீட்டில் மாதிரி வட்டார அளவிலான கூட்டமைப்பு பரீட்ச்சார்த்த முறையில் ஏற்படுத்தப்படும்.
- மகளிர் சுய உதவிக்குழு உற்பத்திப் பொருள்களை மண்டல அளவில் கண்காட்சி மற்றும் விற்பனை செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
- **'மதி பஜார்'** என்ற மின் வணிகத்தளம் மறுசீரமைப்பு செய்யப்பட்டு நிகழ்நிலையில் விற்பனை செய்ய ஏதுவாக மீண்டும் செயல்படுத்தப்படும்.
- நலிவுற்ற மற்றும் விளிம்பு நிலையில் உள்ள குடும்பங்களுக்கு அவர்களின் தேவை, உரிமைகள்

மற்றும் திட்ட பயன்களைப் பெறும் வகையில் **"குடும்ப தொலைநோக்கு அட்டை"** வழங்கப்படும்.

- 24 மாவட்டங்களில் உள்ள 105 பிற்படுத்தப்பட்ட வட்டாரங்களில் 3535 கிராம பஞ்சாயத்துகளில் மகளிர் சுய உதவி குழு, தனிநபர் பெண்கள் மற்றும் இளம் பருவ பெண்களுக்கு மாதவிடாய் சுகாதாரம் தொடர்பான விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும்.
- படித்த ஊரக இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்தி தரும் வகையில் 80 வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்படும்.
- 1760 குழு நிறுவனங்களுக்கு ரூ. 20.50 கோடி மதிப்பில் துவக்க நிதியாக வழங்கப்படும்.
- 4900 தனிநபர் நிறுவனங்கள் மற்றும் 345 குழு நிறுவனங்களுக்கு ரூபாய் 64.20 கோடி மதிப்பீட்டில் இணை மானிய நிதியாக வழங்கப்படும்.
- 22,000 ஊரக இளைஞர்களுக்கு, சமூக திறன் பள்ளி மூலம் பல்வேறு கைவினை பயிற்சிகள் வழங்கப்படும்.
- 90,000 உற்பத்தியாளர் குழு உறுப்பினர்களுக்கு சமூக பண்ணை பள்ளிகள் மூலம் பண்ணை மற்றும் பண்ணை சார்ந்த பயிற்சிகள் வழங்கப்படும்.

# 7. பயிற்சி மற்றும் திறன் மேம்பாடு

## 7.1. திறன் மேம்பாடு

திறன் மேம்பாடு மற்றும் பயிற்சி என்பது மனித வளங்களின் தரத்தை மேம்படுத்துவதுடன், திறம்பட்ட செயல்பாட்டின் மூலம் அரசு திட்டங்களின் வெற்றியை உறுதி செய்கிறது. அனைத்து பயிற்சி பங்கேற்பாளர்களின் திறமை, அறிவுத்திறன், ஆக்கத்திறன், ஆற்றல் மற்றும் செயல்திறனை மேம்படுத்த, திறன், அறிவு, அணுகுமுறை மற்றும் நடத்தை மேம்பாடு சார்ந்த பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. இதன் மூலம் பயிற்சியாளர்கள், பயிற்சியாளர்கள் சார்ந்த துறை மற்றும் சமூகம் பயன்பெறும்.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் பல்வேறு நிலை அலுவலர்கள், ஊரக உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் இதர பணியாளர்களின் திறன் மேம்பாட்டிற்கான பயிற்சிகள் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பயிற்சி ஆணையரகத்தின் கீழ் செயல்படும் மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி

நிறுவனம் மற்றும் 5 மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்கள் மற்றும் 36 மாவட்ட வள மையங்கள் மூலம் அளிக்கப்படுகின்றன.

## 7.2. மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம்

மாநில அளவிலான தலைமை பயிற்சி நிறுவனம் என்ற வகையில், இந்நிறுவனமானது, ஊரக மற்றும் உள்ளாட்சித் துறையில் உள்ள குறிப்பிட்ட பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்களுக்கு அறிவு, திறன் மேம்பாடு மற்றும் நேர்மறை மனப்பான்மையை உருவாக்குவதன் மூலம் பல்வேறு ஊரக வளர்ச்சித் திட்டங்களை திறம்பட செயல்படுத்துவதற்கு தேவையான பயிற்சிகளை அளிக்கின்றது. மேலும் பயிற்சிக்கான பாடநெறி உள்ளடக்கத்தை மேம்படுத்துதல் மற்றும் பல்வேறு படிப்புகளுக்கான பயிற்சியாளர்களுக்கு பயிற்சி அளித்தலும் இந்நிறுவனத்தின் பொறுப்பாகும்.

மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனமானது, தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம், 1975–ன் கீழ் ஓர் சங்கமாக பதிவு செய்யப்பட்டுள்ளது.

தற்போது, இந்நிறுவனம் சென்னைக்கு அருகில் உள்ள மறைமலைநகரில் 25 ஏக்கர் நிலப்பரப்பில் இயங்கி வருகிறது.

### 7.2.1. பயிற்சி முறைகள்

மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம், பங்கேற்புடன் கூடிய பயிற்சி முறைகள், விரிவுரைகள், களப்பார்வை, மேற்கோள் காட்டுதல், கலந்துரையாடல், அனுபவ பகிர்வு போன்ற பயிற்சி முறைகளை கடைபிடிக்கிறது. மாவட்ட மற்றும் வட்டார அளவிலான பயிற்சிகளுக்கு, சிறந்த பயிற்றுநர்கள் மாநில நிலை முதல் கிராம நிலை வரை அனைத்து மட்டங்களிலும் படிப்படியாக பயிற்சி அளிக்கும் முறையில் (Cascading Model) பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. இந்நிறுவனமானது உறைவிடப் பயிற்சிகளை அதன் நிறுவன வளாகத்தில் நடத்துகின்றது. மேலும் மாவட்ட நிர்வாகம் மற்றும் மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்கள் மூலம் மாவட்ட, வட்டார மற்றும் கிராம ஊராட்சி அளவில் வெளிவளாக பயிற்சிகளை நடத்துகிறது.

கொரோனா–19 காலகட்டத்தில் இணையவழி பயிற்சிகளும் நடத்தப்பட்டன.

### 7.2.2. பயிற்சிக்கான நிதி ஆதாரம்

மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம் அதன் பணியாளர்களுக்கான ஊதியம் மற்றும் ஊதியமில்லாத செலவினங்களுக்கான மானிய நிதி உதவியினை (Grants–in–aids) தொடர் செலவினத் தலைப்பில் மத்திய மற்றும் மாநில அரசுகளிடமிருந்து 50:50 என்ற விகிதாச்சார அடிப்படையில் பெறுகின்றது.

மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம், பல்வேறு பயிற்சிகளை அளிக்க, தேசிய கிராம சுயாட்சி திட்டம், ஜல் ஜீவன் இயக்கம் மற்றும் மாநில நிதி குழு மூலமாக மத்திய மாநில அரசுகளிடமிருந்து நிதியுதவி பெறுகிறது.

உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் பயிற்சி உபகரணங்கள் கொள்முதல் ஆகியவற்றிற்காக ஒவ்வொரு வருடமும் தேவையின் அடிப்படையில் ஒன்றிய அரசின் மத்திய ஊரக வளர்ச்சி

அமைச்சகத்தின் மூலம் தொடரா செலவினத்தின் 100 சதவீதம் நிதியுதவி வழங்கப்படுகிறது.

### 7.2.3. மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்தில் சீர்மிகு மையங்கள் அமைத்தல்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் ஏற்பட்டுள்ள சீர்பட்ட அணுகுமுறைகளின் காரணத்தால் அதன் திறன் மேம்பாடு நடவடிக்கைகளையும் வலுப்படுத்தும் வகையில் மாநில ஊரக வளர்ச்சி நிறுவனத்தில் பல சீர்மிகு மையங்களை அமைக்கவும் மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்களை வலுப்படுத்தும் வகையிலும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்தில் பின்வரும் நான்கு சீர்மிகு மையங்கள் உருவாக்கப்பட்டுள்ளன:

1. ஊராட்சி நிர்வாக மையம் / மாநில ஊரக வள மையம்.

2. ஊரக வளர்ச்சி திட்ட செயல்பாடு மற்றும் பயிற்சி ஒருங்கிணைப்பு மையம்.
3. வாழ்வாதாரம், மகளிர் மேம்பாடு மற்றும் ஊரக தொழில் நிறுவனங்கள் மேம்பாடு மையம்
4. ஊரக பொறியியல் மற்றும் தொழில் நுட்ப மையம்

### 7.2.4. இதர கல்வி நிறுவனங்களுடன் இணைந்து செயலாற்றுதல்

இந்திய தொழில்நுட்ப நிறுவனம்–சென்னை, காந்தி கிராமம் ஊரக நிறுவனம், குஜராத் மாநிலம், ஆனந்தில் உள்ள ஊரக மேலாண்மை நிறுவனம், மெட்ராஸ் சமூக பணிகள் பள்ளி, தேசிய தொழில்நுட்ப ஆசிரியர் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், அவிநாசிலிங்கம் பல்கலைக்கழகம், எஸ்.ஆர்.எம். பல்கலைக்கழகம், பாரதியார் பல்கலைக்கழகம் ஆகிய நிறுவனங்களுடன் இணைந்து செயலாற்றும் ஒப்பந்தங்கள் (MoUs) இந்நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பயிற்றுநர் மேம்பாடு, ஆய்வு, களப்பார்வை, திறன் மேம்பாடு, களவேலைகள், வெளியீடுகள், ஊரக வளர்ச்சி,

பேரிடர் மேலாண்மை போன்ற துறைகளில் நிபுணத்துவம் பெற்றிட இம்முயற்சி மேற்கொள்ளப்பட்டது. அதேபோன்று பங்கேற்கும் நிறுவனங்களுக்கும், தங்களுடைய மாணவர்களுக்கும் பயிற்சியளித்திடவும், பணி அனுபவம் (Internship) பெற்றிடவும், திட்டங்கள் தொடர்பாக நிறுவனத்துடன் இணைந்தாய்வு மற்றும் மதிப்பீடு மேற்கொள்ளவும், ஆசிரியர்களாக பணியாற்றவும், நடைமுறையில் உள்ள சிறந்த முறைகளை ஆவணப்படுத்தவும் ஏதுவாகிறது.

### 7.2.5. புதிதாக தேர்வு செய்யப்பட்ட ஊரக மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகளுக்கான பயிற்சிகள்

புதிதாக தேர்வு செய்யப்பட்ட ஊரக மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகளுக்காக அடிப்படை பயிற்சி மற்றும் விழிப்புணர்வு பயிற்சி அளிப்பதற்கேதுவாக பெரிய அளவிலான திட்டங்கள் தயார் செய்யப்பட்டுள்ளது. இப்பயிற்சிகளை நடத்துவதற்கு மாநில அளவிலான முதன்மை பயிற்றுநர்கள், மண்டல அளவிலான வள பயிற்றுநர்கள், மாவட்ட வள

பயிற்றுநர்கள் மற்றும் வட்டார வள பயிற்றுநர்கள் உள்ளிட்ட நான்கு நிலை பயிற்சியாளர்கள் கண்டறியப்பட்டு பயிற்றுவிக்கப்பட்டுள்ளனர். மேற்கண்ட பயிற்சியாளர்கள் தேர்வு செய்யப்பட்ட ஆறு வகையான பிரதிநிதிகளுக்கு பயிற்சிகள் வழங்குவார்கள்.

திறன்வாய்ந்த செயல்பாடு மற்றும் விதிகளுக்கு உட்பட்ட நிர்வாகத்திற்கு ஏதுவாக தேர்ந்தெடுக்கப்பட்ட ஊரக உள்ளாட்சி பிரதிநிதிகளுக்கு பயன்படும் வகையில் ஊராட்சி பொது நிர்வாகம், திட்டங்கள் செயல்பாடு, நிதி நிர்வாகம், மின் ஆளுமை ஆகிய பல்வேறு தலைப்புகளில் கையேடுகள் தயாரிக்கப்பட்டுள்ளன. மேலும் தேர்ந்தெடுக்கப்பட்ட பெண் பிரதிநிதிகள், பட்டியல் இன மற்றும் பழங்குடியின பிரதிநிதிகள் திறன்பட செயல்படும் வகையில் சிறப்பு பயிற்சி திட்டங்களும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

2022–23 ஆம் ஆண்டில், தேசிய ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்தின் பரிந்துரையின்

அடிப்படையில் தேவை மதிப்பீடு மற்றும் ஆராய்ச்சி தேவையின் அடிப்படையில் பல்வேறு பயிற்சிகள் வழங்கப்படவுள்ளது.

**அட்டவணை 7.1**

**மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்தில் வழங்கப்பட்ட பயிற்சி விவரம் – 2021–22**

| பயிற்சிகளின் எண்ணிக்கை | பயிற்சி பெற்றவர்களின் எண்ணிக்கை |
|---|---|
| 8 | 7329 |

## 7.3. மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்கள்

### 7.3.1. பணியமைப்பு

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கூடுதல் இயக்குநர் / இணை இயக்குநர் நிலையிலான முதல்வர்கள் தலைமையின் கீழ், மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்கள் நிர்வகிக்கப்படுகின்றன.

## அட்டவணை 7.2

## ஐந்து மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்கள் குறித்த அடிப்படை விவரங்கள்

| **வ. எண் .** | **மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங் களின் பெயர்** | **தமைலையிடம் அமைந்துள்ள மாவட்டத்தின் பெயர்** | **எல்லைக்குட்பட்ட மாவட்டங்கள்** | **துவங்கப் – பட்ட ஆண்டு** |
|---|---|---|---|---|
| 1. | சத்திய விஜய நகரம் | திருவண்ணாம லை | காஞ்சிபுரம், விழுப்புரம், திருவள்ளூர், கடலூர், திருவண்ணாம லை, செங்கல்பட்டு, கள்ளக்குறிச்சி, (7 மாவட்டங்கள்) | 1956 |
| 2. | கிருஷ்ணகிரி அணை | கிருஷ்ணகிரி | கிருஷ்ணகிரி, நாமக்கல், சேலம், தர்மபுரி, வேலூர், இராணிப்பேட்டை, திருப்பத்தூர் (7 மாவட்டங்கள்) | 1958 |
| 3. | பட்டுக்கோட் டை | தஞ்சாவூர் | தஞ்சாவூர், திருவாரூர் நாகப்பட்டினம், மயிலாடுதுறை, திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, சிவகங்கை (7 மாவட்டங்கள்) | 1954 |

| வ. எண். | மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங் களின் பெயர் | தமைமையிடம் அமைந்துள்ள மாவட்டத்தின் பெயர் | எல்லைக்குட்பட்ட மாவட்டங்கள் | துவங்கப் – பட்ட ஆண்டு |
|---|---|---|---|---|
| 4. | பவானிசாகர் | ஈரோடு | ஈரோடு, கோயம்புத்தூர், திண்டுக்கல், நீலகிரி, கரூர், பெரம்பலூர், அரியலூர், திருப்பூர் (8 மாவட்டங்கள்) | 1972 |
| 5. | தே.கல்லுப்பட்டி | மதுரை | மதுரை, தேனி, விருதுநகர், இராமநாதபுரம், திருநெல்வேலி, தென்காசி, தூத்துக்குடி, கன்னியாகுமரி (8 மாவட்டங்கள்) | 1948 |

### 7.3.2. மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்களின் செயல்பாடுகள்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள், தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சி பிரதிநிதிகள் அதாவது, ஊராட்சி ஒன்றியக் குழு உறுப்பினர்கள், கிராம ஊராட்சித் தலைவர்கள், ஊராட்சி செயலர்கள் மற்றும் அனைத்து ஊராட்சி பணியாளர்கள், சுய உதவிக் குழு உறுப்பினர்கள், சமூகம் சார்ந்த அமைப்புகள், பிற துறையில் பணிபுரியும் அலுவலர்கள் ஆகியோருக்கு மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்தால்

தயாரிக்கப்பட்ட பயிற்சிக்கான பாடநெறி உள்ளடக்கம் மற்றும் கையேடுகளின் அடிப்படையில், மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்களில் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

ஒவ்வொரு மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனமும் ஓர் ஆண்டிற்கு குறைந்தபட்சம் 5,000 நபர்களுக்கு உள் வளாகப் பயிற்சியும், வெளி வளாகப் பயிற்சியையும் உள்ளடக்கி அதிகபட்சமாக 25,000 நபர்களுக்கு பயிற்சி அளிக்க இயலும்.

### 7.3.3. நிதி

தமிழ்நாடு அரசு, மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்களின் செயல்பாட்டிற்கு ஒவ்வொரு ஆண்டும் ரூ.7 கோடி நிதி வழங்குகிறது.

ஒன்றிய அரசு ஒவ்வொரு மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்திற்கும், ஒவ்வொரு ஆண்டும் பயிற்சித் திட்டம் தொடர்பான செலவினங்களை மேற்கொள்ள ரூ.20 இலட்சம் தொடர்செலவின மானியமாக வழங்குகிறது. மேலும் இந்நிறுவனங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும் மற்றும் பயிற்சி உபகரணங்களுக்காகவும் தேவையின் அடிப்படையில் ஒன்றிய அரசு 100 சதவீதம் தொடரா செலவினத்தின் கீழ் நிதியினை வழங்குகிறது.

பல்வேறு பயிற்சிகளை அளிக்க மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்களுக்கு, தேசிய கிராம சுயாட்சி திட்டம், மாநில நிதிக்குழு மற்றும் ஜல் ஜீவன் இயக்கம் ஆகிய திட்டங்களில் மத்திய மாநில அரசுகளிடமிருந்து நிதியுதவி பெறப்படுகிறது.

**அட்டவணை 7.3**

**மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்களில் வழங்கப்பட்ட பயிற்சிகளின் விவரம் – 2021–22**

| பயிற்சிகளின் எண்ணிக்கை | பயிற்சி பெற்றவர்களின் எண்ணிக்கை |
|---|---|
| 7 | 47848 |

## 7.4. ஊராட்சிகளுக்கான மாவட்ட வள மையங்கள் (DRCP)

மாவட்ட அளவில் ஊராட்சி அமைப்புகளுக்கு தேவையான திறன் மேம்பாடு மற்றும் பயிற்சிகளை சிறப்பாக மேற்கொள்ள ஊராட்சிகளுக்கான மாவட்ட வள மையங்கள் மத்திய அரசு நிதி உதவியுடன் தேசிய கிராம சுயாட்சி திட்டத்தின் (RGSA) கீழ் அமைக்கப்பட்டுள்ளன. மாவட்ட ஆட்சியர் அவர்களின் நிர்வாக கட்டுப்பாட்டிற்குள் செயல்படும்

இம்மையங்களின் பயிற்சி மற்றும் திறன் மேம்பாட்டு பணிகள் சம்பந்தப்பட்ட மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்தின் வழிகாட்டுதல் அடிப்படையில் மேற்கொள்ளப்படும். மாவட்ட வள மையங்களில் கிராம ஊராட்சி வார்டு உறுப்பினர்கள், சாலை ஆய்வாளர்கள், ஊராட்சி செயலர்கள், மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி இயக்குபவர்கள் ஆகிய ஊராட்சி பணியாளர்கள், தூய்மை பணியாளர்கள், சமூகம் சார்ந்த அமைப்புகள் மற்றும் கிராம ஊராட்சி நிலையிலான அமைப்புகள் ஆகியோருக்கு பயிற்சிகள் அளிக்கப்படுகிறது.

**அட்டவணை 7.4**

**ஊராட்சிகளுக்கான மாவட்ட வள மையத்தின் வாயிலாக வழங்கப்பட்ட பயிற்சிகளின் விவரம் – 2021–22**

| பயிற்சிகளின் எண்ணிக்கை | பயிற்சி பெற்றவர்களின் எண்ணிக்கை |
|---|---|
| 3 | 75150 |

# 8. ஊரக வளர்ச்சித் துறையின் நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகள் (SDG)

**ஊரக வளர்ச்சி துறையின் நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகள் (SDG)**

விரைவான நகரமயமாதலால் வளர்ந்து வரும் சமூக பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் மற்றும் காலநிலை மாற்றம் ஆகியவற்றை எதிர்கொள்வதற்கு ஊரக வளர்ச்சித் திட்டங்களின் அணுகுமுறைகளை மறுசீரமைப்பதில் நீடித்த வளர்ச்சி இலக்குகளின் பங்கு முக்கியமானது.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் திட்டங்கள் மற்றும் செயல்பாடுகள், நீடித்த வளர்ச்சிக்கான கீழ்க்கண்ட இலக்குகளில் நேரடியான தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

1–வறுமையின்மை (No Poverty), 2–பட்டினியில்லா நிலை (zero hunger), 3–நல்ல ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வு (Good Health and Well Being), 5–பாலின சமத்துவம் (Gender Equality), 6–சுத்தமான நீர் மற்றும் சுகாதாரம் (Clean Water and Sanitation), 8–கண்ணியமான வேலை மற்றும் பொருளாதார வளர்ச்சி (Decent Work and Economic

Growth), 9–தொழில், புத்தாக்கம் மற்றும் உள்கட்டமைப்பு (Industry, Innovation and Infrastructure), 11–நிலையான நகரம் மற்றும் சமூகங்கள் (Sustainable City and Communities), 12–நிலையான நுகர்வு மற்றும் உற்பத்தி (Sustainable Consumption and Production), 13–காலநிலை செயல்பாடுகள் (Climate Action) மற்றும் 16–அமைதி மற்றும் நீதி (Peace and Justice).

இந்த இலக்குகளின் முன்னேற்றம் 20 குறிகாட்டிகள் மூலம் அளவிடப்படுகிறது. இவற்றில், 17 குறிகாட்டிகள் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரகம் தொடர்பான மற்றும் 3 குறிகாட்டிகள் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் மூலம் செயல்படும் திட்டங்கள் தொடர்பானது. முதன்மை மாநில திட்டங்களான, அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம் (AGAMT), சமத்துவபுரம் மற்றும் ஒன்றிய அரசின் நிதியுதவியுடன் இணைந்து செயல்படும் திட்டங்களான மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம், பிரதம மந்திரி ஊரக குடியிருப்பு திட்டம், பிரதம மந்திரி கிராம சாலை திட்டம்,

தேசிய ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் தீன் தயாள் உபாத்யாயா கிராமின் கௌசல்ய யோஜனா போன்ற திட்டங்கள் இந்த இலக்குகளை அடைவதில் உந்துதலை வழங்குகின்றன.

நீடித்த நிலையான வளர்ச்சி இலக்கு-1 (SDG-1 No Poverty) மற்றும் நீடித்த நிலையான வளர்ச்சி இலக்கு-2 (SDG-2 Zero Hunger) அடங்கிய பணிக்குழு-1 (working group-1)-ற்கு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் முதன்மைச் செயலாளர் தலைவராக உள்ளார். மேற்படி இரண்டு வளர்ச்சி இலக்குகளை முழுமையாக அடைவதில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பல்வேறு துறைகளை ஒருங்கிணைத்து செயல்படுகிறது.

நீடித்த வளர்ச்சி இலக்குகளை ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் இலக்காக மாற்றி, அதனை அடைவதே அடுத்த கட்ட முயற்சியாகும். இந்த நோக்கத்திற்காக ஒன்றிய அரசின், பஞ்சாயத்து ராஜ் அமைச்சகத்தால் நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகளை (SDG) உள்ளூர்மயமாக்குவது குறித்த நிபுணர் குழுவின்

பரிந்துரைகளின் அடிப்படையில், தமிழ்நாடு செயல்படும். நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகளை (SDGs) உள்ளூர்மயமாக்குதலால், கிராம ஊராட்சிகள் அவற்றிற்காக அடையாளம் காணப்பட்ட 9 கருப்பொருளின் இலக்குகளை அடைவதற்கு கிராம ஊராட்சிகள் பணியாற்றும். 2022-23 முதல், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையானது நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகளை (SDG) அடைவதற்காக, கிராம ஊராட்சிகளுக்கு திட்டமிடல், நிதியளித்தல், செயல்படுத்துதல், கண்காணித்தல் போன்ற கட்டமைப்புகளை வழங்கும்.

# 9. வரவு செலவுத் திட்டம்

## 9. வரவு செலவுத் திட்டம் 2022-2023

2022-2023-ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் 26,647.193 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் வருவாய் செலவினங்களுகாக 22,256.218 கோடி ரூபாய் மற்றும் மூலதனச் செலவினங்களுக்காக 4,390.825 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

# 10. முடிவுரை

## முடிவுரை

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, ஊரகப் பகுதி மக்களின் விருப்பங்களை நிறைவேற்றுவதில் ஈடுபாட்டோடு இருப்பதுடன் கிராம ஊராட்சிகளில் பாதுகாப்பான குடிநீர், சுகாதாரம், ஊரகச் சாலைகள், நிலையான வீடுகள், தெரு விளக்குகள் போன்ற அடிப்படை தேவைகளை முழுமையாக வழங்க தீவிர முயற்சிகளை மேற்கொண்டு உட்கட்டமைப்பு இடைவெளிகளை நிரப்ப அனைத்து திட்டங்களையும் ஒருங்கிணைத்தும் ஏழைகள் நலன் சார்ந்த நிறுவனங்களை உருவாக்கி பேணி வளர்த்தும் நிலைத்த வாழ்வாதார வாய்ப்புகளை ஏற்படுத்துகிறது.

இத்துறையின் செயல்பாடு வேளாண்மைத் துறை, கால்நடைத் துறை, தோட்டக்கலைத் துறை, மீன்வளத் துறை, சுகாதாரத் துறை, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை போன்ற பல துறைகளின் திட்டங்கள் மற்றும் செயல்பாடுகளோடு பின்னி பிணைந்துள்ளது.

ஆகையால் சமூகத்தில் நல்லதொரு தாக்கத்தை ஏற்படுத்த ஊராட்சி அமைப்புகளின் துணை கொண்டு மேற்படி அனைத்து துறைகளுடனும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை இணக்கமாக செயல்படவேண்டிய அவசியம் உள்ளது. கிராம ஊராட்சிகளில் உள்ள விவசாயிகளுக்கு மிகுந்த நன்மை பயக்கும் வகையில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் மற்றும் அண்ணா மறுமலர்ச்சி திட்டம்–II ஆகியவற்றின் கூறுகளுடன் வேளாண்மை மற்றும் அதனைச் சார்ந்த துறைகளின் திட்டங்களையும் இணைத்து ஒன்றுக்கொன்று சிறப்பாகவும் கூடுதலாகவும் அமைந்து கலைஞரின் அனைத்து கிராம வேளாண் வளர்ச்சித் திட்டம் (KAVIADP) செயல்படுத்தப்படும்.

ஊரக வளர்ச்சித் துறையின் பல்வேறு அங்கங்களுக்கு இடையேயான இணைந்த செயல்பாட்டை மேம்படுத்த மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் உள்ள முன்னுரிமைகள் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு

நிறுவனத்தின் மூலம் செயல்படுத்தப்படும் வறுமை ஒழிப்பு மற்றும் வாழ்வாதார மேம்பாட்டுத் திட்டங்களுக்கு ஏற்ப மறுசீரமைக்கப்படும். சிறு மற்றும் குறு விவசாயிகளின் விவசாய நிலங்களை மேம்படுத்துதல் மற்றும் தோட்டக்கலைப் பயிர்களை ஊக்குவிப்பதன் மூலம் தனிநபர் சொத்து உருவாக்குவதோடு, விவசாயிகளின் வருவாயை பெருக்கவும், நிலையான வாழ்வாதாரத்தை ஏற்படுத்தவும் முக்கியத்துவம் அளிக்கப்படும். நீர் சேமிப்பு, நீர் நிலைகளை பாதுகாத்தல் மற்றும் மழைநீர் சேகரிப்பு ஆகியவை ஒரு இயக்கமாக முழு வீச்சில் தொடர்ந்து இவ்வாண்டில் செயல்படுத்தப்படும்.

ஊரகப் பகுதி மக்களுக்கு எந்த ஒரு திட்டத்தையும் கொண்டு செல்வதில் ஊராட்சி நிறுவனங்கள், குறிப்பாக கிராம ஊராட்சிகளும், சமுதாயம் சார்ந்த அமைப்புகளும் வலிமையாக செயல்படக்கூடிய ஆற்றல் கொண்டவையாக இருக்கிறது. நல்ல பயனளிக்கக்கூடிய திட்டமிடல் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள், சமுதாய வளப்

பயிற்றுநர்களின் திறனை வளர்ப்பதன் மூலம் குழந்தைகள் ஊட்டச்சத்து குறைபாடு, இரத்த சோகை மற்றும் குழந்தை திருமணம் போன்ற சவாலான குறிகாட்டிகளை குறைத்து, நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகளை உள்ளூர்மயமாக்கும் சவாலை எதிர்கொள்ளலாம்.

கிராமப்புறங்களில் உள்ள மக்களை வருவாய் ஈட்டும் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தியதன் விளைவாக அவர்களின் வாங்கும் திறன் அதிகரித்து, வறுமை ஒழிப்பில் சுய உதவிக் குழு இயக்கம் முக்கிய பங்காற்றியுள்ளது. பெண்களை தாக்கும் சமூக பிரச்சனைகளை புதிய உத்வேகத்துடன் எதிர்கொள்ள தேவையான நம்பிக்கையும், உரிமையும் அவர்களுக்கு அளிக்கப்படும். கிராம ஊராட்சி மற்றும் வட்டார அளவிலான சுய உதவிக் குழு கூட்டமைப்புகளை வலுப்படுத்தி, திட்ட நிபுணர்கள் மற்றும் ஆலோசகர்கள் உதவியுடன் அவ்வமைப்புகள் உயர்நிலை நிறுவனங்களாக மாற்றம் அடைய சீரிய முயற்சியை

மேற்கொள்வதில் வாழ்வாதார இயக்கம் தன்னுடைய முழு கவனத்தை செலுத்தும்.

இத்துறை, மின்ஆளுமை செயலாக்கத்தைக் கொண்டு, புதிய முயற்சிகளின் மூலம், பொது சேவைகள் வழங்குதல், வணிக முறைகளை எளிதாக்குதல், பல்வேறு வரிகளை செலுத்துதல் போன்றவற்றை கிராம ஊராட்சிகளில் அறிமுகப்படுத்தவுள்ளது. கிராம ஊராட்சித் தலைவர்கள், முன்மாதிரி கிராமங்களை உருவாக்கி, நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகளை உள்ளூர்மயமாக்கிட எடுக்கும் முயற்சிகளை அங்கீகரித்து உரிய வெகுமதி அளிக்கப்படும். சிறந்த தொழில்முறை பணியாளர்களையும், பெருவாரியான மக்கள் பிரதிநிதிகளையும் கொண்டு ஊரகப் பகுதி மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த இத்துறை ஒருங்கிணைந்த முயற்சிகளை மேற்கொள்ளும்.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, **மாண்புமிகு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களின்** சீரிய தலைமையின் கீழ் தனது

செயல்திட்டத்தை புதுப்பித்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தொலைநோக்கான தமிழ்நாட்டை அனைத்து நிலைகளிலும் முதன்மை மாநிலம் என்ற நிலையை அடைய பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை முன்னெடுத்துச் செல்லும்.

**கே.ஆர். பெரியகருப்பன்**
**ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்**
**தமிழ்நாடு அரசு**




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மதுரை மாவட்டம், பாப்பாபட்டி ஊராட்சியில் 02.10.2021 அன்று நடைபெற்ற கிராமசபைக் கூட்டத்தில் கலந்து கொண்டார்கள்

## மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களின் கள ஆய்வு



பனை விதைகள் நடுதல்
கோட்டையிருப்பு ஊராட்சி, சிவகங்கை மாவட்டம்




குடிநீர் பணிகள் ஆய்வு
செரப்பணஞ்சேரி ஊராட்சி, காஞ்சிபுரம் மாவட்டம்

## ஜல் ஜீவன் இயக்கத்தின் கீழ் குடிநீர் வழங்கல் பணிகள்



மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி,
கடங்கநேரி ஊராட்சி,
தென்காசி மாவட்டம்







வீட்டுக் குடிநீர் இணைப்புகள்

**மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட அங்கன்வாடி கட்டடம்**



மேல ஆம்பூர் ஊராட்சி, தென்காசி மாவட்டம்

**பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பள்ளிக்கட்டடம்**




பரளி ஊராட்சி, நாமக்கல் மாவட்டம்

## மாநில அரசின் திட்டங்கள்



ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய்த் திட்டத்தின் கீழ்
ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அலுவலக வளாகம், தேனி மாவட்டம்



சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ்
கட்டப்பட்ட பயணியர் நிழற்குடை, புதுமல்லவாடி ஊராட்சி,
திருவண்ணாமலை மாவட்டம்




புதுப்பிக்கப்பட்ட அனைத்து கிராம அண்ணா
மறுமலர்ச்சித் திட்ட நூலகம்,
மண்ணிவாக்கம் ஊராட்சி, செங்கல்பட்டு மாவட்டம்

## மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் நீர்வளப் பாதுகாப்பு பணிகள்



பண்ணைக் குட்டை, சேரங்கோடு ஊராட்சி,
நீலகிரி மாவட்டம்



சிமெண்ட் கான்கிரீட் தடுப்பணை
தளவாய்பட்டினம் ஊராட்சி, திருப்பூர் மாவட்டம்

# பாலங்கள் மற்றும் சாலைகள்



நபார்டு திட்டத்தின் கீழ் கல்பூண்டி முதல் லாடப்பாடி கிராமம்
இணைப்பு பாலம், திருவண்ணாமலை மாவட்டம்



நபார்டு திட்டத்தின் கீழ்செம்பியவரம்பல் முதல்
கிருஷ்ணாபுரம் சாலை வரை இணைப்பு பாலம், தஞ்சாவூர் மாவட்டம்




பிரதம மந்திரி கிராமச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ்
சிட்டம்பாளையம் சாலை முதல் துடுப்பதி வரை இணைப்புச் சாலை,
ஈரோடு மாவட்டம்




ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் நிதித் திட்டத்தின் கீழ்
கிடையூர் முதல் மேட்டூர் வரை இணைப்புச் சாலை,
சேலம் மாவட்டம்


## மாவட்ட வாரியான ஊராட்சி ஒன்றியங்களின் எண்ணிக்கை




## மாவட்ட வாரியான கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை





## மக்கள் தொகை அடிப்படையில் கிராம ஊராட்சிகளின் வகைப்பாடு
## (மக்கள் தொகைக் கணக்கெடுப்பு – 2011)





# 2019 & 2021 ஆம் ஆண்டில் நடந்த ஊரக உள்ளாட்சித் தேர்தலில் மகளிரின் பிரதிநிதித்துவம்


















அனைத்து கிராம அண்ணா
மறுமலர்ச்சி திட்டம் - II
2021-22க்கான கிராம ஊராட்சிகள்
திருவள்ளூர்
113
சென்னை
NA
ராணிப்பேட்டை
60
வேலூர்
48
காஞ்சிபுரம்
54
கிருஷ்ணகிரி
86
திருப்பத்தூர்
53
திருவண்ணாமலை
167
செங்கல்பட்டு
70
தருமபுரி
60
விழுப்புரம்
136
கள்ளக்குறிச்சி
80
சேலம்
99
ஈரோடு
61
நீலகிரி
11
கடலூர்
134
நாமக்கல்
69
பெரம்பலூர்
25
அரியலூர்
40
மயிலாடுதுறை
50
கோயம்புத்தூர்
47
திருப்பூர்
63
கரூர்
46
திருச்சிராப்பள்ளி
82
தஞ்சாவூர்
119
திருவாரூர்
84
நாகப்பட்டினம்
41
திண்டுக்கல்
70
புதுக்கோட்டை
107
தேனி
29
மதுரை
85
சிவகங்கை
92
விருதுநகர்
92
ராமநாதபுரம்
89
தென்காசி
47
தூத்துக்குடி
80
திருநெல்வேலி
47
கன்னியாகுமரி
21


அனைத்து கிராம அண்ணா
மறுமலர்ச்சி திட்டம் - II
2022-23க்கான கிராம ஊராட்சிகள்
திருவள்ளூர்
108
சென்னை
NA
ராணிப்பேட்டை
57
வேலூர்
52
காஞ்சிபுரம்
55
கிருஷ்ணகிரி
63
திருப்பத்தூர்
41
திருவண்ணாமலை
178
செங்கல்பட்டு
74
தருமபுரி
49
விழுப்புரம்
143
கள்ளக்குறிச்சி
91
சேலம்
73
ஈரோடு
43
நீலகிரி
7
கடலூர்
138
நாமக்கல்
65
பெரம்பலூர்
25
அரியலூர்
40
மயிலாடுதுறை
47
கோயம்புத்தூர்
46
திருப்பூர்
55
கரூர்
29
திருச்சிராப்பள்ளி
85
தஞ்சாவூர்
122
திருவாரூர்
89
நாகப்பட்டினம்
39
திண்டுக்கல்
60
புதுக்கோட்டை
98
தேனி
28
மதுரை
85
சிவகங்கை
89
விருதுநகர்
94
ராமநாதபுரம்
86
தென்காசி
42
தூத்துக்குடி
84
திருநெல்வேலி
44
கன்னியாகுமரி
20




அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் – II இன் கீழ்
கிராம ஊராட்சிகளுக்கு சிறப்பு நிதி ஒதுக்கீடு
கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை
6000
5000
4000
3000
2000
1000
0
2012
4901
2643
1312
1046
385
226
35-40 இலட்சம்
40-45 இலட்சம்
45-50 இலட்சம்
50-55 இலட்சம்
55-65 இலட்சம்
65-75 இலட்சம்
75 இலட்சம் -2.75 கோடி
நிதி ஒதுக்கீட்டு வரம்பு

## பிரதம மந்திரி குடியிருப்பு திட்டம் (ஊரகம்)

**அனுமதி ஆணை வழங்கப்பட்ட வீடுகளின் விவரம்**



## மாவட்ட வாரியான சுய உதவிக் குழுக்களின் விபரம் 31.03.2022 வரை



# தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்



சுய உதவிக் குழு
உறுப்பினர்களுக்கான பயிற்சி



ஊராட்சி அளவிலான
கூட்டமைப்பிற்கான
பெருங்கடன் வழங்குதல்



இயற்கை விவசாயம்



பண்ணை சாரா தொழிலில்
ஈடுபட்டுள்ள சுய உதவிக் குழு
(மண்பாண்டம்)



சுய உதவிக் குழுக்களுக்கான
ஊட்டச்சத்து விழிப்புணர்வு நிகழ்ச்சி



DDUGKY மூலம்
இளைஞர் திறன் பயிற்சி

# வாழ்ந்து காட்டுவோம் திட்டம்



மக்கள் பங்கேற்புடன் கூடிய
வளர்ச்சித் திட்டம் தயாரித்தல்



உற்பத்தியாளர் குழு
காய்கறி சாகுபடி



தொழில் குழு
சானிடரி நாப்கின் உற்பத்தி



உற்பத்தியாளர் கூட்டமைப்பு
மீன் விற்பனை



சமுதாயத் திறன் பள்ளி
பனை ஓலைப் பொருட்கள்



சமுதாய பண்ணைப் பள்ளி
பண்ணை இயந்திரப் பயிற்சி

# தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கம்



சுய உதவிக் குழு
உறுப்பினர்களுக்கான
திறன் மேம்பாடு



திருநங்கையரின்
தொழில் நிறுவனம்



தனிநபர்
தொழில் நிறுவனம்




சுய உதவிக் குழுவினரின்
குறு நிறுவனம் – ஆடை
உற்பத்தி நிலையம்



சுய உதவிக் குழுவினரின்
நுண் நிறுவனம்




இளைஞர்களுக்கு JCB பயிற்சி
(ESTP)


சுய உதவிக்குழு வங்கி கடன் - வருட வாரியான சாதனை விவரம்
ரூ கோடியில்
₹ 25,000.00
₹ 20,000.00
₹ 15,000.00
₹ 10,000.00
₹ 5,000.00
₹ 0.00
₹ 4,030.30
₹ 4,031.94
₹ 6,035.56
₹ 6,171.74
₹ 6,191.49
₹ 6,387.52
₹ 8,331.73
₹ 11,448.99
₹ 13,300.64
₹ 18,885.98
₹ 21,392.52
2011-2012
2012-2013
2013-2014
2014-2015
2015-2016
2016-2017
2017-2018
2018-2019
2019-2020
2020-2021
2021-22
வருடம்